Koviloor Digital Library

பி. ஸ்ரீ.

ஆழ்வார்கள் வரலாறு

4

Acc. No } 26734
222

Koviloor Digital Library

Koviloor Digital Library

4-2

ஆழ்வார்கள் வரலாறு

(நான்காம் பாகம்)

தொண்டரடிப் பொடியாழ்வார்

பி.ஸ்ரீ

KOVILOOR ANDAVAR LIBRARY. KOVILOOR
A. No. 26734

ஜெனரல் பப்ளிஷர்ஸ்
ப. எண். 244, ராமகிருஷ்ணா மடம் சாலை
மயிலாப்பூர், சென்னை - 600 004

Koviloor Digital Library

உரிமைப் பதிவு
முதற் பதிப்பு - 2002
இரண்டாம் பதிப்பு - 2010
மூன்றாம் பதிப்பு - 2013

© பதிப்பாளர்

விலை: ரூ. 70-00

Typesetting : Amaravathi & Co, Chennai
Printed at : Logha Offset Printers, Chennai - 14

Koviloor Digital Library 4 - 2

முன்னுரை

நாட்டிலும் உலகத்திலும் கிளர்ச்சிகளுக்குக் குறைவில்லை. அரசியல் கிளர்ச்சி, சீர்திருத்தக் கிளர்ச்சி, பொருளாதாரக் கிளர்ச்சி, இனக்கிளர்ச்சி, மொழிக்கிளர்ச்சி, பகுத்தறிவுக் கிளர்ச்சி - இப்படி எத்தனையோ கிளர்ச்சிகள்.

கிளர்ச்சி போதாது, புரட்சி வேண்டும் என்று கூறிப் புதிய புதிய இயக்கங்களில் ஈடுபடுவோரும் உண்டு. ஆனால் உண்மையான கிளர்ச்சிகளுக்கும் புரட்சிகளுக்கும் அடிப்படையாக இருப்பது உணர்ச்சிதான் என்பதை நாம் மறந்து விடுகிறோம்.

சுமார் 1,200 ஆண்டுகளுக்கு முன் ஒரு புதுஉணர்ச்சி - பக்தி பரவசமான புதுமைப் பெரு உணர்ச்சி - திருவேங்கடத்திலிருந்து தென்குமரி வரை வேகமாகப் பரவியது. இந்த உணர்ச்சி வெள்ளத்தை ஏரிகளாகத் தேக்கி, மெய்ம்மையாம் உய்வைச் செய்து, மேன்மக்களாகத் தமிழ் மக்களை வாழ்வித்தவர்கள் ஆழ்வார்களும் நாயன்மார்களும் ஆவர்.

இவர்கள் வளர்த்தது பக்திக் கிளர்ச்சி மட்டும் அல்ல, பக்திப் பெரும் புரட்சியுந்தான். இதனால் ஆயிரக்கணக்காகவும் லட்சக் கணக்காகவும் மக்கள் புது உணர்ச்சி பெற்றுப் புதுவாழ்வு பெற்றார்கள்.

Koviloor Digital Library

பறவைகள் காலையில் உத்ஸாகமாகப் பாடிக் கதிரவனை வரவேற்பதுபோல், தமிழ் நாட்டுத் தொண்டர்கள் ஞானசூரியனாகிய இறைவனைப் பாடிப் பரவசமானார்கள். பிறரை யும் பக்திப் பரவசமடையச் செய்தார்கள்.

இவர்களுடைய பாடல் பணிகளால் ஓர் அபூர்வமான கோயில் நாகரிகம் இந்நாட்டிலே உருவாகித் திகழ்ந்து வடநாட்டிலும் ஒளிவீச லாயிற்று, இது தமிழ் நாகரிகத்திற்கே ஒரு புதிய ஒளியை, அழகை, உயிரை அளித்தது.

பக்தர்கள் கூடிக்கூடி ஆழ்வார் நாயன்மார் அருட்பாடல்களைக் கோவில்களில் பாடினார் கள்; ஆடினார்கள்; ஆனந்தம் அடைந்தார்கள். பண்டைத் தமிழ் நாகரிகமும் பண்பாடும் மறுமலர்ச்சி பெற்றன; ஒரு புதிய விழிப்பை அடைந்தன.

ஆழ்வார்களில் ஒருவர்;

'எம்பெரு மான்! பள்ளி யெழுந்தரு ளாயே'

என்று ஸ்ரீரங்கநாதனுக்குப் பள்ளியெழுச்சி பாடினார். இவரைத் தொண்டரடிப் பொடியாழ் வார் என்று தமிழகம் போற்றுகிறது.

ஒரு ராஜாவைத் துயில் உணர்த்துவதுபோல் ராஜாதி ராஜனாகிய ஸ்ரீரங்கநாதனைத் துயில் உணர்த்துகிறார் தொண்டரடிப் பொடியாழ்வார். சிவநேசச் செல்வரான மாணிக்கவாசக சுவாமிகள் சிவபெருமானுக்குப் பள்ளியெழுச்சி பாடியிருக் கிறார்.

இந்தத் திருப்பள்ளியெழுச்சிப் பாடல் களுக்குத் தமிழிலக்கியத்தில் ஒரு முக்கிய

Koviloor Digital Library

ஸ்தானம் உண்டு. இசைத் தமிழ்ச் சோலையிலும் அபூர்வமான பூங்கொத்துகள் இவை.

இறைவனுக்குத் திருப்பள்ளியெழுச்சி பாடிய இத்தொண்டர்களும் மற்றத் தொண்டர்களும் தமிழகத்தையே நித்திரையிலிருந்து விழிக்கச் செய்தார்கள் என்பது திண்ணம். சமயத்துறையில் மட்டுமல்ல; கலைத்துறையிலும் வாழ்க்கையில் வேறு துறைகளிலும் இவர்கள் ஒரு புதிய விழிப்பிற்குக் காரணமாயினர்.

இந்தப் பக்தமணிகளில், தொண்டரடிப் பொடியாழ்வாரை இன்றைய வாசகர்களுக்கு அறிமுகப்படுத்துவது இப்புத்தகத்தின் நோக்கம். இவர் 'திருப்பள்ளியெழுச்சி'யோடு 'திருமாலை' என்ற ஓர் அருமையான பிரபந்தத்தையும் அருளிச் செய்திருக்கிறார்.

இவரது பக்திப் பாடல்களில், அந்த அதிசயமான இதயத்திலே அன்று விசித்திரமாகக் கொந்தளித்தெழுந்த அதே பக்திவேகத்தை இன்றும் கண்டுகொள்ளலாம். அந்த அதிசய பக்தி ஆவேசத்தைக் கொண்டு இன்றைத் தமிழர்களையும் மெள்ள மெள்ள வசப்படுத்தி ஒரு புதிய உணர்ச்சியும் விழிப்பும் பெறுமாறு செய்ய முடியும் என்பது என் நம்பிக்கை.

பி.ஸ்ரீ.

Koviloor Digital Library

பொருளடக்கம்

			பக்கம்
1.	வேஷமும் வேஷநெறியும்	...	11
2.	பூங்காவில் புனிதர்	...	17
3.	சபதம் நிறைவேறியது	...	29
4.	தொண்டுக்காதலின் வெற்றி	...	34
5.	வாக்கும் வரலாறும்	...	41
6.	தம்பிரான் தோழர்கள்	...	46
7.	இவர் சூட்டிய பாமாலை	...	50
8.	இவர் கண்ட அழகிய மணவாளன்	...	58
9.	இவர் குறிப்பிடும் கதைகள்	...	76
10.	பக்தி வாழ்வின் ஊன்றுகோல்	...	86
11.	வாழும் சோம்பர்	...	104
12.	தொண்டக்குலம் ஒன்றே	...	118
13.	அநுபூதிச் செல்வம்	...	127
14.	இறைவனைத் துயிலெழுப்பியது	...	141
15.	முப்பெருந் தொண்டு	...	146
16.	திருப்பள்ளியெழுச்சி	...	150

Koviloor Digital Library

சிறப்புரை

ஸ்ரீமத் பி.ஸ்ரீ. ஆசார்யரவர்கள் 'துயில் எழுப்பிய தொண்டர்' என்னுந் தங்கள் நூற்கு முன்னுரை எழுதுமாறு பணித்தார்கள். இது எனக்குக் கிட்டாத பெறும்பேறு. என் பணி மிக எளிது. 'ஸ்ரீமத் பி.ஸ்ரீ. அவர்களை அறியாத தமிழ் வாசகர்கள் இல்லை. ஆகலின், அவர்களை அறிமுகப்படுத்த வேண்டுதல் இல்லை; அவர்கள் நூற்கு வேறொரு முன்னுரை அவசியமன்று' என்று எழுதின் என் பணி பூர்த்தியாயிற்று. ஆயினும், அவர்கள் பணித்ததனால் இந்நூலின் பொருள்களுள் ஒரு சிலவற்றை ஈண்டு எழுதுதல் அமைதியாகும் என்று கருதுகின்றேன்.

ஸ்ரீமத் பி.ஸ்ரீ. அவர்கள் செய்யுட் பொருளை விளக்குவது ஒரு தனிமுறை. முதலில் செய்யுட் பொருளைத் தெளிவாகக் கதைபோல் எழுதி, பின்னர்ச் செய்யுளைக் குறிப்பார்கள். (அருஞ்சொற் பொருள் அடுத்துத் தரப்படும்.) அதனால், அது முன்னர்ப் படித்த செய்யுளே போன்று எளிதில் பொருள் 'விளங்கிவிடும்.

இந்நூலில் முதற்கண் 5 பகுதிகளில் ஆழ்வார் வரலாறு ஆராயப்பட்டுள்ளது; மேல் 9 பகுதிகளில் திருமாலையின் பொருள் விரிவாக விளக்கப்பட்டுளது. பாசுரங்களின் சிறந்த பொருள்களையும் ஆழ்ந்த கருத்துக்களையும் வியாக்யானத்தினால்தான் அறிய இயலும். ஆசார்யரவர்கள் வியாக்யான ரத்னாகரத்தில் மூழ்கியவர்களாகலின் அதில் உள்ள உயரிய மணிகளை எடுத்து வாசகர்கட்கு அளித்திருக்கின்றார்கள். உதாரணமாக: முதற் பாசுரத்தின் முதலில் உள்ள, 'காவலில் புலனை வைத்து' என்பதற்கு எழுதியிருக்கும் பொருளைக் காண்க. இப்பொருளினால்தான் திருநாமத்தின் பிரபாவம்

Koviloor Digital Library

நன்கு விளங்குகின்றது. இனி, இரண்டாம் பாட்டில், 'ஆயர்தம் கொழுந்தே' என்பதற்கு எழுதியிருக்கும் உரை பாராட்டுதற்கு உரியது. மரத்துக்குக் கேடு உறுமாயின், முதலில் வாடுவது கொழுந்து; ஆயின் செழிப்பு உறுமாயின், அதுதான் கடைசியில் செழிப்புறும். கண்ணபிரான் ஆயர்கள் திறத்தில் கொழுந்துபோல் உள்ளான் என்றல் எத்துணை அமைதி!

இனி, 'அமரஓர் அங்கமாறும்' என்னும் பாசுரத்துக்கும் 'காம்பறத் தலைசிரைத்துன் கடைத்தலை யிருந்து வாழுஞ் சோம்பர்' என்பதற்கும் வியாக்யானப் பொருளை விளக்கி எழுதியிருப்பது படித்து இன்புறத்தக்கது.

'கைங்கர்யமே புருஷார்த்தம்' என்பது வைஷ்ணவ சமயத்தின் முக்கியக் கொள்கை. ஆழ்வார், 'தொண்டு பூண்டு அமுதம் உண்ணாத் தொழும்பர் சோறு உகக்குமாறே!' என்று உளம் நொந்து உரைத்திருக்கின்றார். கைங்கர்யத்தில் சிறியது, பெரியது என்றில்லை; எண்ணமே முக்கியம் என்பதற்குத் திருவணை கட்டும்போது அணில் செய்த தொண்டு ஏற்ற உதாரணமாகும். அதனை ஆசார்யரவர்கள் விரிவாக எழுதியிருப்பது பாராட்டற்பாலதே.

இனி, 10, 13-ஆம் பகுதிகளில் தாம் கூறுங் கருத்துக்கட்குக் காந்தியடிகளின் உரைகளையும் செயல்களை யும் ஒப்பிட்டுக் காட்டியிருப்பது வாசகர்களின் உள்ளத்தில் அவற்றை நன்கு நிலைபெறச் செய்யும்.

'தொண்டக்குலம் ஒன்றே' என்னும் பகுதியில் ஆசார்யரவர்கள் எழுதியிருப்பவை வைஷ்ணவ சமயத்தின் சிறந்த கொள்கைகளையும் பரந்த நோக்கத்தையும் நன்கு உணர்த்துபவை. இப்பகுதி இந்நூலில் நடுநாயகமாய் விளங்குவது எனலாம். 'திருமாலை'யின் ஆராய்ச்சியா யிருக்கும் பகுதிகளெல்லாம் வாசகர்கட்குப் புதிய உணர்ச்சியை உண்டாக்கி, ஏனைய பிரபந்தங்களையும் படித்தற்கு ஊக்கம் அளிக்கும் என்பது உறுதி.

Koviloor Digital Library

இனி அறிதுயில் அமரும் இறைவனைத் துயிலுணர்த்துதல் என் எனின், விபவாவதாரத்தில் ஸ்ரீராமபிரானை விசுவாமித்திரர் துயிலுணர்த்தியதுபோன்று அர்ச்சாவதாரத்தில் இவ்வாழ்வார் அரங்கநாதனைத் துயிலுணர்த்தினார் என்பர். பக்தியின் செயலுக்கு விதி ஏது?

திருவரங்கப் பெருமானைத் தவிர வேறு எந்தத் திவ்ய தேசத்துப் பெருமானையும் பாடாத ஆழ்வார் இவர் ஒருவரே. இவர் அரங்கநாதர் திருவுருவில் ஈடுபட்டிருக்கும் நிலைமையை,

'கடல்நிறக் கடவுள் எந்தை அரவணைத் துயிலுமா கண்டு
உடல்எனக்கு உருகு மாலோ! என்செய்கேன்!' (19)

'கனிஇருந் தனைய செவ்வாய்க் கண்ணனைக் கண்ட கண்கள்
பனிஅரும்(பு) உதிரு மாலோ! என்செய்கேன்!' (18)

'பாயும் நீர் அரங்கந் தன்னுள் பாம்பணைப் பள்ளி கொண்ட
மாயனார் திருநன் மார்வும் மரகத உருவும் தோளும்
தூயதா மரைக் கண்களும் துவர்இதழ்ப் பவள வாயும்
ஆயசீர் முடியும் தேசும் அடிய ரோர்க்(கு) அகல லாமே!' (20)

என்பன முதலிய செய்யுட்களில் வெளியிட்டுள்ளார்.

இவர், அடியார்களிடத்தில் தமக்கு உள்ள பக்தியினால் தம் திருநாமத்தையே தொண்டரடிப் பொடி என்று வைத்துக் கொண்டுள்ளார். 'தொண்டரடிப் பொடி என்னும் அடியனை' என்று இவர் தாமே கூறியிருப்பது காண்க.

'பழுதிலா வொழுகலாற்று' *(42)*, 'அமர ஓர் அங்கம் ஆறும்' *(43)* என்னுஞ் செய்யுட்களில் அடியார்களின் ப்ரபாவத்தை அருளிச் செய்திருப்பது அறிதற்பாலது.

இவ்வாழ்வார் 'துவர்த்த செவ்வாயினார்க்கே துவக்கறத் துரிசனானேன்' என்றும் பிறவாறும் தம்மைப்பற்றிக் கூறியிருப்பவற்றைச் சாதாரண மக்களின் வாழ்க்கையில்

Koviloor Digital Library

நிகழுங் குற்றங்களைத் தம்மேல் ஏற்றிக் கூறியுள்ளார் என்று கொள்ளுதல் அமைதி.

கலியுகத்தில் நாமசங்கீர்த்தனமே முத்தி தர வல்லது என்று கூறுவர். திருநாமத்தின் மஹிமையை இவ்வாழ்வார் முதற் பாசுரத்திலே அருளிச் செய்திருக்கின்றார். சுலபமான உபாயமாகிய பக்தியை மேற்கொள்ளுதற்குத் 'திருமாலை' உரிய உதவி புரிவதொன்றாகும் என்றலில் ஐயமில்லை.

இவ்வாழ்வார், 'மனிசரெல்லாம் அரங்கம் என்றழைப் பாராகில், நரகமெல்லாம் புல்லெழுந் தொழியும்' என்று அறிவுறுத்துகின்றார். நம்மாழ்வார், 'ஒக்கத் தொழுகிற்றிராகில் கலியுக மொன்றும் இல்லை' என்று அருளிச் செய்திருக் கின்றார். ஆதலின், மக்கட் சமுதாயம் ஒருங்கே இறைவனைத் துதித்தால் உலகில் உள்ள தீமைகளெல்லாம் ஒழிந்துவிடும். இதனானே, 'சேரவாரும் செகத்தீரே' என்று பிறரும் அழைக்கின்றனர். இது கவனித்தற்குரியது.

'திருமாலை'யின் பொருளை அறிதற்கு ஸ்ரீமத் பி.ஸ்ரீ. ஆசார்யரவர்கள் எழுதி உபகரித்துள்ள 'துயிலெழுப்பிய தொண்டர்' என்னும் இந்நூல் சிறந்த கருவியாகும் என்பது ஒருதலை.

திவ்யப்ரபந்தத்தின் செய்பொருளை எல்லாரும் எளிதில் அறியும்படி தெளிவான உரைநடையில் பலநூல்களை இயற்றி உதவியிருக்கும் ஸ்ரீமத் பி.ஸ்ரீ. ஆசார்யரவர்கட்குச் சிறப்பாக வைஷ்ணவ உலகமும் பொதுவாகத் தமிழுலகமும் நன்றிசெலுத்துங் கடப்பாடுடையனவாகும். ஆசார்யரவர்கள் இன்னும் ஒரு நூற்றாண்டு இனிதுவாழப் பல்லாண்டு பாடுவோமாக.

வேங்கடராஜுலு ரெட்டியார்

Koviloor Digital Library

தொண்டரடிப் பொடியாழ்வார்

1. வேஷமும் வேஷநெறியும்

திருவிழா ஒன்றில் ஒரு கோமாளி வேஷக்காரன் மேடையில் ஏறிப் பலவிதமான வேடிக்கைகள் காண்பித்தான். வேடிக்கை பார்த்தவர்களை ஒரே அடியாகச் சிரிக்கச் செய்தது, அவன் பன்றிபோல் குரலெடுத்து உறுமியதுதான்.

'அடடா, அசல் பன்றி கத்துவதுபோல் இருக்கிறதே!' என்று அதிசயித்த மக்கள், ''இன்னும் ஒரு தடவை, இன்னும் ஒரு தடவை'' என்று கூச்சலிட்டு, அவனை அடிக்கடி அப்படிக் கத்தும்படி வற்புறுத்தினார்கள். அப்போது கூட்டத்தில் இருந்த ஒருவன், ''அந்த வேஷக்காரன் கத்துவது அவ்வளவாகப் பன்றி மாதிரி இல்லை, கொஞ்சம் வித்தியாசப்படுகிறது'' என்று சொன்னான்.

''ஏறு மேடை மீது! நீ கத்திக்காட்டு!'' என்ற கூச்சல்கள் எழுந்தன. அவனும் மேடைமீது வந்து, ''நாளை நான் பன்றி யாகக் கத்திக் கோமாளி வேஷக்காரனைத் தோற்கடிப்பேன்'' என்று அறிவித்தான். மக்களுக்கு ஒரே குதூகலம்.

திருவிழா மறுநாளும் தொடர்ந்து நடந்தது. கோமாளி யும் எதிரியும் மேடையில் அமர்ந்தார்கள். கோமாளி வேஷக் காரன் முதலில் பன்றிபோலக் கத்திக் காட்டினான். மக்கள் மிகவும் களிப்புற்றுக் கை தட்டி ஆரவாரம் செய்தார்கள்.

பிறகு வேஷக்காரனுடைய எதிரி எழுந்தான். இவன் தன்மேல் சொக்காய்க்குள்ளே மிகவும் ஜாக்கிரதையாக ஒரு

Koviloor Digital Library

பன்றிக் குட்டியை மறைத்து வைத்திருந்தான். வெளியே யிருந்து பார்த்தவர் ஒருவரும் இதைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

இவன் அவர்களுக்குத் தெரியாமல் தன் கட்டைவிரல் நகத்தால் பன்றியின் காதைத் திருகினான். உடனே அது கத்தத் தொடங்கிவிட்டது.

'இது அவ்வளவு சரியாக இல்லையே!' என்று அபிப் பிராயப்பட்டார்கள் வேடிக்கை பார்த்தவர்கள். சிலர், ''சரியாகவே இல்லை'' என்று கண்டிக்கவும் தொடங்கி விட்டனர்.

வேஷக்காரனின் எதிரி சிரித்துக்கொண்டே, ''ஓஹோ, எவ்வளவு சரியாக நீங்கள் தீர்ப்பு வழங்கிவிட்டீர்கள்! யார் சரியாகப் பன்றிபோல் கத்தவில்லை யென்று குற்றஞ் சாட்டுகிறீர்களோ, அந்த ஆசாமியை இதோ பாருங்கள்!'' என்று மேல் சொக்காய்க்குள்ளே இருந்த பன்றிக்குட்டியை வெளியே எடுத்துக் காட்டினான்.

இந்தக் கதையில் வரும் வேஷக்காரனைப்போல் தொண்டர் வேஷம் பூண்டவர்களுக்கும் உண்மைத் தொண்டர் களைக் காட்டிலும் மதிப்பு ஏற்படக்கூடும். அதனால் தொண்டர்களுக்குரிய வேஷங்களை அணிந்துகொள்வோரின் கூட்டம் பெருகுவதும் உண்டு. வேஷக்காரர்களும் மோசக் காரர்களும் அதிகரிப்பதால் நாளடைவில் உண்மையான பக்தர்களிடத்திலும் நம்பிக்கை குறைந்துவிடுகிறது என்பதும் சரியே.

வேஷக்காரர்களின் நடிப்புத்திறமை கண்டு அதிசயிப் பவர்கள் உண்மையான பக்தர்களைக் குறித்து, 'இவர்களுக்கு அவ்வளவாகத் தொண்டர் கோலம் பொருந்த வில்லை' என்று சொல்லிவிட்டாலும் நாம் அதிசயப்படுவதற்கில்லை. ஆனால் இது குறித்து உண்மைத் தொண்டர்கள் கவலைப்படுவதே யில்லை.

Koviloor Digital Library

தொண்டரடிப் பொடியாழ்வாரும், ''நான் ஒரு சமயம் தொண்டனுக்கு உரிய கோலம் பூண்டு நடித்துப் பார்த்தேன்'' என்று கூறுகிறாரென்றால் அது அதிசயமாயிருக்கிறதல்லவா?

கள்ளத்தேன் நானும்
தொண்டாய்த் தொண்டுக்கே
கோலம் பூண்டு

என்று பாடுகிறார்.

''கள்ளனாகிய அடியேனும் உன் தொண்டனாகப் பேர்பெறவிரும்பித் தொண்டனுக்குரிய வேஷநெறி நில்லாமல் வேஷங்களை மட்டும் பூண்டிருந்தேன்'' என்று கூறுகிறவர், 'இவர் பரம பாகவதர், பரமபக்தர்' என்று கண்டவர்களெல்லாம் புகழ்ந்தது கண்டு பூரித்துப் போகவில்லையாம்.

'இன்னார் இன்னது நினைக்கிறார் என்று எல்லாருடைய நினைவையும் அவரவர் நெஞ்சினுள்ளே இருந்து அறிந்து கொண்டிருக்கும் இறைவன் தம்மையும் அறிந்து கொள்வானே!' என்றுதான் நினைத்துப் பார்த்தாராம்.

உடனே, ''நமது கள்ளவேஷம் வெளிப்படையாகி விட்டதே!'' என்று வெட்கமடைந்தாராம். வெட்கமடைந்ததும், சிரித்தாராம். ''எனக்குள்ளேயே நான் சிரித்துக் கொண்டேன்'' என்கிறார். ''விலா இற்றுப்போகும்படி சிரித்துவிட்டேன்'' என்கிறார்:

கள்ளத்தேன் நானும்
தொண்டாய்த் தொண்டுக்கே
கோலம் பூண்டு,
'உள்ளுவார் உள்ளிற்
றெல்லாம் உடன்இருந்(து)
அறிதி!' என்று
வெள்கிப்போய், என்னுள்
ளேநான் விலவறச்
சிரித்திட் டேனே.

Koviloor Digital Library

(உள்குவார் - நினைப்பவர். உள்கிற்று - நினைத்தது. அறிதி - அறிவாய். வெள்கி - வெட்கமடைந்து. விலவற - விலா அற்றுப் போகும்படி.)

நாட்டார் அறியாமல் பகட்டி நமது கள்ளத்தை மறைத்துக் கொள்ளலாம்; ஆனால் உடன் இருந்து அறியும் கள்வனை ஏமாற்ற முடியுமா? இந்த் நினைப்பு வெட்கத்தையும் சிரிப்பையும் ஒருங்கே விளைத்துவிட்டதாம். சிரிப்பானது பெருஞ் சிரிப்பாகி முடிவில் தம்மைத் திருத்திவிட்டது என்கிறார்.

இந்தத் தொண்டரடிப்பொடியாழ்வாரைப்போல் சிவநேசச் செல்வரான திருநாவுக்கரசரும் வேஷதாரித் தொண்டனைக் குறித்துத் தமது சொந்த அநுபவம்போல் ஒரு நிகழ்ச்சியை வெளியிட்டிருக்கிறார்:

கள்ளனேன் கள்ளத்
தொண்டாய்க் காலத்தைக்
கழித்துப் போக்கி,
... ...
... ...
... ...
'உள்குவார் உள்கிற்
றெல்லாம் உடன் இருந்(து)
அறிதி!' என்று
வெள்கினேன்; வெள்கி
நானும் விலாஇறச்
சிரித்திட் டேனே!

அநுபவம் ஒத்திருப்பதுபோல் வாக்கும் ஒத்துப் போவதைக் காண்கிறோம். வேஷதாரித் தொண்டர்களின் நிலையைத் தங்கள் சொந்த அநுபவம்போல் நகைச்சுவை தோன்றப் பாடியும் பரிகசிக்கிறார்கள், இந்த இரு பெருந் தொண்டர்களும் என்று கருதுவதும் பொருத்தமே.

Koviloor Digital Library

உள்ளத்தில் இருந்துகொண்டே எல்லாவற்றையும் இறைவன் அறிந்துகொள்கிறான் என்பதை மாத்திரம் ஆஷாடபூதிகள் அறிந்துகொள்வார்களானால், அவர்கள் வெட்கப்பட்டுத் தங்களைப் பார்த்தே சிரித்துச் சீர்திருந்தி விடுவார்கள் என்பது குறிப்பு. அப்படித் திருந்தாவிட்டால், ''இந்த வேஷக்காரர்களைப் பார்த்து இறைவன் வெட்கப் பட்டுச் சிரித்துக்கொண்டேயிருப்பான்'' என்பர் திருநாவுக்கரசர்:

நெக்கு நெக்கு
நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும்பொன்
னார்சடைப் புண்ணியன்
பொக்கம் மிக்கவர்
பூவும்நீ ரும்கண்டு
நக்கு நிற்பன்
அவர்தமை நாணியே

(நெக்கு - மனம் நெகிழ்ந்து. புக்கு நிற்கும் - பிரவேசித்து நிலைபெற்றிருக்கும். பொன் ஆர்சடைப் புண்ணியன் - பொன் நிறமான சடையை யுடைய புனிதமூர்த்தியான சிவபெருமான். பொக்கம் - வஞ்சனை. நக்கு நிற்பன் - சிரித்துக் கொண்டி ருப்பான்.)

நெறி நிற்க விரும்புவோரை வேஷமும் நெறிப் படுத்துவதுதான். ஆனால் வேஷ நெறி நில்லாதவர்கள் வேஷம் பூண்டு ஒரு பயனும் இல்லை. கள்ளவேஷம் கடவுளை ஏமாற்றிவிடாது.

மக்களை ஏமாற்றலாம்; எல்லா மக்களையும் கொஞ்ச காலம் ஏமாற்றலாம்; சிலரை வெகுகாலம் ஏமாற்றவும் கூடும். எல்லாரையும் எல்லாக் காலத்திலும் ஏமாற்றுவதும், இறை வனை ஏமாற்றப் பார்ப்பதுபோல், இயலாத காரியந்தான்.

'தொண்டு- நெறிதானே முக்கியமானது. அதற்கு ஒரு கோலம் அல்லது வேஷம் எதற்காக?' என்று சிலர் கேட்பதுண்டு. தொண்டரடிப்பொடி யாழ்வார், அப்பர்

Koviloor Digital Library

(திருநாவுக்கரசர்) முதலான தொண்டர்கள், நெறியைப் போற்றியது போல் வேடத்தையும் விரும்பி அணிந்து கொண்டார்கள். போலீஸ் தொழிலுக்கு ஒரு கோலம் அல்லது வேஷம் இருப்பதுபோல் தொண்டுக்கும் இருப்பதில் தவறொன்றும் இல்லையே.

தொண்டரடிப்பொடியாழ்வார் உகந்து பூண்ட கைங்கரியத் திருக்கோலத்தை,

தொடைஒத்த துளவமும்
கூடையும் பொலிந்து
தோன்றிய தோள்தொண்டர்
அடிப்பொடி

(தொடை ஒத்த - ஒழுங்காகத் தொடுக்கப்பட்ட. துளவமும் - துளசிமாலையும். கூடையும் - பூக்குடலையும்.)

என்ற இவரது வாக்கிலேயே காணலாம்.

'இறைவனுடைய அத்தாணிச் சேவகன் அடியேன். கைங்கரியமே எனக்குத் தொழில்' என்று தெரியும்படி இவர் துழாய் மாலையும் கழுத்துமாய், பூக்குடலையும் தோளுமாய்ப் பொலிந்து தோன்றினார். இறைவனுக்குச் சங்கு சக்கரம்போல் இத்தொண்டர் பெருமானுக்குத் துளவமாலையும் பூக் குடலையும் பொலிவு தந்தனவாம்.

ராமன் வனவாசம் செய்யும்போது லட்சுமணன் மண்வெட்டியும் கூடையும் பொலியத் திரிந்து கைங்கரியம் புரிந்தானல்லவா? அப்படியே இவர் தமது கைங்கரியச் சின்னங்களுடன் இறைவனுக்கும் அடியார்களுக்கும் கைங்கரியம் புரிவதிலே கண்ணுங் கருத்துமாயிருந்தார்.

வேடம் இவர் பிடித்த பெருநெறிக்குப் பெருந் தூண்டுகோலாக உதவியது. இவரது பக்திப் பெருநெறியையும் தொண்டு நெறியையும் இவரது வாக்கிலே தேடித் துருவிக் கண்டுகொள்வதற்குமுன், இவரைப் பற்றி வழங்கும் குரு பரம்பரைக் கதைகளைத் தெரிந்துகொள்ள முயல்வோம்.

Koviloor Digital Library

2. பூங்காவில் புனிதர்

காவேரி தீரத்தில் இப்போது ஒரு குக்கிராமமாக இருக்கும் மண்டங்குடி ஒரு காலத்தில் செல்வம் நிறைந்த ஒரு பேரூராக இருந்தது. ரிக்வேதிகளும் யஜுர் வேதிகளும் சாமவேதிகளுமாகப் பிராமணர்கள் எழுநூறு மாளிகைகளில் வசித்து வந்தனர். வேறு வகுப்பினரும் பொருள் வளமும் கலைவளமும் கொழிக்க வாழ்ந்தனர்.

பார்ப்பனருள் தலைவராக விளங்கினார் வேதவிசாரதர் என்பவர். இவரது தவப்புதல்வரான விப்பிரநாராயணர் உபயகாவேரி மத்தியிலுள்ள திருவரங்கத்திலே நந்தவன கைங்கரியம் செய்ய விரும்பினார். இவரே தொண்டரடிப் பொடியாழ்வாராகப் பரிணமித்தவர்.

அரவரசப் பெருஞ்சோதிமேல் அஞ்சனமாலை கிடந்தது போல் அறிதுயில் அமர்ந்து, ஒளிகளுக்கெல்லாம் ஆதாரப் பேரொளியாக விளங்கும் இறைவனைத் திருவரங்கத்திலே தரிசித்ததும், அந்தக் குளிர்ந்த திருமுக மண்டலத்திற்கே விப்பிர நாராயணர் தம் உள்ளத்தைப் பறிகொடுத்துவிட்டார். அழகிய மணவாளன் என்ற அப்பெருமான் தன்னுடைய கண்ணழகு, வாயழகுகளைக் காட்டி, முனிவர்களையும் மோகிப்பிக்கும் அந்த வடிவழகில் தம்மையும் ஈடுபடச் செய்தான் என்பதை இவர் நன்கு உணர்ந்துகொண்டார். எனவே இவர் உள்ளம் இல்லற வாழ்க்கையை விரும்பவில்லை.

அழகனான இறைவனை நறுமணத் திருமாலைகளால் அழகு செய்து பார்க்க ஆசைப்பட்டார். ஒரு பெரிய பூந்தோட்டம் அமைத்து, அதில் விதவிதமான பூஞ்செடிகளை வளர்க்கத் தொடங்கினார். மல்லிகை, முல்லை, இருவாட்சி,

Koviloor Digital Library

பாதிரி, சண்பகம், மகிழம்பூ, பிச்சி முதலான பூக்களால் பொலிந்தது பூந்தோட்டம்.

மா, பலா, மாதுளை, தென்னை, கமுகு முதலான விருட்சங்களும் மலிந்து பூந்தோட்டத்தைப் பூங்காவன மாக்கிவிட்டன. இந்தத் தோட்டத்திலே பூவோடு பூவாக இவரது கவியுள்ளமும் மலர்ச்சி பெற்றதென்று சொல்லலாம்.

பூந்தோட்டம் அமைப்பதையும் பரிபாலிப்பதையும் ஒரு கலையென்றே சொல்லவேண்டும். இந்நாளில் விஞ்ஞான முறையில் பூந்தோட்டங்கள் அமைக்கப்படுகின்றன. தொண்டர்களோ ஆத்மவிஞ்ஞானிகள்; தங்கள் அறிவுத் திறனையும் கலைத்திறனையும் இறைவனுக்கே உதவி, அவனை வழிபடுவதற்காகவே தோட்டப்பணியும் செய்து வந்தனர்.

விப்பிரநாராயணர் பக்தராகவும் பரம ரஸிகராகவும் இருந்ததுபோல் ஒரு தோட்டக் கலைஞரும் ஆகிவிட்டார். இவரது சௌந்தரிய உணர்ச்சி இந்தக் கலைப்பயிற்சியில் மேலும் மேலும் வளர்ந்தோங்கியது. இவரது பேருழைப் பாலும் பெரும் பொறுமையாலும் சிறந்து விளங்கிய பூங்கா, 'தேவலோகத்துக் கற்பகச் சோலைதான் இறங்கி வந்து விட்டதோ, இவர் தவமகிமையால்?' என்று பிரமிக்கும்படி இருந்தது.

வசந்தகாலம்; ஒருநாள் காலைப்பொழுது. அதிசுந்தரி யான ஒரு தாசிப்பெண் - தேவதேவி - உறையூருக்குப் போய்ச் சோழ ராஜசபையில் தன் ஆடல் - பாடல் திறனைக் காட்டிப் பரிசு பெற்றுத் தன் தோழிகளுடனும் தமக்கையுடனும் இந்த வழியாகச் சென்றுகொண்டிருந்தாள். அவள் இந்தப் பூங்கா வனத்தைக் கண்டதும் தன் பல்லக்கிலிருந்து இறங்கித் தமக்கையையும் தோழிகளையும் நோக்கி, ''உள்ளே பிரவேசித்து இந்தச் சோலையின் வளங்களையும் அழகு களையும் சுற்றிப் பார்த்துப் போவோம்'' என்று சொன்னாள்.

Koviloor Digital Library

பிறகு அவர்கள் சாவகாசமாக அங்கும் இங்கும் போய் உள்ளத்தைக் கவர்ந்த பூஞ்செடிகளையும் கொடிகளையும் மரங்களையும் பார்வையிட்டார்கள். பூமரங்களுக்கிடையே பூங்குயில்கள் பாடுவதையும், மயில்கள் ஆடுவதையும், வேறு பறவைகள் செவிக்கு இன்பமாக ஒலிப்பதையும் அநுபவித்தார்கள்.

தேவதேவியின் தோழி ஒருத்தி, ''இந்தப் பூங்கா அழகிய மணவாளப் பெருமானின் அருளையே தாரகமாகப் பெற்றுப் பொலிவுற்றிருக்கிறது. அப்பெருமானது பொன்னடிகளையும் திருமுடியையும் அலங்கரிக்கும் இந்தப் பூக்களின் பாக்கியத்தை என்னென்பது?'' என்றாள்.

தேவதேவி: இந்தப் பூங்காவை இப்படி வளர்த்திருக்கும் பாக்கியசாலி யாரோ! அவருடைய உள்ளம் எவ்வளவு அழகாயிருக்குமோ! அந்த உள்ளழகில் இருந்துதானே இவ்வளவு அழகும் வெளிப்பட்டிருக்கவேண்டும்!

தோழி : என்ன, இங்கே வந்ததும் இப்படி வேதாந்தியாகிவிட்டாய்! வித்து முளைத்துச் செடியாகிப் பக்குவமாகி அரும்பு, மொட்டு, மலர் என்று இப்படி யெல்லாம் வெளிப்பட்டிருப்பதுபோல், அவரும் இந்தப் பூங்காவனத்தில் பணிசெய்து பணிசெய்து பரம ரஸிகராகவும் பரம பக்தராகவும் விளங்குகிறார். அவரைக் குறித்துப் பேசும்போது நீயே வேதாந்தம் பேசுவதென்றால், அந்த வைராக்கிய மூர்த்தியின் வசீகர சக்தியை என்னென்பது?

தேவதேவி : அவரை நாம் பார்க்க முடியாதோ? அவ்வளவு வைராக்கியமா அவருக்கு?

தோழி : நாம் ஏன் பார்க்க முடியாது? இந்தப் பூங்காவின் எப்பகுதியிலாவது பூமரங்களுக்குக் குழிகட்டி நீர் பரிமாறிக் கொண்டிருப்பார். ஆனால் அவர் நம்மை முகமெடுத்துப் பார்த்தால்தானே!

Koviloor Digital Library

தேவதேவி : தோழி இதோ பார்: அந்தப் பூவைக் கண்டதும் வண்டு பறந்து வந்து அதைச் சுற்றி ரீங்காரம் செய்கிறதே! அதோ ஒரு வண்டு அந்தப் பூவின் இதழில் மது அருந்துகிறது; அந்த மகரந்தப் பொடியைத் தன் உடலில் பூசிக்கொள்கிறது. அது இயற்கை. அந்த இயற்கை விதியை எந்தப் பக்தராலும் மீற முடியாது. முனிவரும் மனிதரே; தொண்டரும் மனிதரே!

தோழி : ஆனால் அவர் அழகிய மணவாளன் அருளால் இயற்கைப் பாசங்களைக் கடந்துவிட்டார்.

தேவதேவி : பாசம் கடந்தவர்க்கு இப்பூக்களின் மேல் எவ்வளவு பற்று இருக்கிறது! இவரை ரஸிகரென்றும் சொல்லுகிறாயே! ரஸிகர்களும் கவிகளும் பூவைப் பெண்களோடு இசைத்துப் பேசுவதில் ஒரு தனி ஆனந்தம் பெறுகிறார்களல்லவா? முல்லைப்பூவைப் பார்த்ததும் பூமிதேவியின் புன்சிரிப்பென்று மட்டுமா வருணிக்கிறார்கள்? பெண்களின் முல்லைப் பற்களையும் முல்லைச் சிரிப்பையும் நினைவூட்டிக் கொள்கிறார்களல்லவா? காந்தள் மலர்களைப் பெண்களின் கைகளோடு உவமிக்கிறார்கள். நீலக் குவளை மலர்களைக் கண்கள் என்கிறார்கள். செவ்வாம்பலை இதழ் என்கிறார்கள்.

தோழி : அவருக்கோ, பூத்திருக்கும் பூக்களெல்லாம் அழகிய மணவாளனுடைய அழகுச் சுடர்களையே நினைவூட்டுகின்றன. தாமரையைப் பார்த்ததுமே இறைவனுடைய முகம், கண், கை, கால் எல்லாம் நினைவுக்கு வந்துவிடு கின்றன. அதோ பாரம்மா அந்தத் தருக்களுக்கிடையே அவர் திருவுருவத்தை!

தேவதேவி, பளிச்சென்று, ''தங்கமலர் மேனி'' என்று சற்று உரக்கச் சொல்லிவிட்டாள். அச்சமயம் அங்கே வந்து சேர்ந்த தேவி என்ற தமக்கை, ''அப்படி உரக்கப் பேசாதே! அவர் காதில் விழுந்துவிடப் போகிறது'' என்றாள்.

Koviloor Digital Library

அதற்குத் தோழி, ''நம்மையா அவர் கவனிக்கப் போகிறார்? தாம் உண்டு, தம் பணி உண்டு என்றிருக்கிறார். நாம் இங்கே இருந்து மெல்ல வேறொரு பக்கம் போய் விடுவோம்'' என்றாள்.

ஆனால் அவரே வேறொருபுறமாகத் திரும்பிப் போய்விட்டார். தேவதேவி அவரையும் நன்றாகப் பார்த்து விடவில்லை. எனினும் தமக்கையை நோக்கி, ''அவரைப் பார்த்தால் துறவி போலவா தோன்றுகிறது?'' என்று கேட்டாள்.

அதற்குள் அவர் தூரத்திலே போய்விட்டது கண்டு, இவர்கள் ஒரு மரத்தின் அடியிலே புல்லாந்தரையில் போய் உட்கார்ந்துகொண்டு அந்தச் சோலையின் அழகுகளைப் பார்த்துக் கொண்டே, தொடர்ந்து உரையாடினார்கள். தேவதேவி மறுபடியும் தமக்கையை நோக்கி, ''அக்கா! இந்தச் சிங்காரப் பூங்காவனத்திலே இத்தனை அழகுகளுக்கிடையே அவர் ஒரு பற்றும் இல்லாத நிலையில் காலம் கழிக்க முடியுமா?'' என்று கேட்டாள்.

தேவி : (நகைத்துக் கொண்டே) உனக்கேன் அந்தக் கவலை? அவர் கண்ணுக்கு இந்தச் சிங்காரப் பூங்கா ஒரு பக்திப் பூஞ்சோலைதான். இந்த அழகுகளெல்லாம் ஸர்வாங்க சுந்தரனாகிய அழகிய மாணவாளனுக்கே அர்ப்பணம் என்பது அவர் கொள்கை.

தேவதேவி : ஆனால் உணர்ச்சி பொங்கும்போது கொள்கை கரைந்து போகும். அதோ அந்தத் தருவைத் தழுவியிருக்கும் பூங்கொடியைப் பார் அக்கா! இந்தக் கொடியை அந்தத் தரு எப்படி உதறித் தள்ள முடியும்? அவர் மாலைகளாகக் கட்டி அழகிய மணவாளனை அழகு படுத்துகிறார் என்கிறாயே, அந்த மலர்களின் ஆயுளைப் போன்றதுதான் இயற்கையை மீறிச் செல்லும் வைராக்கியக்

Koviloor Digital Library

கொள்கைகளின் ஆயுளும். பூவை வண்டு மொய்ப்பதுபோல் ஆசை உள்ளத்தை மொய்ப்பதுதான் இயற்கை விதி.

தேவி, தேவதேவியை, ''நீ அநுபவம் இல்லாதவள்'' என்றாள். தேவதேவியோ, ''அக்கா! வயது அதிகரித்தால் அநுபவமும் அதிகரிக்க வேண்டுமா? ஒரே ஆண்டின் அநுபவத்தைத் திரும்பத் திரும்பப் பெற்றுக்கொண்டிருப் பவர்கள் இல்லையா?'' என்று சொல்லிவிட்டுக் குழந்தை போல் துள்ளியெழுந்தாள்.

பிறகு குதித்தோடும் மானைப்போல் சுற்றிச் சுழன்று சோலையெங்கும் திரிந்தாள். ஒரு கணம் மல்லிகைச் செடி மறைவில் தன் தோழியரும் தமக்கையும் பார்த்து விடாதபடி ஒளிந்துகொள்வாள். ஒரு கணம் மலர்களுக்கிடையே மலர்ந்த முகத்துடன் கலகலவென்று சிரிப்பாள். ஒரு சமயம் காற்றில் ஆடிவரும் பூங்கொடிபோல் ஆடிச் செல்வாள்.

திடீரென்று, காற்றிலே கலந்த பூ மணம்போல் அந்தக் காற்று, வெளியெங்கும் செளந்தரியமயமாக ஜொலிப்பது போல் ஓர் உணர்ச்சி ஏற்பட்டது தேவதேவிக்கு. ஒரு செடிக்குப் பண்ணைகட்டிப் பருவம் செய்துகொண்டிருந்த விப்பிர நாராயணரைப் பார்த்துவிட்டாள்.

அந்தத் துளசி மாலையும் தாமரைமணி மாலையும் அவருக்கு நவரத்தினமாலைகளைக் காட்டிலும் அழகு செய்வது போலக் காணப்பட்டன. அந்தத் தூய ஆடை உள்ளத் தூய்மைக்கு அறிகுறியாகத் தோன்றியது. பகவானுடைய வடிவழகுக்கும் குண செளந்தரியங்களுக்கும் நினைவுக் குறியான திருப்பெயர்களை வாய்குளிரக் கீர்த்தனம் செய்துகொண்டே அவர் தம் பணியில் ஈடுபட்டிருந்தார். சற்றுப் பக்கமாகவே வந்து நின்ற தேவதேவியை அவர் பார்க்கவே இல்லை.

தமக்கை விரைந்து வந்து, சைகை காட்டித் தங்கையை அழைத்துக் கையைப் பிடித்துச் சிறிது தூரம் கொண்டு

Koviloor Digital Library

போனாள். போகும்போதே, ''நீ பைத்தியக்காரி'' என்றாள். அதற்குத் தேவதேவி, ''அவர் பைத்தியக்காரர் என்றல்லவா நினைத்துக்கொண்டிருக்கிறேன்'' என்று பதில் சொன்னாள். அதற்குள் தோழிகளும் அங்கே வந்து சேர்ந்தனர்.

தமக்கை, தங்கையைப் பார்த்து, ''அவர் மகானுபாவர், வேதசாஸ்திர ஞானத்தோடு ஸ்ரீரங்கராஜ கைங்கரியம் என்ற மகத்தான சம்பத்தும் வாய்க்கப் பெற்றவரல்லவா? அழகிய மணவாளன், தன் கண்வலையை வீசி ஆட்கொண்ட உள்ளத்தை நீ உன் கண்வலையை வீசிப் பிடித்துக்கொள்ள முடியுமா?'' என்றாள்.

தோழிமாரும், ''ராஜ சபைகளிலே ஆடல் - பாடல் போட்டிகளில் நீ வெற்றி கண்டிருப்பது உண்மைதான். ஆனால் ஸ்ரீரங்க ராஜாவின் அருளாட்சி நடை.பெறும் உள்ளத்திலே நீ உன் வெற்றிக் கொடியை நாட்டுவதென்பது வீண் முயற்சி, பைத்தியக்கார வேலை'' என்று உறுதியாகச் சொல்லி விட்டார்கள்.

இப்படித் தமக்கையும் தோழிமாரும் பேசியது, தேவதேவியின் அழகுச் செருக்கைக் கிள்ளியது போலத் தோன்றியது. தேவதேவி உடனே, ''நான் அவரை என் அழகினால் மோகிக்கச் செய்யவில்லையென்றால், அக்கா! ஆறு மாசம் உனக்கு நான் பணிவிடைக்காரி யாவேன்'' என்று சபதம் செய்தாள்.

பிறகு தேவதேவி தன் சித்திரப் பொற் பட்டாடை, தங்க நகை, ரத்தின நகைகள் முதலியவற்றை அவர்களிடம் கொடுத்தாள். ஒரு காவியாடை அணிந்து, துளசிமாலையும் அணிந்துகொண்டாள். அப்போது தமக்கை, தங்கையைப் பார்த்து, ''இந்த வேஷமும் உனக்குப் பொருத்தமாகத்தான் இருக்கிறதம்மா! எனக்குப் பணிவிடைக்காரியாக வேண்டிய தில்லை. அந்தப் பெரியாரின் இப்பூங்காவிலேயே நீ வாழ்க்கையைக் கழிப்பதென்று உறுதி பூண்டாலும் நான்

Koviloor Digital Library

ஆச்சரியப்படுவதற்கில்லை. அந்த வைராக்கிய மூர்த்தி நினைத்தால் உனக்கும் வைராக்கியத்தை வழங்கிவிடுவார்'' என்றாள்.

தமக்கைக்கும் தோழிமாருக்கும் தேவதேவியைப் பிரிந்து, போவது கஷ்டமாகத்தான் இருந்தது. ஆனால் தேவதேவியின் பிடிவாத குணத்தை அவர்கள் நன்கு அறிந்திருந்தனர். ''சொல்லித் தெளியாதவள், பட்டுத்தேற வேண்டியதுதான்'' என்றாள் தேவி.

தமக்கையும் தோழிமாரும் விடைபெற்றுச் செல்லும் போது தேவதேவி அந்த உருவங்கள் மறைந்து போகும்வரை அப்படியே பார்த்துக் கொண்டிருந்தாள். 'அழகு, செயற்கருஞ் செயல்களையும் செய்யவல்லது என்பதை அறியாதவர்கள், ஐயோ பாவம்!' என்று தனக்குள் தானே சொல்லிக் கொண்டாள் தேவதேவி.

அந்தப் பெரிய பூங்காவனத்தின் நடுவே ஒரு பர்ணசாலை (இலை மலி பள்ளி) அமைத்துக்கொண்டிருந்தார் விப்பிரநாராயணர். அந்த இடத்திற்கே போய் அவரைச் சந்திக்க வேண்டுமென்று தீர்மானித்தாள் தேவதேவி.

'இந்தச் சோலையின் மலர் மணம் முதல் முதல் என்னை இங்கே இழுத்தது. இப்போது என்னை இழுத்துச் செல்லுகிறது, அந்த மேனியழகு' என்று தனக்குள் தானே சொல்லிக்கொண்டு போனாள். பர்ணசாலையை அடைந்ததும் பூமாலை கட்டிக் கொண்டிருந்த விப்பிரநாராயணர் கண்ணெதிரே போய் அடிதொழுது, கைகூப்பி நின்றாள்.

மாலை கட்டிக் கொண்டே இவளுடைய காவி யாடையைக் கவனித்து, இவள் முகத்தையும் பார்த்த அவர், ''யார்?'' என்று விசாரித்தார். தேவதேவி அவரை மறுபடியும் அடிதொழுது, ''பாபஜன்மம் இது! தாசியின் மகளாய்ப் பிறந்துவிட்டேன்; அது குற்றமன்று சுவாமி'' என்று பதில் சொன்னாள்.

 Koviloor Digital Library

இவள் முகத்தையும் இந்தத் துறவுக் கோலத்தையும் மாறி மாறிப் பார்த்தார் விப்பிரநாராயணர். தேவதேவி முன்னிலும் தைரியத்துடன், ''அந்தப் பாவத்தொழிலை வெறுத்து வெளிப்பட்டு வந்தேன்'' என்று சொல்லிவிட்டு நிதானமாக அவர் முகத்தை நோக்கினாள்.

விப்பிரநாராயணர் முகத்திலே வைராக்கியம் ஜொலித்தது. 'நாம் பாவப்படுகுழியில் விழாமல் தப்ப வேண்டுமே' என்ற கவலையும் எழுந்தது. தேவதேவியோ அந்தப் பார்வையைக்கவனிக்காமலோ, கவனித்தும் லட்சியம் செய்யாமலோ, ''இனி நான் இறைவனுக்கும் இறைவன் அடியார்களுக்கும் பணி செய்வதிலேயே காலங்கழிக்க விரும்புகிறேன். அந்தப் பிறவி எனக்கு இனி இல்லை என்பதாகத் தாங்கள் அருள் புரியவேண்டும். இந்தப் புனிதப் பூங்காவிலே எங்கேயாவது ஓரிடத்தில் குடிசை போட்டுக் குடியிருந்து பணிசெய்ய அனுமதிக்கவேண்டும்'' என்று பிரார்த்தித்தாள்.

விப்பிரநாராயணரோ இந்த வேண்டுகோளை ஏற்றுக் கொள்ளவில்லை. ''ஆம், என்னையும் என் பணியையும் கெடுத்துவிடாமல் நீ திரும்பிப் போய்விட வேண்டியதுதான்'' என்று வற்புறுத்தினார். அந்த உறுதி கண்டும் தேவதேவி மனம் குலைந்து பின்வாங்கவில்லை.

''அடியேன் மீது தேவரீர் இரங்கியருள வேணும்; இந்தத் தோட்டப் பெரும்பணியில் நியமிக்கவேணும். தேவரீர் பூமாலைகளைப் பெருமானுக்கு உரிமையாக்கிப் பிட்சை பண்ணிக்கொண்டு திரும்புமளவும் இப்பொழிலைக் காத்துக்கொண்டிருப்பேன். பெருநெருப்பிலே ஈரம் பற்றுமா? இந்த நந்தவனப் பெரும்பணியிலே ஒரு கையாளாகிப் பிழைத்துப் போவேன்'' என்று புல்லும் கல்லும் கரைந்துருகப் புலம்பினாள். கண்ணீர் வடித்துக்கொண்டே, ''அடைக்கலம் அடியேன்'' என்று காலில் விழுந்து மன்றாடினாள்.

Koviloor Digital Library

கபட நாடகத்தை நம்பிவிட்டார் தொண்டர்; வெளுத்த தெல்லாம் பாலென்றும் மின்னுகிறதெல்லாம் பொன் னென்றும் நம்புகிற ஒரு குழந்தைபோல. ''நீ விரும்பியவாறு கையாளாக இருந்து கைங்கரியம் புரிவாய். உன் பிரார்த்தனைக்கு இரங்கி எல்லாம் வல்ல இறைவன் உன் பாவங்களைப் போக்கி ஆட்கொள்வான்'' என்றார்.

தேவதேவி பர்ணசாலைக்குள் போகாமல் வெளியே ஒரு மரத்தடியில் தங்கினாள். கொத்திக் கொடுப்பாள், களை எடுப்பாள், குழி கட்டுவாள், பூஞ்செடிகளுக்கு மஞ்சனம் பரிமாறுவாள். நாளடைவில் பூக்கொய்து தினுசுதினுசாக மாலை கட்டவும் பழகிக்கொண்டாள். தோட்டப்பணிகளை அதிஜாக்கிரதையாகச் செய்து அவருடைய நம்பிக்கைக்கு உரியவள் ஆனாள்.

ஒழிந்த நேரங்களில் அவரைப்போல் நாமசங்கீர்த்தனம் செய்துகொண்டிருப்பாள்; சில சமயங்களில் அவர் சொல்லும் ஹரிகதைகளையும் பக்திசிரத்தையோடு கேட்பாள். அவர், தாம் அமுது செய்ததும் அவளுக்கும் எஞ்சிய உணவைத் தமது ஆசியுடன் அளித்துவந்தார்.

தேவதேவிக்கு உள்ளுக்குள்ளே சந்தோஷம். 'உலகம் தெரியாமல் ஏமாறிப் போனார் பாகவதர், நமது வலைக்குள் மெள்ளமெள்ளச் சிக்கிவிடுவார்' என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டாள். 'என்னுடைய மனோரதத்தின் முக்கியமான பகுதி நிறைவேறிவிட்டது' என்ற எக்களிப்புடன் மேன்மேலும் ஜாக்கிரதையாகப் பணிபுரிந்து வந்தாள்.

உண்மையில் விப்பிரநாராயணரின் உள்ளமோ விகற்பம் அடையவில்லை. பூக்களில் இறையழகைக் கண்டவர் பிச்சி மலரின் வெள்ளைபோல் இவள் உள்ளமும் கள்ளமின்றி வெளுத்திருப்பதாகவே கருதினார். 'பூச்செண்டு மாதிரி இருக்கும் இந்த யௌவன சௌந்தரியமும் இறைவன் பணிக்குத்தானே பயன்படுகிறது' என்று உள்ளம் பூரித்தார்.

Koviloor Digital Library

இவரது பக்தியும் வைராக்கியமும் நாளுக்கு நாள் அதிகரிப்பதாகவே தேவதேவிக்கும் தோன்றியது. 'எப்படி அந்தச் சிங்காரத் தோட்டத்தை ஒரு பக்திப் பூங்காவாகப் பேணி வந்தாரோ, அப்படியே என்னையும் இவர் ஒரு பக்திப் பணியாளராகவே பேணி வளர்த்துவருகிறார்' என்ற எண்ணம் இவளுக்கு உறுதிப்பட்டது.

தேவதேவி தனக்குக் கர்வபங்கம் ஏற்பட்டு விட்ட தாகவே எண்ணத் தொடங்கிவிட்டாள். 'அடடா, இந்தப் பொன்மேனிக்குள்ளே ஒரு கருங்கற்பாறையா இந்த மனம்?' என்று ஆச்சரியப்பட்டாள்.

இவர் இட்ட பணியைக் கடமையாகச் செய்து கொண்டிருக்கும்போதே அது இன்பமாகவும் தோன்றுவதை உணரத் தொடங்கினாள். இவர் சரமாகவும் ஆரமாகவும் செண்டாகவும் இன்னும் எத்தனையோ தினுசுதினுசாகவும் பூக்களைத் தொடுப்பதிலேயே ஒரு புதிய அழகு தென்பட்டதாகக் கருதினாள்.

'இவர் தம் கையால் அளிக்கும் உணவு அமுதமா யிருக்கிறதே!' என்றும் எண்ணத் தொடங்கினாள். 'தன் வினை தன்னைச் சுற்றும்' என்றவாறு தான் விரித்த மோகவலை தன்னையே சுற்றிக்கொண்டது கண்டு திகைத்தாள்; திக்பிரமை கொண்டாள்.

பாசாங்குக்காரி, காதலால் பரிதவித்தவண்ணம் ஒருநாள் துளசிச் செடிகளுக்குப் பாத்தி கட்டிக்கொண்டிருந்தாள். அப்போது பழைய நினைவுகள் பாய்ந்து வந்தன.

தமக்கைக்குச் சபதம் செய்தபின் நாட்கள் வாரமாகி மாதமாகி மூடிப் போய்விட்டன. ஒருமாசமாக, ஆறுமாசமாக, ஆறுமாசங்களும் ஆகிவிட்டன. இப்போது சபதம் நிறை வேறுவதற்கு மாறாகத் தானே காதலால் பரிதவிக்கும் நிலையும் ஏற்பட்டுவிட்டது. 'என்னுடைய வாழ்க்கை

Koviloor Digital Library

இப்படித் துயரமாகத்தான் கழியுமோ?' என்ற பயமும் ஏற்பட்டுவிட்டது.

'மோப்பக் குழையும் அனிச்சம்' என்றாரே வள்ளுவனார், அந்த அனிச்ச மலர்போல் துயர் நெருங்கியதும் வாடிப் போவதா தேவதேவியின் உள்ளம்! காவியுடை அணிந்தும் தோட்டப்பணிகள் புரிந்தும் வாடாத சௌந்தரியம், நந்தா விளக்காக ஜொலித்தும்கூட, அவர் கண்ணில் படவில்லையே!

இப்படியெல்லாம் எண்ணி எண்ணி ஏங்கி ஏங்கி, அந்தச் செடிகளுக்குப் பாத்தி கட்டி முடித்துவிட்டாள். முடித்ததும், 'ஆ, ஸ்ரீரங்கநாதா! என்னுடைய வீணான செருக்கிற்கு இவ்வளவு தண்டனையும் வேண்டும்!' என்று அந்தச் செடிகளில் தண்ணீரோடு கண்ணீரையும் ஊற்றிக்கொண்டே பெருமூச்செறிந்தாள்.

அந்தப் புனித உள்ளத்தை இந்த உள்ளம் தீண்டிக் கறைப்படுத்த முடியுமா?

Koviloor Digital Library

3. சபதம் நிறைவேறியது

சிறிய மலர்களைப் பார்க்கும்போது தேவதேவி, 'யௌவன சௌந்தரியமும் ஒரு சின்னஞ்சிறு மலர்தான்; காலம் செல்லச் செல்ல ஒளியிழந்து வாடி உதிர்ந்து போகும் மலர்' என்று எண்ணமிடுகிறாள். தன்னுடைய நோக்கம் நிறைவேறாமேலே போய்விடும் என்ற அச்சம் அதிகரிக்கிறது.

அவர் உணவருந்தித் தனக்கும் உணவு அளித்தபின் ஒருநாள் வாழை நாரைச் சன்னமாகப் பிரித்து வைத்துக் கொண்டு புராணகதைகளைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்' தேவதேவி தானும் பூத் தொடுத்துககொண்டே அவர் முகத்தையே பார்த்துக்கொண்டிருக்கிறாள். கதைகளின் பொருளை இவள் உள்ளம் இப்போது வாங்கிக் கொள்ள வில்லை. அந்த முகத்தைப் பார்ப்பதே இப்போது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கிறது.

அவர் தன்னை நோக்கிப் பூங்காவின் ஒரு பகுதியில் செய்ய வேண்டிய வேலைகளைக் குறிப்பிட்டுவிட்டுத் தாமும் வேறொரு பகுதியில் வேலை செய்யப் போய்விடுகிறார். 'எவ்வளவு கொடிய கடின சித்தம் உடையவர் இவர்?' என்று தனக்குள் தானே சொல்லிக்கொண்டு தேவதேவி எழுந்து வருகிறாள்.

வரும்போதே, 'இந்தப் பூங்காவிலே சில மலர்கள் பகவானுடைய பணிக்குப் பயன்படாமலே வாடிப் போகின்றன. என் அழகின் கதியும் அதுதானோ?' என்று நினைக்கிறாள். ''சூரியகாந்தி மலர்போல் என் உள்ளம் அவர் திரும்பும் திசையெல்லாம் திரும்பிக்கொண்டிருக்கிறதே, என் செய்வேன்?'' என்பாள்.

இன்று பூஞ்செடிகளுக்குப் பணி செய்துகொண் டிருக்கும்போது இவள் உள்ளத்திலே ஒரு பெரும்புயல்

Koviloor Digital Library

வீசுகிறது; சோர்வு ஒரே இருட்டாகச் சூழ்ந்திருக்கிறது. அது என்ன? திடீரென்று மேகம் திரண்டு வானமும் இருண்டு போகிறதா? மின்னல் கண்ணைப் பறிக்கிறது. இடி இடிக்கிறது. சிலுசிலுவென்று மழையும் வந்து விடுகிறது. பெருங்காற்றும் பெருமழையும் கலந்தடிக்கின்றன.

விப்பிரநாராயணர் தம் தோட்டப் பணியை முடித்துக் கொண்டு பர்ணசாலைக்குள் வந்துவிட்டார். 'ஐயோ அவள் சொட்டச் சொட்ட நனைந்து விடுவாளே! தங்குவதற்கு இந்தச் சோலையில் வேறு விடுதியும் இல்லையே!' என்று கவலைப்பட்டு, 'இந்த நிலையில் என்ன செய்யக்கூடும்' என்ற ஆலோசனையில் இருக்கிறார்.

அச்சமயம் தேவதேவியும், 'அவருக்கு இரக்கமும் கிடையாதா பார்ப்போம்?' என்று நனைந்துகொண்டே பர்ணசாலையின் வெளிப்புறத்தில் ஒதுங்கி நின்றாள். அவளை அந்த நிலையில் பார்த்ததும் விப்பிரநாராயணர் அவளை உள்ளே வரச்சொல்லுகிறார். ''அப்படி ஒரு புறமாக ஒதுங்கியிரு'' என்று சொல்லிவிட்டு மறுபடியும், ''பெண்ணே! நான்தான் முன்னமே சொன்னேனே; நீ இங்கே வசிப்பது கஷ்டம் என்று; ஏன் நீ பிடிவாதமாகத் தங்கிவிட்டாய்?'' என்கிறார்.

குளிரால் ஒடுங்கி நடுங்கிக்கொண்டே ஈரவஸ்திரத்துடன் ஒதுங்கி நின்றவளை நோக்கிய விப்பிரநாராயணரின் உள்ளம், 'பூவைப் போன்ற இந்த இளம் பிராயத்தில் இவள் ஏன் இப்படிக் கஷ்டப்படவேண்டும்?' என்று வருந்துகிறது. என்றும் காணாத அந்த முகக்குறியைக் கண்டதும் இவள் உள்ளம் சற்றுத் திருப்தியடைகிறது.

உடனே அவர், ''இதை உடுத்துக்கொண்டு இந்தப் பர்ணசாலையிலேயே சிரம பரிகாரம் செய்துகொள்ளலாம்'' என்று சொல்லித் தம்முடைய உலர்ந்த ஆடைகளில் ஒன்றைக் கொடுக்கிறார். அன்பினால் விரிந்த கண்களோடு அவளும் அதை வாங்கித் தரித்துக்கொள்கிறாள். அப்போது இவள் கை அவர் மீது படுகிறது.

Koviloor Digital Library

விப்பிரநாராயணருக்கு ஒரு புதிய உணர்ச்சி உண்டாகிறது. உடனே அது தவறு என்கிறது விவேகம். அறிவுக்கும் உணர்ச்சிக்கும் ஒரே தொந்த யுத்தம். போராடப் போராட உணர்ச்சி பலமடைகிறது. மதி மயங்குகிறது. நயவார்த்தைகள் மயக்கத்தை அதிகப்படுத்துகின்றன. கடைக்கண் மிரட்டி வார்த்தைகளைப் பூர்த்தி செய்கிறது.

'ஐயோ, பகவானின் மாயை!' என்று அறிவு அஞ்சுகிறது. முற்றும் தோல்வியடைகிறது. தேவதேவியின் சபதம் நிறைவேறிவிடுகிறது.

காவி ஆடையையும் சமயச் சின்னங்களையும் ஒழித்து விட உறுதி கொள்கிறாள் தேவதேவி. பூங்காவனத்திற்கு வெளியே போய் வழிப்போக்கர் மூலமாகத் தன் தமக்கைக்கும் தோழிமாருக்கும் செய்தியனுப்பித் தன்னுடைய பொற் பட்டாடைகளையும் ஆபரணங்களையும் வரவழைத்துக் கொள்கிறாள்.

அந்த ஆடையாபரணங்களை அணிந்துகொண்டு தேவதேவி விப்பிரநாராயணருக்கு முன் வந்து நிற்கிறாள். அவர் கண்களில் இந்த மாறுதல் அவளுடைய ரூபலாவண்யங் களை அதிகமாகப் பிரகாசிக்கச் செய்கின்றன.

விப்பிரநாராயணருக்கு நந்தவன கைங்கரியத்திலுள்ள விருப்பம் இப்போது அறவே நீங்கிவிடுகிறது. 'தேவதேவா!' என்று சொல்லும்போதே தேவதேவியின் நினைவும் பெயருந்தான் வருகின்றன.

தேவதேவி திடீரென்று இவரை நோக்கி, ''நான் இங்கே வந்து ஆறுமாசத்திற்கு மேல் ஆகிவிட்டதால் என் இல்லத் திற்குத் திரும்பிப் போகவேண்டும். போய் வருகிறேன்'' என்கிறாள். விப்பிரநாராயணருக்கோ, ''இவளைப் பிரிந்து இருப்பது எப்படி?'' என்பது ஒரு பெரும் பிரச்சினையாக மூளையைக் குழப்புகிறது.

''நந்தவன கைங்கரியம் நடக்க வேண்டாமா? நீங்கள் இங்கேயிருந்து வழக்கம்போல் பணிபுரிந்து வாருங்கள். நான்

Koviloor Digital Library

போய்வருகிறேன்; விடை தாருங்கள்'' என்கிறாள். விப்பிர நாராயணர், ''நானும் உன்னுடனே வந்துவிடுகிறேன்'' என்று புறப்படுகிறார்.

தேவதேவியின் சபதம் வெற்றிபெற்றது குறித்து அவள்வீட்டில் ஒரே குதூகலம். அந்த வெற்றிவிழாவைக் கொண்டாடும்போது தமக்கையான தேவி குதூகலத்துடன், ''தங்கையே! என்னைக் காட்டிலும் நீதான் எப்படியோ உலக அநுபவத்தை உய்த்துணர்ந்து கொண்டாய் என்பதை இப்போது ஒப்புக்கொள்கிறேன். அவருக்கு நீ பணிவிடைக்காரியாக இருந்ததுபோல், நான் உனக்கு ஆறுமாசம் அல்ல, எப்போதுமே பணிவிடைக்காரியாக இருக்க விரும்புகிறேன்'' என்றாள்.

தங்கை சிரித்துக்கொண்டு, ''அக்கா! நாம் ஏதோ விளையாட்டாகச் சபதம் செய்துகொண்டோம்; அதை நீ பிரமாதப்படுத்தவேண்டாம். சகோதரிகள் ஒருவருக்கொருவர் அன்புப் பணி புரிந்துகொள்வதற்குச் சபதமும் வேண்டுமோ?'' என்றாள்.

மேலும் அவள், தன் தமக்கையையும் தோழிமாரையும் நோக்கி, ''இனிமேல் நமக்குப் பணிவிடைக்காரருக்கோ பணிவிடைக்காரிகளுக்கோ பஞ்சம் இல்லை'' என்று புதிர் போடுவது போலப் பேசினாள்.

தங்களுக்கு அது விளங்கவில்லையென்று அவர்கள் சொன்னதும், தேவதேவி, ''என்னுடைய காதலர் ஏழையல்லர்; திருமண்டங்குடிச் செல்வர். அந்த உடைமைகளின் ஒரு பகுதியை விற்றுத்தான் பூங்காவனம் அமைத்திருக்கிறார். இனி என் காதலர் செல்வம் எனக்கு உரியதுதானே'' என்று பதில் சொன்னாள். அவர்களுக்கெல்லாம் இந்தச் செய்தி பெருமகிழ்ச்சியை அளித்தது.

விப்பிரநாராயணர் தம்முடைய உடைமைகளை யெல்லாம் விற்றுத் தாராளமாகச் செலவு செய்து வந்தார். தேவதேவியின்மேல் கொண்டிருந்த காதலில் தமது பக்திக்

Koviloor Digital Library

காதலை மறந்திருந்தார். தேவதேவியின் கண்வலையிலிருந்து தப்புவது அரிது என்று அந்த முயற்சியைக் கைவிட்டார்.

ஊர்இலேன் காணி
இல்லை; உறவுமற்(று)
ஒருவர் இல்லை

என்ற நிலைக்கும் வந்துவிட்டார்.

'தவமும் இல்லை; தனமும் இல்லை.' என்ற நிலைக்கு வந்துவிட்டோமே?' என்று வருந்தினார். இந்த நிலையிலும் தேவதேவியைத் துறந்து செல்வதற்கு மனம் இடங் கொடுக்கவில்லை.

தேவதேவியின் இல்லத்தில் தமக்கை தோழிமார் இவர்களோடு ஒரு கிழத்தாயும் இருந்தாள். விப்பிரநாராயணர் தமது செல்வங்களையெல்லாம் இழந்துவிட்டாரென்று தெரிந்ததும் அந்தத் தாய் ஒரு நாள் நள்ளிரவில் அவரை வெளியே போகச் சொல்லிக் கதவை அடைத்துவிட்டாள்.

அந்த நிலையிலும், 'அவளைப் பிரிய நேர்ந்ததே' என்ற துக்கந்தான் இவருக்கு. அந்த வாசலைவிட்டுப் போகவும் உள்ளம் இடம்கொடுக்கவில்லை. பரமபாகவதராகவும் வைராக்கிய மூர்த்தியாகவும் இருந்த விப்பிரநாராயணர் அவளுடைய வாசல்காப்பான் ஆகிவிட்டதுபோல் படிமேல் அமர்ந்திருந்தார்.

''ஸ்ரீரங்கநாதா! தேவதேவா! இதுவும் உன் மாயாசக்தியின் சித்தமா?'' என்று புலம்பினார். 'எனக்கு இனிக் கதி என்ன?' என்ற கேள்வியும் ஒரு பிரார்த்தனை வடிவமாக இவர் உள்ளத்தில் எழுந்தது.

சிரமபரிகாரமாக அந்தப் படியில் அப்படியே படுத்து உறங்கிப் போய்விட்டார். தேவதேவியின் சபதம் அவள் எதிர்பார்த்ததற்கும் மேலாக, எவ்வளவு கொடூரமாக நிறைவேறிவிட்டது!

Koviloor Digital Library

4. தொண்டுக்காதலின் வெற்றி

விப்பிரநாராயணர் பக்திநெறியிலிருந்தும் தொண்டு நிலையிலிருந்தும் வழுக்கி வீழ்ச்சியுற்ற நிலையிலும் ஸ்ரீரங்கநாதனிடத்தில் பக்தி உள்ளவராகவே இருந்தார். நந்தவனம் வைத்து நன்மலர்களைத் தெரிந்தெடுத்து மாலை கட்டித் தினந்தோறும் அழகிய மணவாளனுக்குச் சமர்ப்பித்துக் கொண்டிருந்தவர் நந்தவன கைங்கரியத்தைத் துறந்து தேவதேவியின் இல்லம் புகுந்த காலத்திலும், அழகிய மணவாளனின் நினைவை விட்டுவிட்டாரென்று சொல்ல முடியாது.

லௌகிக விஷயத்தில் துறவு மனப்பான்மையும் பகவத் விஷயத்தில் ஆசையும் கொண்டிருந்த உள்ளத்திலே ஒரு கிரகணம் போலத் தோன்றியது தேவதேவியின் காதல். கிரகணம். சூரியனையோ, சந்திரனையோ மறைக்கிறது. ஆனால் சூரிய ஒளியையோ நிலவொளியையோ அழித்து விடவில்லை. தேவதேவியின் காதலும் இவரது 'பக்தி யுள்ளத்தைக் கெடுத்துவிடவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

ஒருநாள் எம்பெருமானைப் பிராட்டி பார்த்து, ''பெண்ணையும் ஆணாக நினைத்திருந்த இந்தக் கடுந் துறவியை உம்முடைய மாயைதான் என்ன செய்யும்?'' என்று கேட்டாளாம். எம்பெருமான் திருவிளையாட்டாகப் புன் முறுவல் புரிந்து, ''எந்தக் கடுந்துறவியையும் மாயை பாடுபடுத்துவது உண்டு. அருளே காப்பாற்ற வல்லது; காதலைப் பக்திக்காதலாகப் பரிணமிக்கச் செய்யவல்லது'' என்று பதில் சொன்னாராம்.

Koviloor Digital Library

வீப்பிரநாராயணர் துக்கத்தில் மூழ்கித் தேவதேவியின் வாசற்படிமேல் உறங்கிக் கிடக்கும்போது பெருமான் பிராட்டிக்கு, ''இவன் கிடப்பதைப் பார்'' என்று சுட்டிக் காட்டினார். பிராட்டி இளநகை யரும்பி, ''வேசி இல்லத்தின் வாசற்படியிலே இப்படிக் கவலையின்றி உறங்கிக்கிடக்கும் இவர் யாரோ?'' என்று கேட்டாளாம்.

பெருமான் உடனே, ''இவன்தான் நமக்குப் பூமாலை தந்துகொண்டிருந்த விப்பிரநாராயணன். இவனைக் குறித்துத் தான் நீ, 'மாயை என்ன செய்யமுடியும்?' என்று கேட்டாய்; நினைவிற்கு வருகிறதல்லவா? இவன் வேசியிடம் உள்ளத்தையும் உடைமைகளையும் பறிகொடுத்து இப்போது அவளால் தள்ளுண்டு கிடக்கிறான்'' என்று பதில் சொன்னான்.

பிராட்டி கருணை கூர்ந்து, ''நமக்கு அந்தரங்கராக இருந்த இவரை இப்படி மாயைக்கு உட்படுத்துவது நியாயமா? கடாட்சித்து மறுபடியும் நமக்கு அந்தரங்கராகிப் பணி புரியுமாறு அருளவேண்டும்'' என்று விண்ணப்பம் செய்து கொண்டாள். பெருமானும் அப்படியே கடாட்சித் தருளினானாம்.

திரைமறைவில் இது நடந்தபின் ஒருவன் ஒரு பெரிய தங்கப் பாத்திரமும் கையுமாக அந்த இரவிலே தேவதேவியின் வீட்டை நோக்கி வந்தான். அவன், வாசற்படியில் படுத் திருந்தவரைவிட்டு விலகி நின்றுகொண்டு, கதவைத் தட்டினான்.

சடக்கென்று கதவு திறந்ததும், ''எஜ[illegible] ''' என்று அந்தப் பாத்திரத்தை அவள் கையில் செ[illegible] பேர் என்ன?'' என்று தேவதேவி கேட்டதும் கதவைத் திறந்தாள்.) ''அழகிய மண[illegible] சொல்லிவிட்டுப் பளிச்சென்று விப்பிரநா[illegible] ''உம்மைத் தேவதேவி வரச் சொன்னா[illegible] சொல்லிவிட்டு அப்பா[illegible] போய்விட்டா[illegible]

Koviloor Digital Library

பொழுது விடிந்ததும் கோயிலிருந்த பெரிய தங்கப் பாத்திரத்தைக் காணவில்லையென்று பரிசாரகர்கள் அதிகாரி களுக்கு அறிவித்தார்கள். சோழமன்னனே அந்தக் களவை நேரில் விசாரிக்க விரும்பி, வந்து தேரடியிலேயே, விசாரணையை நடத்தத் தொடங்கினான்.

அச்சமயம் தேவதேவியின் வீட்டு வேலைக்காரி ஒருத்தி அந்த வழியே தண்ணீர் கொண்டுபோனாள். தங்கப்பாத்திரக் களவு குறித்து விசாரணை நடக்கிறதென்று தெரிந்து கொண்டதும் அவள் அரசனிடம் வந்து, ''அந்தப் பாத்திரத்தை விப்பிரநாராயணன் என்பவன் எங்கள் எஜமானிக்கு கொடுத்திருக்கிறான்'' என்று சொன்னாள்.

அரசன் உடனே, ''அந்த இருவரையும் கைப்பிடியாகப் பிடித்துக்கொண்டு வாருங்கள்'' என்று தன்னுடைய கிங்கரர் களுக்குக் கட்டளையிட்டான்.

அவர்கள் புலிபோலப் பாய்ந்து சென்று, தேவதேவியின் இல்லத்திற்குள்ளே மடமடவென்று புகுந்து, ''திருட்டுச் சொத்தை எங்கே மறைத்துவைத்திருக்கிறாய்?'' என்று பயமுறுத்திப் பாத்திரத்தையும் கைப்பற்றிக்கொண்டு அவளை யும் விப்பிரநாராயணரையும் அரசன் முன் கொண்டுவந்து நிறுத்தினர்.

அரசன் தேவதேவியைப் பார்த்து, ''நீ அழகிய மணவாளப் பெருமானின் பொருளை இப்படி அபகரித்துக் கொள்ளலாமா?'' என்று அதட்டிக் கேட்டான். அதற்கு அவள், ''இந்த விப்பிரநாராயணர் இந்தத் தங்கப் பாத்திரத்தை அழகிய மணவாளன் என்ற பெயருள்ள ஒரு தூதனிடம் கொடுத்து எனக்கு அனுப்பி வைத்தார். இவர் பொருளாக இருக்கலா மென்று நம்பியே இதை வாங்கிக் கொண்டேன். அடியேன் புத்தி பூர்வமாகக் குற்றமொன்றும் செய்யவில்லை'' என்று விண்ணப்பம் செய்து கொண்டாள்.

Koviloor Digital Library

பிறகு சோழ மன்னன் விப்பிரநாராயணரை நோக்கி, ''நீர் இப்படிச் செய்வது தகுதியோ? உமக்குத் தருமமோ?'' என்று கோபத்துடன் கேட்டான். இவர் அமைதியாக, ''நான் இந்தப் பாத்திரத்தையும் அறியேன்; எனக்கு ஒரு தூதனும் இல்லை'' என்று பதில் சொன்னார்.

பிறகு அரசன் தேவதேவியை நோக்கி, ''நீ தீர விசாரியாமல் திருட்டுச் சொத்தை வாங்கியிருக்கிறாய். அந்தக் குற்றத்திற்காக அபராதம் செலுத்த வேண்டும்'' என்று அபராதத்தையும் வாங்கிப் பாத்திரத்தையும் கோயிலுக்கு அனுப்பிவிட்டான். 'இன்னும் நன்றாக ஆராய்ந்து இவரைத் தண்டிப்போம்' என்று விப்பிரநாராயணரைக் காவலில் வைக்கும்படி சொல்லிவிட்டு, அரசன் தன் இருப்பிடத்திற்குப் போய்விட்டான்.

அன்றிரவு சோழ மன்னனது சொப்பனத்திலே ஓர் உருவம் தோன்றியது; ''அவருக்காக நாமே தங்கப்பாத்திரத்தை எடுத்துக்கொண்டு தேவதேவியிடம் தூது போனோம்'' என்று சொல்லிற்று.

'ஒஹோ, கள்ளனைக் கண்டுபிடித்து விட்டோமே; கள்ளனே நேரில் வந்து களவை ஒப்புக்கொள்கிறானே!' என்று அரசன் எண்ணிக்கொண்டே, ''நீ யார்?'' என்று கேட்க, ''அணியரங்கத்து இன்னமுதன்'' என்று பதில் சொல்லி மறைந்துவிட்டது உருவம். 'கள்வனல்ல, அமுதன். என்ன அதிசயம்!' என்று அரசன் கண்ணைத் துடைத்துக்கொண்டு படுக்கையில் எழுந்து உட்கார்ந்தான்.

குழலிசைபோல் உட்செவியில் ஒலித்துக்கொண்டே யிருந்தது அமுதனின் அமுதவாக்கு. 'விப்பிரநாராயணர் கள்வரல்ல; நானே கள்வன்' என்று அரங்கநாத அப்பனே சொல்லிவிட்ட பிறகு, அவரைக் காவலறையில் வைத் திருப்பது பெருந் தவறு' என்று அரசன் துணிந்தான்.

Koviloor Digital Library

உடனே நேரில் சென்று விப்பிரநாராயணரை விடுதலை செய்து, அவர் திருவடிகளில் விழுந்து, மன்னிப்பு வேண்டிக் கொண்டான். இவரும், ''எல்லாம் அணியரங்கத்து இன்ன முதனின் இன்னருள்தான்'' என்று கூறினார்.

''இந்தப் பல்லக்கில் ஏறிக்கொண்டு எங்கே போக வேண்டுமோ அங்கே போகலாம்'' என்று அரசன் பிரார்த்திக்க, விப்பிரநாராயணர், தாம் பூங்காவனத்திற்கு நடந்து செல்வதாகவே தெரிவித்தார். அரசன் விடைபெற்றுக் கொண்டதும் விப்பிரநாராயணர் எல்லாத் தவறுகளுக்கும் ஒரே பிராயச்சித்தம் செய்துகொள்ள விரும்பினார்.

கழிந்ததற்குப் பச்சாத்தாபமடைந்து திருந்திய உள்ளத் தோடும் வாழ்க்கையோடும் தமது நந்தனவன கைங் கரியத்தைத் தொடர்ந்து செய்ததுடன், கைங்கரியப் பிரியர் களான பாகவதர்களின் குழு ஒன்றையும் அமைத்துக் கொண்டார்.

பேராசையின்மையும் தியானமும் சீலமும் சாந்தமும் துவேஷ மின்மையும் சமநோக்கும் உடையவர்களான தொண்டர்களின் அடிப்பொடியே கங்கா ஸ்நானத்தைக் காட்டிலும் பரிசுத்தமானது என்ற முடிவிற்கு வந்தார். இத்தகைய திருக்கூட்டம் ஸ்ரீரங்கநாதனுடைய சந்நிதியில் கூடுவது உண்டென்றும் அதில் தொண்டரடிப்பொடி தலைமை தாங்கினாரென்றும் கருதலாம்.

'ஆடிப்பாடி அரங்க! ஓ!' என்(று)
அழைக்கும் தொண்டர் அடிப்பொடி
ஆட நாம்பெறில், கங்கை நீர்குடைந்(து)
ஆடும் வேட்கை என் ஆவதே'

(குடைந்து - மூழ்கி. வேட்கை - விருப்பம்.)

என்ற குலசேகராழ்வாரின் திருவாக்கு உய்த்துணரத்தக்கது. இத்தகைய தொண்டர் குழாத்தில் தாமும் சேர்ந்து பேறுபெற விரும்பினார் குலசேகரர் என்பது குறிப்பு.

Koviloor Digital Library

விப்பிரநாராயணரின் தொண்டுக் காதல் கடைசியாக வெற்றி பெற்றுவிட்டது. 'கிராமம், குலம் ஆதியவற்றால் வரும்பெயர் அநர்த்தத்திற்கே காரணமாகும்' என்று துணிந்த அவர், திருமண்டங்குடி விப்பிரநாராயணர் என்ற அந்தப் பழைய பெயரைத் துறந்து தொண்டரடிப்பொடி என்று தம் புதுமைப் பெருவாழ்வின் அறிகுறியாகப் பெயர் வைத்துக் கொண்டார்.

தமக்கு மோட்சம் வேண்டுமென்று இவர் பிரார்த்திக்க வில்லை. கைங்கரிய ஸாம்ராஜ்யம் வேண்டும் என்பதுதான் இவர் பிரார்த்தனை. பகவத் கைங்கரியம் வேண்டு மென்று கூடப் பிரார்த்திக்கவில்லை; பாகவத கைங்கரியந்தான் கடைசி வேண்டுகோள்.

'தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்; தருமம் மறுபடி வெல்லும்' என்பது உண்மையாகிவிட்டது. கழுத்திலே துளசிமாலையும் தோளிலே பூக்குடலையும் பொலிய, முன்போல் கைங்கரியம் புரியத்தொடங்கிவிட்டார். இவரது அந்தரங்கமான பிரார்த்தனை பின்வரும் திருப்பள்ளி யெழுச்சிப் பாடலின் பகுதியில் காணப்படுகிறது;

தொடைஒத்த துளவமும்
கூடையும் பொலிந்து
தோன்றிய தோள் - தொண்டர்
அடிப்பொடி என்னும்
அடியனை அளியன்என்(று)
அருளி, உன் அடியார்க்கு
ஆட்படுத்தாய்!

(தொடை ஒத்த துளவம் - துளசி மாலை. அளியன் - காக்கப்படத்தக்கவன்.)

அந்தப் பூக்கூடையைத் தவிர இப்போது இவர்வேறு உடைமை ஒன்றும் வைத்துக் கொள்ளவில்லை. 'இந்த விதமாக வாழும் தொண்டரடிப் பொடியான அடியேனையும், 'இவன்

Koviloor Digital Library

உண்மையாக அன்புள்ளவன்; காப்பாற்றத் தகுந்தவன்' என்று நீ அருள் கூர்ந்து கருதினால், எனக்கு வேண்டிய வரம் ஒன்றே ஒன்றுதான். அதாவது, உன் அடியார் பணிக்கு ஆளாக்கி விடுவதுதான்' என்று இவர் கூறுவதில் இவரது திருந்திய புதுமைப் பெருவாழ்வினை ஓர் ஆலமரத்தின் விதையில் காண்பதுபோல் கண்டுகொள்ளலாம்.

தம்மைத் 'தொண்டரடிப் பொடி' என்று தாழ்த்திக் கொண்டு தொண்டர் பணியிலேயே தம்மை முழுக்க முழுக்க இழக்க விரும்பிய பெரியாரைப் போன்றவர்களின்.

பாததூளி படுத லால்இவ்
உலகம் பாக்கியம் செய்ததே!

என்று ஸ்ரீவைஷ்ணவ உலகம் கருதுகிறது, கொண்டாடுகிறது.

விப்பிரநாராயணரின் உருவ அழகால் வசீகரிக்கப்பெற்ற தேவதேவி தொண்டரடிப்பொடியாழ்வாரின் விநய சம்பத்தாலும் ஞானசௌந்தரியத்தாலும் முன்னிலும் அதிகமாக வசீகரிக்கப்பெற்றுத் தன் உடைமைகளையெல்லாம் துறந்து பரம ஸாத்விகையாக வாழ்ந்து வந்தாள்.

Koviloor Digital Library

5. வாக்கும் வரலாறும்

திருவரங்கத்தில் கோயில் கொண்டிருந்த அழகிய மணவாளப் பெருமானால் இவர், தாம் பெற்ற பாக்கியத்தைப் பேசும்போது,

சூதனாய்க் கள்வ னாகித்
    தூர்த்தரோ(டு) இசைந்த காலம்
மாதரார் கயல்கண் என்னும்
    வலையுள்பட்(டு) அழுந்து வேனைப்
'போதரே' என்று சொல்லிப்
    புந்தியில் புகுந்து தன்பால்
ஆதரம் பெருக வைத்த
    அழகனூர் அரங்கம் அன்றே.

(சூதனாய் - சூதிலே ஊன்றியவனாய். தூர்த்தரோடு - சிற்றின்ப விருப்பம் உள்ளவர்களுடன். கயல் கண் என்னும் - கயல் மீன் போன்ற அழகிய கண்களாகிய. போதரே - இப்படிவா. புந்தியில் - புத்தியில். தன்பால் - தன்னிடத்திலே. ஆதரம் - அன்பு.)

என்று பாடுகிறார்.

இப்பாட்டிலே வரும், 'மாதரார் கயல்கண்' என்னும் வலையைத் தேவதேவியின் கண்கள்தாம் என்கிறது கதை. அந்தக் கண்வலையில் அகப்பட்டு அழுத்திக் கிடந்தவரை, 'அடா! இப்படி வா' என்று அழைத்ததாம் அரங்கநகர் அரங்கனின் அருள். எனவே இப்பாடல் தொண்டரடிப் பொடியாழ்வார்ரின் கதைவளர்ந்ததற்கு ஒரு கொழுகொம்பாக இருந்திருக்க வேண்டும்.

ஒருவன் சிற்றின்ப வலைக்குள் அகப்பட்டுக் கொண்டால் அதை இச்சைக்கு ஏற்றபடி அநுபவிக்கப் பொருள்

Koviloor Digital Library

அதிகமாக வேண்டும். எனவே விப்பிரநாராயணர் செல்வராக இருந்தார் என்று கருதவேண்டியிருக்கிறது.

அந்த வலையுள்பட்டு அழுந்துவோருக்கு எவ்வளவு செல்வம் இருந்தாலும் போதாது. மேலும் மேலும்பொருள் தேவைப்படுவதால் காமுகன் சூதாடுவதிலும் களவு செய்வதிலும் இறங்குவான். சூதாடிப் பொருள் சேர்ப்பதும் ஒரு வகையில் களவாடிப் பொருள் திரட்டுவதுதான். சூது கன்னக் களவன்று; ஆனால் பிரத்தியட்சக் களவே என்பர்.

முதலில் விசேஷ லாபம் வந்துவிட்டால் சூதாடி மேன்மேலும் அதிலே இறங்குபவன், சூதில் கிடைத்த பொருளையும் ஏற்கனவே உள்ள கைப்பொருளையும் இழக்கவும் கூடும். இவனே பிறகு கள்வனாகவும் கூடும்.

களவில் தேர்ச்சிபெற்றதும், கூட்டக் கொள்ளை செய்யவும் துணிந்து பலரையும் ஒரு கூட்டமாகக் கூட்டிக்கொள்வான். அதற்காகப் பல தூர்த்தர்களையும் சேர்த்துக்கொள்ளும்போது, அவர்கள் மேலும் மேலும் இவனை, 'மாதரார் கயல்கண் என்னும் வலையுள் பட்டு' அழுந்தச் செய்வார்கள்.

இத்தகைய அநுபவம் தமக்கு ஏற்பட்டதாகச் சொல்லுகிறார் இந்த ஆழ்வார். இந்த வாக்கிலிருந்தே குரு பரம்பரைக் கதைகளில் வரும் தேவதேவியின் காதற் கதைக்கு அகச்சான்று கிடைக்கிறது என்பர். இந்த வாக்கிலிருந்தே அந்தக் கதை வளர்ந்திருக்கலாம் என்று இன்றைய ஆராய்ச்சிக்காரர் கருதக்கூடும்.

'இறைவன் உண்டு; ஆத்மா உண்டு; புண்ணிய பாவங்கள் உண்டு; விதியுண்டு; கதியுண்டு' என்ற ஆஸ்திகக் கொள்கையை மாயச் சொற்களால் மறுத்து, 'அவை ஒன்றும் இல்லை' என்று தன் புத்தியையும் பிறர் புத்தியையும் மயக்கிக்கொள்வதும் சூதுதான்; இப்படி மயங்குகிறவனும் சூதன்தான் என்பது பக்தர்கொள்கை. இக்கொள்கையினர், இறைவனுக்குரிய ஆத்மாவைத் தனதென்று கருதுவதே களவுதான் என்பர்.

Koviloor Digital Library

ஆத்ம யாத்திரையில் மேலே மேலே செல்லச் செல்ல இத்தகைய மெய்யறிவு பக்தர்களிடம் பெருகி வரும் என்பர். எனவே, இந்த வாக்கை ஆதாரமாகக் கொண்டு இந்த ஆழ்வார் பூர்வநிலையில் தூர்த்தராகவோ, கள்வராகவோ இருந்ததாகக் கருதுவது எப்படி? என்று ஆராய்ச்சியாளர் கேட்கலாம்.

ஆனால் ஒன்று நிச்சயம்; 'இறைவனுடைய கருணையாகிய நெடுந்தடக்கைக்கும் எட்டாமல் நாம்நெடுந்தூரம் சென்றுவிட்டோமே!' என்ற பச்சாத்தாபம் இவருக்கு ஏற்பட்டுவிட்டது. அந்த நிலையில் அரங்கனாகிய அழகன், 'அடா! இப்படி வா' என்று அழைப்பது போன்ற ஒரு பக்தியநுபவமும் இவருக்கு ஏற்பட்டது. அந்த அழகு இவரது புத்தியில் புகுந்துகொண்டு தன்னிடத்திலே அன்பை மேலும் மேலும் வளரச் செய்துவிட்டது என்கிறார்.

''நான் யார்? ஒரு சூதன், கள்வன், தூர்த்தரோடு தூர்த்தனாகத் திரிந்தவன். நீ யார்? உலகங்களுக்கெல்லாம் ஒருயிராகிய அழகன், அழகிய மணவாளன். நீ என் நெஞ்சினுள்ளே சிக்கெனப் புகுந்து ஸ்திரமாகக் குடியேறியது விசித்திரந்தானே!'' என்கிறார். இப்படிக் குடியேறியவன் இவரை நோக்கி, ''உன்னுடைய அன்பு முழுவதும் எனக்கே வேண்டும்'' என்று கேட்ட வண்ணம் தன் கண் வலையை வீசி இவரை அதில் அழுந்தச் செய்துவிட்டானாம்.

இந்த அநுபவத்தைச் சிந்தித்துச் சிந்தித்து உருகிய உருக்கந்தான் கவியுருவம் பெற்று வந்திருக்கிறது. தேவதேவியின் கதையிலே காணும் தொண்டர் இத்தகைய அநுபூதி பெற்றிருக்கக் கூடும் என்று கருதுவதும் தவறாகாது.

வேறொரு பாட்டிலும் இவர் தம்மை குறித்து,

துவர்த்தசெவ் வாயினார்க்கே
துவக்கறத் துரிசன் ஆனேன்

(துவர்த்த - பழுப்பேறின. துவக்கு அற - சம்பந்தம் அறும்படி. துரிசன் ஆனேன் - கள்ள்ன் ஆனேன்.)

என்று சொல்லுகிறார்.

Koviloor Digital Library

தாம் விரும்பியிருந்த அப்பெண்களின் தொடர்பும் அற்றுப்போகும்படி அத்தகைய கள்ளனாகிவிட்டாராம். 'அவர்களிடத்திலும் என் கள்ளத்தனத்தை உபயோகிக்கப் பார்த்தால் அவர்களாலும் தள்ளப்பட்டேன் அந்தோ!' என்பது குறிப்பு. இதுவும் தேவதேவி கதைக்கு ஓர் அகச்சான்று என்பர்.

இன்னும் ஒரு பாட்டிலே இவர் இறைவனது திருமுன்பே நிற்கும்போது,

மெய்யெல்லாம் போகவிட்டு
விரிகுழ லாரில் பட்டு
பொய்யெல்லாம் பொதிந்து கொண்ட
போழ்க்கனேன் வந்து நின்றேன்

(விரிகுழலாரில் பட்டு - விரிந்த கூந்தலையுடைய மாதர் வரையில் அகப்பட்டு. போழ்க்கனேன் - வழிதப்பினவனாகிய நான்; முறைகேடனாகிய நான்.)

என்று தம்மைக் குறிப்பிடுகிறார்.

இப்பாட்டில் 'விரி குழலார்' என்று தேவதேவி குறிக்கப்படுவதாய் அகச்சான்று காண்போரும் உண்டு. அழகாய் முடித்த கூந்தலைத்தான் சிறப்பாகக் கவிகள் வருணிப்பது உண்டு. ஆனால் காமுகர், முடித்த கூந்தலில் ஈடுபடுவதுபோல் விரித்த கூந்தலிலும் ஈடுபடுவார்கள். மயிர்முடி கண்டு அதில் மாலை சுற்றியிருக்கும் அழகை ரஸிப்பவர்கள், கூந்தல் விரிந்திருக்கக் கண்டபோது, அது விரிந்து கால்வரையில் தொங்குகிற அழகிலும் ஈடுபடுவார்களாம். பகவத் விஷயத்திலே ஸாத்விகர் படுவதெல்லாம் காமுகர் காமத்திலே படுவார்களாம்.

இவர் இறைவனது அழகில் ஈடுபட்டார் என்பதற்கும், அந்த அழகு இவரைக் காப்பாற்றியது என்பதற்கும் இவர் வாக்கிலே தக்க சான்றுகள் கிடைக்கின்றன. உதாரணமாக,

Koviloor Digital Library

கனியிருந் தனைய செவ்வாய்க்
கண்ணனைக் கண்ட கண்கள்
பனி அரும்(பு) உதிரு மாலோ
என்செய்கேன் பாவி யேனே?

(கனியிருந்தனைய - கொவ்வைக்கனி போலச் சிவந்த. பனி அரும்பு - குளிர்ந்த கண்ணீர்த் துளிகள்.)

என்ற வாக்கிலே இவர் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட அழகனைத் தாமும் கண்டு உருகுவது போன்ற ஓர் உணர்ச்சி ரஸிகர்களுக்கு ஏற்படக்கூடும்.

இறைவன், அடியவர்களுக்கு இரங்குவதில் ஒரு பித்தனாகவே காண்கிறான் என்றும், தொண்டு பூண்டவர்கள் இறைவனது குணத்தை அமுதமாகப் புசிப்பர் என்றும் இவர் கூறுகிறார். அவனுடைய திருப்பெயர்கள் சகல பயங்களையும் போக்கும் என்கிறார். பக்தி, உள்ளத்தை மட்டுமல்ல, உடலையும் உருக்குகிறது என்கிறார்.

இறைவனை மறந்து தம்மால் வாழமுடியாது என்கிறார். இறைவன் விஷயத்திலே கள்ளக் காதல் கொஞ்சமும் பொருந்தாது என்கிறார். சிறு குறைகளையும் பெருங் குறைகளாகக் கண்டு பச்சாத்தாபப்படுகிறார். 'கண்ணனே! கடல் வண்ணா!' என்றெல்லாம் கதறுகிறார்.

இவரது பாடல்களிலே நாம் ஒரு பெருங்காதலரைக் காண்கிறோம். தூய வெண்ணிறப் பரப்பிலே ஒரு கரும் புள்ளியைக் காண்பது போல், சின்னஞ்சிறு குறைகளையும் கண்டு பக்திப் பெருங்காதலிலே ஐம்புலனும் அடங்கப் பெறுகின்ற காதலரைத்தான் இவர் பாடல்கள் நமக்கு அறிமுகப்படுத்துகின்றன.

Koviloor Digital Library

6. தம்பிரான் தோழர்கள்

தொண்டரடிப்பொடியாழ்வாரின் கதை சில அம்சங்களில் சுந்தரமூர்த்தி நாயனாரின் கதையை நினைவூட்டுகிறது. சிவபெருமான் சுந்தரருக்காகத் தூதுசென்றதுபோல் ஸ்ரீரங்கநாதனும் ஆழ்வாருக்குத் தூது சென்றானல்லவா?

இறைவன் கட்டளைப்படியே சுந்தரமூர்த்தி நாயனார் கயிலை நீங்கிச் சடையனார் புதல்வராய் அவதரித்தார் என்று பெரிய புராணம் தெரிவிக்கிறது. குரு பரம்பரைக் கதைகளோ, தொண்டரடிப்பொடியாழ்வார் திருமாலின் வைஜயந்தி என்னும் வனமாலையின் அம்சமாக வேதவிசாரதர் என்ற அந்தணர் புதல்வராய் அவதரித்ததாகச் சொல்லுகின்றன. சுந்தரமூர்த்தி நாயனாரின் பூர்வசரிதை விவரமாய்க் கூறப்படுகிறது.

இறைவன் தடுத்து ஆட்கொண்டது சுந்தரமூர்த்தி நாயனாரின் வரலாற்றிலே ஒரு முக்கிய அம்சமாகும். விப்பிரநாராயணர் கதையிலும், ஸ்ரீரங்கநாதன் உலக விஷயங்களில் இவருக்குப் பற்று ஒழிந்து இவர் தமக்குப் பணியுமாறு சங்கற்பித்து ஆட்கொண்டதாக வருகிறது.

சுந்தரமூர்த்தி நாயனார் பரவையாரையும் சங்கிலியாரையும் திருமணம் செய்துகொண்டார். தொண்டரடிப் பொடியாழ்வாரோ இளமையில் மகா விரக்தராக இருந்து பிறகு தேவதேவியின் மையலுக்கு வசமானார்.

கயிலையில் பார்வதி தேவியாரின் சேடியர் இருவருள் ஒருவராகிய கமலினியாரே திருவாரூரில் உருத்திரகணிகையர் மரபிலே பரவையாராகத் தோன்றினாரென்று பெரிய புராணம் கூறுகிறது. உமாதேவியின் வேறொரு சேடியாகிய அநிந்திதை

Koviloor Digital Library

யார் சங்கிலியாராக வேளாண்மரபில் தோன்றினாராம். தேவதேவியாரை வேசி உருவில் வந்த ஒரு தேவஸ்திரியாகக் குருபரம்பரைக் கதையொன்று குறிப்பிடுகிறது.

சுந்தரமூர்த்தி நாயனாரின் கதையிலும் தொண்டரடிப் பொடியாழ்வார் கதையிலும் அற்புதங்கள் நிகழக் காண்கிறோம். இந்த அற்புதங்களில் மிகவும் முக்கியமானது இறைவன் தூது சென்றது.

திருவாரூரில் பரவையாரைத் திருமணம் செய்து அங்கே பன்னெடு நாள் தங்கியிருந்தபின் சுந்தரர் பல தலங்களையும் தரிசிக்க வேண்டிப் பிரிந்து சென்றார். திருவொற்றியூருக்குச் சென்று சங்கிலியாரையும் மணம் புரிந்தார். அது கேட்ட பரவையார் கோபமும் மனவருத்தமும் கொண்டிருந்தார்.

சுந்தரர் மீட்டும் திருவாரூருக்கு வந்தபோது இவருடைய பரிசனங்களைப் பரவையார் தமது மாளிகையில் அநுமதிக்க வில்லை. இவர் துக்கத்தில் அமிழ்ந்திருக்க, சிவபெருமான் திருவடிகள் நிலத்தில் தோய நடந்து, பரவையார் வீட்டிற்குத் தூதனாகப் போனார். ''கதவைத் திற'' என்றார்.

பரவையார் வாசற் கதவைத் திறந்ததும், ஆதி சைவரது வடிவம் தாங்கி வந்திருந்த சிவபெருமான், ''சுந்தரர் இங்கே வருவதற்கு நீ உடன்பட வேண்டும்'' என்றார். ''சுவாமிக்கு அருச்சனை செய்யும் ஆதிசைவர் இவர்'' என்று கருதிய பரவையார், ''இந்தக் காரியத்தின் பொருட்டு இந்த வீட்டிற்கு அர்த்த சாமத்தில் வருவது சரியன்று, போகலாம்'' என்று சொல்லிவிட்டார்.

இந்தச் செய்தியைப் பெருமான் சுந்தரருக்கு அறிவித்து, அவர் சோர்ந்து விழுந்தது கண்டதும், ''நீ துக்கிக்க வேண்டாம்'' என்று சொல்லிவிட்டு மறுபடியும் பரவையார் வீட்டை அடைந்தார். இப்போது சிவபெருமான் தேவர் முனிவர் முதலான கணங்கள் புடைசூழ வருவது கண்டு, பரவையார், பெருமான் அடிகளில் வீழ்ந்து வணங்கினார். ''பரவையே!

Koviloor Digital Library

நாம், சுந்தரன் அனுப்பத் திரும்பவும் உன்னிடம் தூது வந்தோம்'' என்று சிவபெருமான் சொன்னதும், பரவையார் ஆரூரரை அன்போடு வரவேற்க இசைந்தார்.

இந்தக் கதையைத் தழுவியதுதான் ஸ்ரீரங்கநாதன் மனித வேடம் தாங்கித் தேவதேவியின் இல்லம் அடைந்து, ''கதவைத் திற'' என்று கூறித் தன்னை விப்பிரநாராயணருடைய தூதனாக அறிவித்துக்கொண்ட கதையும். ஆனால்,

தோழனுமாய் யான்செய்யும்
துரிசுகளுக்கு உடனாகி
மாழைஒண்கண் பரவையைத் தந்(து)
ஆண்டானை

என்றும், 'தூதனை என்தனைஆள் தோழனை' என்று பரவையாரிடம் இறைவன் தூது சென்றதற்குச் சுந்தரமூர்த்தி நாயனாரின் வாக்கிலிருந்து அகச்சான்று காட்டுவதுபோல் தொண்டரடிப் பொடியாழ்வார் வாக்கிலிருந்து அகச்சான்று காட்ட முடியாது. எனினும் இந்த ஆழ்வாரும் 'துரிசனானேன்' என்று தம்மைக் குறிப்பிடுகிறாரல்லவா?

சிவபெருமான் சுந்தரருக்குத் தூது சென்ற கதைபோல், ஸ்ரீரங்கநாதன் தொண்டரடிப்பொடியாழ்வாருக்குத் தூது சென்ற கதை அவ்வளவு இலக்கியப் பிரசித்தமாகவும் இல்லை. எனினும் 'பாதி இரவில் பரவைக்கும் சங்கிலிக்கும் தூது நடப்பித்த' தோழமையை ஸ்ரீரங்கநாதனிடத்திலும் பக்தியுள்ளம் காண விரும்பியதில் அதிசயம் இல்லை.

சுந்தரமூர்த்தி நாயனார் தமது தோழனாகிய பெருமானைப் 'பித்தன்' என்று பாடியிருப்பது பிரசித்தம்,

பித்தா! பிறைசூ டி!பெரு-
மானே அருளாளா!

என்று தொடங்கும் சுந்தரமூர்த்தியின் பாடல் மிகவும் பிரசித்தமானது.

Koviloor Digital Library

தொண்டரடிப்பொடியாழ்வாரும் தமக்கு அருள்புரிந்த அரங்கனை, 'நம் அரங்கனாகிய பித்தன்' என்று பாடி யிருக்கிறார்.

இத்தனை அடியர் ஆனார்க்(கு)
இரங்கும்நம் அரங்க னாய
பித்தனைப் பெற்றும் அந்தோ!
பிறவியுள் பிணங்கு மாறே.

'பித்தனை' என்பதற்குப் பெரியவாச்சான் பிள்ளை 'கொள்ளும் அவன் சிறுமை பார்த்தல், கொடுக்கிறவன் பெருமை பார்த்தல், கொடையில் செய்ய அறியாது இருக்கும் அவன்' என்று வியாக்கியானமிடுகிறார். எம்பெருமான் அடியார் திறத்திலுள்ள காதலால் அவர்களுடைய சிறுமையையும் தன்னுடைய பெருமையையும் பாராது இரங்கி அருள் பொழிந்த வண்ணமாயிருக்கிறானாம். இதே கருத்தைத்தான் 'பித்தா'... ... 'அருளாளா!' என்ற சுந்தரர் வாக்கிலும் காண்கிறோம்.

அடியவர்களையெல்லாம் இறைவன், தன் பெருமை பாராமலும் அவர்கள் சிறுமை பாராமலும் தோழராக மதிக்கிறான் என்பது பக்திமதத்தின் ஒரு பெருங்கொள்கை. குகனை நோக்கி ராமன், 'நீ தோழன்' என்றான். அவன் ஏழை வேடன் தானே என்று கருதவில்லை; தான் சூரிய குலத்திலே வந்த தசரத ராஜகுமாரன் என்று தன் பெருமையையும் கருதவில்லை.

இத்தகைய 'சீரணிந்த தோழமை'யை இறைவன், அடியரானவர்களுக்கெல்லாம் இரங்கி உதவுகிறானாம். இந்த உண்மையைச் சுந்தரமூர்த்தி நாயனாரின் கதைபோல் தொண்டரடிப் பொடியாழ்வாரின் கதையும் நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

Koviloor Digital Library

7. இவர் சூட்டிய பாமாலை

தொண்டரடிப்பொடியாழ்வார் இறைவனுக்குச் சூட்டிய பூமாலைகள் இத்தனை என்ற கணக்கு இல்லை. இவர்தொடுத்த பாமாலைகள் என்று சொல்லத்தக்க பிரபந்தங்கள் இரண்டு: 'திருமாலை' 'திருப்பள்ளியெழுச்சி' என்ற திவ்யப் பிரபந்தங்கள் இவை.

'திருமாலை' நாற்பத்தைந்து பாடல்களால் அமைந்த பிரபந்தம். 'திருப்பள்ளியெழுச்சி'ப் பாடல்கள் பத்து; ஒவ்வொரு பாட்டும் 'பள்ளி எழுந்தருளாயே' என்று முடிவு பெறுகின்றது.

எம்பெருமானைத் துயில் எழுப்புவது ஏன்? தொண்டரடிப் பொடியாழ்வர், தாம் முற்றும் திருந்திய நிலையில் தமது அழகனை அணுகிப் பாமாலை சூட்டி ஆனந்திக்க வேண்டுமென்று அருகே சென்றாராம். 'தன்பால் ஆதரம் பெருக வைத்த அழகன்' அல்லவா?

அந்த அழகனோ கண்திறந்து இவரைக் குளிர நோக்கவில்லையாம். நெடுந்தடக்கை நீட்டி அணைத்துக் கொள்ளவும் இல்லையாம். 'எப்போது வந்தாய்? சுகந்தானே?' என்று க்ஷேமமும் விசாரிக்கவில்லையாம். இப்படியும் ஓர் உறக்கமா? அன்பருக்குத் தெரிந்துவிட்டது அன்பனுள்ளம்.

இறைவன் பள்ளிகொண்டருளுவது சோம்பலால் அன்று; களைப்பால் அன்று. அவனுடைய கருணைக்கு உறக்கம் ஏது?

அறிதுயில் அமர்ந்தமூர்த்தி எல்லாவற்றையும் அறிந்து கொண்டு, தானே உறங்குவதுபோல் யோகத்தில்

Koviloor Digital Library

அமர்ந்திருக்கிறான்; திருந்தித் தம்மை நோக்கி வரும் இந்த ஆழ்வாருக்குத் தன்னிடம் ஆதரம் பெருகவிட்டு இப்போது அநாதரிக்கப்போகிறானா?

இவரைப்போல் பிறரையும் தனக்கு ஆட்படுத்திக் கொள்ளும் வழி என்ன என்றுதான் கண்மூடி ஆலோசித்துக் கொண்டிருக்கிறானாம். இந்த நிலையில் இவர்:

அரங்கத்தம் மா! பள்ளி
யெழுந்தரு ளாயே

என்று பாடி, 'அடியேனையும் உன் அடியார்க்கு ஆட்படுத்தி உன்னுடைய நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ள வேணும்' என்று பிரார்த்திக்கிறாராம். இது 'திருப்பள்ளியெழுச்சி'ப் பாடல்களின் உட்பொருள் என்பர்.

'திருமாலை' என்ற பிரபந்தமோ சுருக்கமும் இல்லாமல், பெருக்கமும் இல்லாமல் மிகவும் தெளிவாக இந்த ஆழ்வாரது அநுபூதிச் செல்வத்தை வெளியிடுகிறது. 'கடல் பேராழ மாயிருக்கச் செய்தேயும் நீர்த்தெளிவாலே தரை தோற்றுமா போலே, சப்தத்தின் செம்மையாலே ப்ரமேயம் கனத்திருக்கச் செய்தேயும் உள்ளது அடங்கத் தோற்றும்படியிருக்கை' இப்பிரபந்தத்தின் சிறப்பியல்பு என்பது வியாக்கி யான சக்கரவர்த்தி பெரியவாச்சான்பிள்ளை அபிப்பிராயம்.

மகாபாரதம் எவ்வளவு பெரிது? எத்தனை உண்மை களை இந்த இதிகாசம் வெளியிடுகிறது! எனினும் பெருத்திருப்பதால் இதன் ஸாரத்தை அறிந்துகொள்வது அருமை என்கிறார் பெரியவாச்சான் பிள்ளை. உலகத்திலேயே பேரிதிகாசம் என்று சொல்லத் தக்க மகாபாரதத்திற்கும் இப்படி ஒரு குறை இருக்கிறதாம்.

இனி 'ஓம்' என்ற பிரணவத்தைப் பாருங்கள். இதை ஓரெழுத்தாலான ஒருமொழி என்பர். சப்தம் மிகவும் அற்பமானதுதான்; அர்த்தமோ அபாரம். இந்த அர்த்தத்தைக் கிரகித்துக்கொள்வதும் அருமைதானே.

Koviloor Digital Library

தத்துவ உலகத்திலே இவ்வளவு சுருக்கமாக ஒரெழுத்திலேயே இவ்வளவு பெரும் பொருளைப் புதைத்துக் காட்டியுள்ள அதிசயத்தை என்னென்பது? எனினும் புதை பொருளைக் கண்டுகொள்ளும் அருமையே ஒரு குறைதான் என்பர்.

இந்த இரண்டு குறைகளும் இல்லாமல், சமய உண்மைகளை நாடுகிறவனுக்கு - ஒரு மகானின் அநுபூதிச் செல்வத்தை அநுபவிக்க விரும்புகிறவனுக்கு - 'திருமாலை' என்ற இந்தப் பிரபந்தத்திலே வேண்டிய பொருள்களெல்லாம் காணப்படுகின்றன என்பது பெரியவாச்சான் பிள்ளையின் கருத்து. ஒரு வகை மலர்களின் காட்சியால் தமது இதயத்திலே சம்பத்து நிறைந்துவிட்டது என்ற ஆங்கிலக் கவியின் வாக்கை நினைப்பூட்டிக்கொண்டு பாருங்கள்.

இந்தத் திருமாலையிலேதான் எத்தனை வசீகரமான மலர்களைக் காண்கிறோம்! ஒரு சமயம் 'ஆஹா என்ன நறுமணம்! உள்ளத்தை அப்படியே அள்ளுகிறது!' என்று அதிசயிக்கிறோம். ஒரு சமயம், 'என்ன நிறம்! என்ன அழகு!' என்று வியக்கிறோம்.

'இறைவன் திருவடிகளை அலங்கரிக்கும் மலர்கள் இவை' என்று சில பாசுரங்களைப் போற்றுகிறோம். 'இறைவன் முடியையும் அணிசெய்யும் மலர்களோ இவை!' என்று சிற்சில பாசுரங்களை நோக்கி வியக்கவும் தோன்றுகிறது.

ஒரு பாட்டை அநுஸந்திக்கும்போது, 'எத்தகைய சிந்தனை வித்து இப்படி முளைத்துத் தளிரோடி இலைவீசிச் செடியாகியிருக்கிறது!' என்ற சிந்தனையில் ஆழ்கிறோம். ஒரு பாட்டிலே, பூஞ்செடி மேலும் பக்குவமுற்று அரும்பி மொட்டாகி மலரும் விந்தையைக் காண்கிறோம்.

மலரைச் சுற்றி ரீங்காரமிடும் வண்டுபோல் ஒரு சமயம் இவருள்ளம் இறைவனது அழகைச் சுற்றி வட்டமிடுகிறது; ஒரு சமயம் அந்த அழகை மதுவாகப் பருகி வெறிகொள்ளுகிறது.

Koviloor Digital Library

மகரந்தப் பொடியில் தன்னைத் தோய்த்துக்கொள்ளும் வண்டுபோல் இவர் இறையழகிலே தோய்ந்து தோய்ந்து அந்த மகரந்தத்தை நம் மீதும் சிந்திச் சிதறுகிறாரோ என்ற எண்ணமும் உண்டாகிறது. 'நம்மைப்பற்றி இவருக்குத்தான் என்ன கவலை!' என்று மேலும் ஈடுபட்டுப் பாசுரங்களைப் பாடத்தொடங்குகிறோம்.

இப்பாடல்களிலே மலரைக் காட்டிலும் மென்மையான உள்ளத்தையும் பார்க்கிறோம்; வைரத்தைக் காட்டிலும் வன்மை கொண்ட வைராக்கியத்தையும் பார்க்கிறோம். இவர் மனம் மலர மலர, மலர்ச்சி பெற்ற மலர்களே இப்பாடல்கள்.

சிங்காரப் பூங்காவனங்களில் மலர்கள் தங்கள் மலர் வாய் திறந்து பேசும் விந்தைகளைக் காதலர்கள் அறிவார்கள்; குழந்தைகள் அறிவார்கள்; கவிஞர்கள் அறிவார்கள்; தோட்டக் கலைஞர்களும் அறிவார்கள். தொண்டரடிப் பொடியாழ்வார் அரங்கனுக்காகக் கட்டிய பூமாலைகளில் ஒவ்வொரு மலரும் குழந்தையுள்ளங்கொண்ட அவருடன் கொஞ்சிக் குலாவி, 'நான் இன்ன பெயருடையேன்; கொடியுடையேன், மணமுடையேன். இறைவனைச் சார்ந்து மேலும் நிறம் பெறுவேன், ஒளிபெறுவேன்' என்று பேசாமல் பேசியிருக்க வேண்டும்.

திருமாலையிலுள்ள நாற்பத்தைந்து மலர்களும் பக்த ரஸிகர்களுடன் கொஞ்சிக் குலாவும் சிறப்பு வாய்ந்தவை. அன்று அலர்ந்து அன்று அழிந்துபோகும் மலர்களல்ல இவை; என்றும்நின்று மணம் வீசி, மரண பயம் போக்கி, அன்பு விளைத்து, ஆனந்தத் தேன் சொரியும் தெய்வீக நன் மலர்களாகப் போற்றப்பெறுகின்றன.

இறையழகை நினைவூட்டுகிறது ஒரு மலர். 'வீணாகக் கழியும் பிறவி வேண்டேன்' என்று வேதாந்தம் பேசுகிறது ஒரு மலர்.

Koviloor Digital Library

பாடி ஆடும் தொண்டரை நினைவூட்டுகிறது ஒரு மலர். 'அழகிய மணவாளனுக்கு ஆளாகிப் பணிபுரிவீர்' என்கிறது ஒரு மலர்.

செண்பக மலரின் மணம் சில சமயங்களில் தலை நோவை உண்டாக்கிவிடும்; அத்தகைய ஆவேச மணம் அம்மலருக்கு உண்டு. தொண்டரடிப்பொடியாரின் கவிதை மலர்களிலும் அபூர்வமாக மதாவேசத்தைக் காண்கிறோம். தமது இஷ்டமூர்த்தியின் துளவமாலையை, 'வெறிகொள்பூந் துளவமாலை' என்று இவர் வருணிப்பது காண்க.

அப்புறம் மல்லிகை, முல்லை, இருவாட்சி, சம்பங்கி, பவழமல்லி முதலான மலர்களைக் கவலை தீரப் பார்த்துக்கொண்டே இருக்கலாமல்லவா? அப்படியே கவலைதீர அநுபவித்துக் கொண்டிருக்கலாம் திருமாலையில் சில பாசுரங்களை.

கண் இணை களிக்க, உணர்ச்சி தழைக்கப்பார்த்துக் கொண்டேயிருக்கலாம் பூக்களை. அப்படியே செவி குளிர அகம் குளிரப் புதிய உணர்ச்சி தழைக்கக் கேட்டுக் கொண்டே யிருக்கலம் சில பாடல்களை.

தாமரைப் பூவைப் பக்த ரஸிகர்களைப்போல் அநுப வித்தவர்கள் இல்லை. வெண் தாமரைப் பூவில் கலைமகளைக் கொலு வீற்றிருக்கச் செய்தவர்கள் செந்தாமரையைத் திருமாமகளுக்கு அளித்ததுடன், 'கமலச் செங்கண்' என்று அருள் நிறைந்த இறைவனது கண்களையும் செந்தாமரைப் பூவின் வாயிலாக நமது அகக்கண்ணுக்கு இலக்காக்கி விடுகிறார்கள்.

இறைவனது கமலச் செங்கண்ணுடன் தொண்டரடிப் பொடியாழ்வாரின் அகக்கண் ஒத்துப்போக, 'கண்ணொடு கண் இணை நோக்கு ஒக்கின்' என்ற நிலையிலே பிறக்கும் காதலும் பிறந்துவிடுகிறது. இக்காதலின் விளைவாக

Koviloor Digital Library

நமக்குக் கிடைத்திருக்கும் கவிதையின் சோபையைத்தான் என்னென்பது! 'தாமரைக்கண்ணன் எம்மான் தந்த கவிதை இது' என்று சொல்லக்கூடிய சோபையைக் காண்கிறோம்.

'தூய தாமரைக் கண்கள்' இவரைப் பைத்தியமாக்கு கின்றன. 'கமல நன்முகமும்' அப்படியே; மலரடிகளும் அப்படியே; எனவே,

போதெல்லாம் போது கொண்(டு)உன்
பொன்னடி புனைய மாட்டேன்!

என்று கதறுகிறார். புஷ்பத்தொண்டிலுள்ள பேராசை, மனத்தை இப்படிக் கவலைப்படுத்துகிறது.

இவர் கட்டிய பூமாலைகளில் துளசி இலைகளையும் இடையிடையே வைத்துக் கட்டுவார். தனியாகத் துளசி மாலைகள் கட்டி, இறைவனைப் பணிசெய்து பார்ப்பதும் உண்டு. புஷ்பத் தொண்டைப்போல் துளசித் தொண்டிலும் ஈடுபட்டவர் இவர்.

துளவத் தொண்டாய தொல்சீர்த்
தொண்ட ரடிப்பொடி

என்று தம்மைத் திருமாலையின் இறுதியில் குறிப்பிடுவதைக் காணலாம்.

'துழாய் மாலையைத் திருமுடியிலே அணிகிறவனே!' என்று அழைப்பதில் இவருக்கு ஒரு விசேஷ திருப்தி. 'புனத்துழாய் மாலை யானே!' என்கிறார்.

தேனுலாம் துளவமாலைச்
சென்னியா!

(தேன் உலாம் - தேன் உலாவுகின்ற. சென்னியா - திருமுடி உள்ளவனே.)

என்று இறைவனை அழைப்பவர்கள் பாக்கியசாலிகள் என்கிறார்.

Koviloor Digital Library

திருமுடியில் துளசிமாலை அணிந்த இறைவன், அடியவர்களையும் அத்துளசிமாலையைப்போல் உகக்கின்றான் என்று குறிப்பாகக் கூறியுள்ளார். துளசிக்கு மணம் எப்படி இயற்கையோ அவ்வளவு இயற்கையாக அமைந்து விடுகிறதாம் பாகவதனிடம் பக்திமணம். திருமால் அடியார்களுக்குத் திருத்துழாய் ஒரு தூய நினைவுக் குறியாகவும் உதவுகிறது.

பலநிறப் பூக்களோடு இலை, கொழுந்துகளையும் வைத்து, மாலை கட்டும் வழக்கம் இன்றும் உண்டு. 'திருமாலை'யில் தொண்டரடிப் பொடியாழ்வார் தமது கமலச்செங்கண் ஐயனை,

ஆயர்தம் கொழுந்தே

என்று அழைத்து மகிழ்வதையும் நாம் காண்கிறோம்.

ஒரு பூங்காவிலே பூக்களை அநுபவிப்பதுபோல் பச்சிலைகளையும் பார்த்துப் பூரிக்கிறோம். கொழுந்தையும் கண்ணுற்றுக் குதூகலம் அடைகிறோம். இறைவனுடைய எளிமையை மட்டுமா கொழுந்து நினைவூட்டுகிறது!

ஒரு மரத்தின் அடிப்பகுதியில் கேடு நேர்ந்தாலும் மண்ணில் புதைந்து கிடக்கும் வேருக்குக் கெடுதி ஏற்பட்டாலும் கொழுந்துதான் முதல் முதல் வாடுகிறது. அப்படியே தாழ்ந்தவர் பொருட்டும், 'ஐயோ' என்று முகம் காட்டி அந்த முகத்திலே வாட்டத்தையும்காட்டுகிறானாம் இறைவன்.

திருமாலையில், 'தண்துழாய் மாலை மார்ப'னை, 'தேனுலாம் துளவமாலைச் சென்னியா'னை, 'காதலி காதலனை'ச் சோலையில் சந்திப்பதுபோல் சந்திக்கிறோம். திருவரங்கம் பெரிய கோயிலை இங்கே ஓர் அழகுச் செல்வமான சோலையாகவே காண்கிறோம்.

Koviloor Digital Library

'வண்டுகள் முரலும் சோலை, மயில்கள் ஆடும் சோலை, குயில்கள் கூவும் சோலை, மேகங்கள் வந்து படியும் சோலை' இப்படி நித்திய வசந்தமான சோலையில் ஸ்ரீரங்கநாதன் எவ்வளவு உகப்புடன் வந்து அமர்ந்திருக்கிறான். ஏன்? பக்தர்களின் காதலைப் பெறுவதற்காகத்தான்.

சோலைசூழ்ந்த அரங்கத்திலே இன்று கட்டடங்களைத் தான் அதிக அளவில் காண்கிறோம். உள்ளத்தை, ஆன்மாவைச் சிறைசெய்யும் செயற்கை நாகரிகக் கட்டடங்களைப் பார்க்கிறோம். ஆனால் நித்திய வசந்தமான உண்மைத் திருவரங்கத்தை, ஆழ்வார்களை வசீகரித்த அந்தப் பெரிய கோயிலைத் 'திருமாலை' என்ற பிரபந்தத்திலே இன்றும் காண்கிறோம். ஆழ்வாரின் உள்ளமாகிய வண்டின் ரீங்காரத்தோடு அழகிய மணவாளன் அமர்ந்திருக்கும் அந்த அழகிய சோலையைக்காண்கிறோம்.

Koviloor Digital Library

8. இவர் கண்ட அழகிய மணவாளன்

திருமண்டங் குடியிலிருந்து திருவரங்கத்திற்கு வந்ததும் இவர் கண்ட காட்சியும் அடைந்த உணர்ச்சியும் திருமாலையில் ஓர் அதிசயமான கவிதைச் சித்திரம் பெற்றிருக்கின்றன;

வண்டினம் முரலும் சோலை,
மயிலினம் ஆலும் சோலை,
கொண்டல்மீ(து) அணவும் சோலை,
குயிலினம் கூவும் சோலை,
அண்டர்கோன் அமரும் சோலை,
அணிதிரு அரங்கம்என்னா
மிண்டர்பாய்ந்(து) உண்ணும் சோற்றை
விலக்கிநாய்க்(கு) இடுமின் நீரே.

(வண்டு இனம் - வண்டுகளின் கூட்டங்கள். முரலும் - ரீங்காரம் செய்யும். ஆலும் - ஆடுகிற. மீதுஅணவும் - மேலே வந்து படிகிற. அண்டர்கோன் - தேவர்களுக்குத் தலைவனாகிய அழகிய மணவாளப் பெருமான். அணி திருஅரங்கம் - ஆபரணமாக அணிந்துகொண்டிருக்கிற திருவரங்கம். என்னா - என்று சொல்லமாட்டாத. மிண்டர் - நன்றியறிவில்லாத மூர்க்கர்கள். இடுமின் - இடுங்கள்.)

தமிழகத்தை அழகு செய்யும் ஆறுகளில் தலைசிறந்தது காவிரி. இந்நதியின் போக்கிலே இயற்கை யழகுகள் வாய்ந்த இடங்கள் பல உண்டு. திருவரங்கமோ அழகு நிலையம் மட்டுமன்று; ஆன்ம சம்பத்திற்கும் ஒரு பெருங் கருவூலம். இக்கருவூலத்தைக் கண்டதும் காதல் பிறந்துவிடுகிறது, விப்பிர நாராயணரின் உள்ளத்திலே.

Koviloor Digital Library

வண்டுகள் ரீங்காரமிட்டு உலாவிய தெய்வச் சோலையிலே இவர் உள்ளமும் ஒரு வண்டாகிப் பாய்கிறது. பறக்கிறது. மயிலோடு மயிலாகத் தோகை விரித்து ஆடுகிறது. இவர் உள்ளத்திலே ஒடுங்கிக் கிடந்த சௌந்தரிய உணர்ச்சி, குயிலாகக் கூவ ஆசைப்படுகிறது; கவிதைக் குரல்.

'இந்தச் சோலையின் அழகுகளைக் கண்டுதான் என் அழகனும் அமர்ந்திருக்கிறான் இங்கே; நானும் இங்கேயே நித்திய வாசம் செய்து பணி புரிந்துகொண்டிருப்பேன்' என்று தீர்மானிக்கிறார். இந்த உள்ளக் கிளர்ச்சி, நிலையானதொரு புதிய உணர்ச்சியாவதற்கு ஓர் அழகுப் பூந்தோட்டம் அமைத்து மாலைகள் கட்டிப் பணிபுரிவதே நல்லவழி யென்று கருதுகிறார்.

தமது தாபத்தைத் தீர்க்கும் இந்த அநுபவம் எல்லாருக்கும் உரியது என்ற எண்ணமும் உண்டாகிறது. இதைப் புறக்கணிப்பவர்மீது கோபமும் உண்டாகிறது. தர்மாவேசமாகிற கோபந்தான் இது. ஆள் சேர்க்கப்படுகிற பாடுதான் இது.

''அழகிய மணவாளன் உங்களுக்காக இப்படி வந்து கிடக்கிறானே, உங்கள் ஆத்மாவைப் போஷிக்க வேணு மேயென்று! நீங்களோ நன்றியறிவில்லாமல் உடலை ஊட்டி வளர்ப்பதிலேயே கருத்தூன்றிக் கிடக்கிறீர்களே!'' என்கிறார்.

ஒருநாள் ஒரு பிடி சோறு இட்டவன், வாசலைப் பற்றிக் கிடக்கிற நாயின் நன்றியறிவைக் குறிப்பாகச் சுட்டிக் காட்டி, 'இறைவன் அருள் மழை பொழிந்த வண்ணமாக இருப்பதாலன்றோ உயிர்க்குலம் தழைக்கிறது, மானுடம் செழிக்கிறது? எனவே அன்புருவாகிய அழகனுக்கு நன்றி செலுத்துவது நமது கடமை' என்பதை வற்புறுத்துகிறார்.

தம் அழகனை இவர் சோலை சூழ்ந்த திருவரங்கத்தில் மட்டுமா காண்கிறார்! இயற்கை யெங்கும் பார்க்கிறார். வானத்திலுள்ள சூரிய சந்திரரும் நட்சத்திரங்களும் மட்டுமா

Koviloor Digital Library

இறையழகையும், அன்பையும் அருளையும் நினை வூட்டுகின்றன? நீலவானமும் நீலக்கடலும் மட்டுமல்ல; பச்சை கண்ட இடமெல்லாம் பெருமானின் பச்சை நிறம் தோன்றுகிறதாம்.

பச்சைபோர்த்த மலையில் அழகனின் மேனி காண்பவர், செந்தாமரையிலே முகம் கண் முதலியவற்றைக் காண்பவர், கொழுந்திலும் இறைவனது இரக்கத்தைக் காண்பவர், பவளத்திலே சிவந்த திருவாயைக் காண்பவர் பார்க்கு மிடமெங்கும் நீக்கமற நிறைந்து, முட்டித் ததும்பிக் கொண்டிருக்கும் ஒரு முடிவில்லாத அழகுப் பெருங்கடலாகக் கண்டு அநுபவிக்கிறார் தமது இஷ்டமூர்த்தியை.

இந்தக் காட்சியிலே - இத்தகைய காட்சியிலேதான் - வாழ்க்கையில் சுவை பிறக்கிறது என்கிறார். எத்தகைய சுவை தெரியுமா?

பச்சைமா மலைபோல் மேனிப்
பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா! அமரர் ஏறே!
ஆயர்தம் கொழுந்தே! என்னும்
இச்சுவை தவிர யான்போய்
இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகர் உளானே.

(அமரர் ஏறே - தேவர்களுக்குத் தலைவனே; நித்திய சூரிகளுக்குத் தலைவனே. இந்திரலோகம் - (இங்கே) பரமபதம்.) என்பது இவர் வாக்கு.

எத்தனையோ அழகுகள் எப்படியெல்லாம் கொட்டிக் கிடக்கின்றன விண்ணிலும் மண்ணிலும்! இறைவனது அழகுப் பொக்கிஷத்திற்கு ஓர் எல்லை இல்லை. இந்த அழகு களையெல்லாம் தோற்றுவிக்கும் அழகனுக்குத் திருமேனி உண்டு என்கிறது பக்திமதம்.

Koviloor Digital Library

ஸ்தூலமான மேனி இல்லை; அதிசூட்சுமமான மேனிதான். எனினும் அகக்கண்ணுக்கு இலக்காகும் மேனியை மனோபாவம் பிரத்தியட்சமாக்கும்போது, இயற்கையின் அழகுப் பொருள்களைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டியது தானே. ஆகவே,

பச்சைமா மலைபோல் மேனி

என்கிறார் ஆழ்வார் தமது இறைவன் திருமேனியை. இவர் உகந்தது எவ்வுருவமோ, அவ்வுருவம் அவனும் உகந்த திருமேனிதானே!

கண்ணும் குளிர்ந்து, நெஞ்சும் குளிரும்படி, சகல தாபங்களும் கண்டபோதே ஆறும்படி இருக்கிறதாம் திருமேனி; அருளழகு நெருங்கி நெருங்கி ஒரு வடிவமாகி விட்டதுபோல். அந்தக் கருணையை அப்படியே வடிவில் காணலாம் என்று சொல்லும்படி அமைந்திருக்கிறதாம் அந்தப்பச்சைமா மேனி. இந்த மேனியைச் சிந்திப்பதும் தியானிப்பதும் வசீகர உணர்ச்சியைத் தூண்டக்கூடியன அல்லவா?

தம்மை உகக்கச் செய்வது இறைவனது குண அழகென்று இவர் இப்போது சொல்லவில்லை. குணஅழகின் அறிகுறி யான வடிவழகே தம்மை உகப்பிக்கிறது என்கிறார்.

திருமேனி ஒரு பெருங்கடல்போல் இருக்க, அழகுக் கடலின் சுழிகள்போல் காண்பன அவயவங்கள் என்றும், பச்சை மலையிலே பவளம் படர்ந்ததுபோல் காணப்படுகிறது செவ்வாயின் அழகு என்றும் கூறுகிறார். இந்த அழகு எப்படி வந்தது?

சந்திரோதயத்தில் கடல் கொந்தளிப்பதுபோல், அன்பர்களின் 'முகசந்திர தரிசனத்தினாலே வந்த அழகு' இப்படி வெள்ளமிடுகிறது என்பது வியாக்கியானம். இறை வனைக் கண்டு அடியவர்கள், அன்பர்கள் அகமகிழ்ச்சியுற்று

Koviloor Digital Library

முகமலர்ச்சி பெறுவதாகவும், ஒரு புதிய அழகு பெறுவதாக வும் சாதாரணமாகக் கூறுவது உண்டு. ஆனால் இங்கே, 'அன்பர்களின் முகசந்திரனைக் காணப்பெற்றோமே' என்ற அகக்களிப்பினால் இறைவன் அழகு பெறுகின்றான் என்று உரையாசிரியர் கூறுவது ஆழ்வாரின் உள்ளக்குறிப்பை உள்ளபடியே கண்டுகாட்டுவதுதான்.

இறைவனது மேனியழகிற்கு வசப்படாமல் இருந் தாலும், 'பவளவாய்'க்கு வசமாகாமல் இருக்க முடியுமா? அன்பர்களை க்ஷேமம் வினவத் துடித்துக்கொண்டிருக்கிற உதடுகளும் அழகுபெற்றுப் பவளச் செவ்வாயாகக் காண் கின்றன.

பவளவாய்க்குத் தப்பினவர்களையும் 'கமலச் செங்கண்' வலைபோட்டுப் பிடித்துக்கொள்ளுமாம். வாயால் சொல்ல முடியாததையும் கண்கள் பேசித் தீர்த்துவிடுகின்றன என்பது குறிப்பு. கருணையின் சாளரவாசல் அல்லவா கண்கள்!

மலை, பவளம், தாமரைபோல் நாள் செல்லச் செல்ல அழிந்து போகும் அழகு அன்று இறைவனது அழகு. தன்னிடம் அகப்பட்டுக் கொண்டவரை நழுவவிடாத வசீகரசக்தியின் இந்த அழகைக் கொண்டு இந்த இரண்டு உண்மைகளையும் ஒருங்கே நினைவூட்டுவது அச்சுதன் என்ற திருப்பெயர் என்பர்.

இந்த அழகனைத் தேவதேவன் (அமரர் ஏறு) என்கிறார், இவனது ஸர்வ சக்தியை நினைத்துப் பார்க்கும்போது. இவனது எளிமையை நினைத்துப் பார்க்கும்போதோ, 'ஆயர்தம் கொழுந்தே!' என்று அழைக்கிறார்.

இத்தகைய பக்திச் சுவைக்கு முக்திச் சுவையும் ஈடாகாது என்கிறார்.

இச்சுவை தவிர யான்போய்
இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்

என்று சொல்லுகிறாரல்லவா?

Koviloor Digital Library

நடராஜ தரிசனத்திற்காக மனிதப் பிறவியும் வேண்டும் என்று கூறும் அப்பர் சுவாமிகளின் மனநிலையை நாம் இங்கே நினைவூட்டிக் கொள்ளலாம்.

இந்த அழகனை 'அரங்கமா கோயில் கொண்ட கரும்பு' என்கிறார். இந்த அழகன் ரஸமயமாக இருக்கிறான் என்பதைக் குறித்தும் கரும்பைச் சுவைப்பதிலுள்ள கஷ்டமும் இங்கே இல்லை: 'கண்ணால் பருகும் கரும்பு' என்ற பொருள்படப் பேசுகிறார்:

சுரும்(பு)அமர் சோலை சூழ்ந்த
அரங்கமா கோயில் கொண்ட
கரும்பினைக் கண்டு கொண்(டு)என்
கண்இணை களிக்கு மாறே.

(சுரும்பு அமர் - வண்டுகள் பொருந்திய. அரங்கமா கோயில் கொண்ட - மாட்சிமை தங்கிய திருவரங்கத்தை உறைவிடமாகக் கொண்ட. கண் இணை - இரண்டு கண்களும். களிக்கும் ஆறே - களிப்படைகிற விதம் என்னே!)

இந்தக் கரும்பைக் கண்டதும் இரும்புபோல் வலிய நெஞ்சமும் கொஞ்சம் கொஞ்சமாக உருகத் தொடங்கிவிட்டது என்கிறார். இந்த அநுபவத்தை நினைக்க, ஆனந்தக் கண்ணீர் அரும்பு அரும்பாகத் துளித்து, அழகனை இடைவிடாது சேவிக்கவொட்டாமல் இடைச்சுவர்போல் கண்களை மறைத்துத் தடை செய்கிறது என்கிறார்.

பாற்கடலிலே கண்வளர்ந்தருள்கிறான் பகவான் என்று புராணங்கள் வாயிலாகக் கேள்விப்பட்டிருந்தார். அதே பகவான் காவிரிக்கு இடையே வந்து கண்வளர்ந்தருளும் இந்த அழகையாவது பார்த்து அநுபவிக்கலாமென்று வந்து சேர்ந்தார். இவர் வந்த சமயம் காவிரி பெருகிப் பெருவெள்ளம் கோத்து, ஒரு கடல்போலப் புரண்டு கொண்டிருந்ததாம்.

Koviloor Digital Library

இந்தக் காட்சி, 'அந்தப் பாற்கடலிலே கண்வளரும் அதே அழகன்தான் இங்கும் வந்து கண் வளர்கிறான்' என்ற நம்பிக்கையை உறுதிப்படுத்துகிறது.

விரிதிரைத் திவலை மோத
எறியும்தண் பரவை மீதே
தனிகிடந்(து) அரசு செய்யும்
தாமரைக் கண்ணன் எம்மான்
கனியிருந் தனைய செவ்வாய்க்
கண்ணனைக் கண்ட கண்கள்
பனிஅரும்(பு) உதிரு மாலோ;
என்செய்கேன் பாவி யேனே?

(விரிதிரைத் திவலை மோத - அலைகளின் திவலைகள் இனிதாக மோதியடிக்க. எறியும் - கொந்தளிக்கிற. தண் - குளிர்ந்த. பரவைமீது - (இங்கே) கடல் போன்ற காவிரியிலே. தனிகிடந்து - தனியே வந்து கண்வளர்ந்து. எம்மான் - எமக்குத் தலைவனாய். கனியிருந்தனைய செவ்வாய் - கொவ்வைக்கனி போலச் சிவந்த வாயை உடைய. பனி அரும்பு - குளிர்ந்த கண்ணீர்த் துளிகள்.)

'இங்கே நமக்கு அன்பன் ஒருவனாவது கிடைக்கக் கூடுமோ?' என்று பாற்கடலை விட்டுவிட்டு இப்படித் தனியே வந்து ஒரு பரதேசிபோலக் கிடக்கிறானாம். 'நான் தனியே கிடக்கிறேனே; நீயாவது அன்பனாகி வரமாட்டாயா?' என்று அவன் சொல்லாமல் சொல்லுவது போன்ற ஓர் உணர்ச்சி இவருக்கு ஏற்பட்டது. எனினும் அந்தக் கண்ணழகைப் பார்த்தால், 'அந்த அழகாலேயே இவன் அனைவரையும் அகப்படுத்திக் கொண்டு அரசுபுரிய வல்லன்' என்று தோன்றுகிறதாம்.

இந்த உணர்ச்சி ஏற்பட்டதும் ஆழ்வார் இந்த அழகிற்குத் தோற்று, இந்த அரசனுக்குக் குடியாக அமர்ந்துவிட்டாராம். எனினும், 'இந்த அழகை இஷ்டப்படி அநுபவிக்கமுடியாமல்

Koviloor Digital Library

ஆனந்தக் கண்ணீரே தடைசெய்கிறது! இந்தச் சங்கடத்திற்கு எங்கே போய் முறையிட்டுக் கொள்வது' என்பது இவர் மனநிலை.

ஸ்ரீரங்கநாதன் பள்ளிகொண்டிருப்பதைத்தான் இவர் எப்படி அநுபவித்திருக்கிறார் பாருங்கள்!

குடதிசை முடியை வைத்துக்
குணதிசை பாதம் நீட்டி,
வடதிசை பின்பு காட்டித்
தென்திசை இலங்கை நோக்கி
கடல்நிறக் கடவுள் எந்தை
அரவணைத் துயிலு மாகண்(டு)
உடல்எனக்(கு) உருகு மாலோ
என்செய்கேன்? உலகத் தீரே!;

(குடதிசை - மேற்குத்திசை. குணதிசை - கிழக்குத்திசை. கடல்நிறக் கடவுள் - கடல் போன்ற நீல நிறக் கடவுள். அரவணை - சர்ப்பசயனத்தில். துயிலுமா கண்டு - அறிதுயில் அமர்ந்திருக்கும் விதத்தைக் கண்டு.)

என்ற பாசுரத்திலே, அழகிய மணவாளன் யோக நித்திரை புரிவதையும், உளம் உருக, உடல் உருக இத் தொண்டர் பெருமான் சேவித்துக்கொண்டிருப்பதையும் இன்றும் பார்த்துப் பார்த்து அநுபவிக்கலாம்.

நாலு திசைகளுக்கும் தன் தொடர்பு உண்டாகும்படி அறிதுயில் அமர்ந்திருக்கிறானாம். தன் அந்தரங்க பக்தனான விபீஷணனுக்காகத் தென்திசையை அன்போடு நோக்கு கிறானாம். 'இவ்வளவும் ஒரு வியாஜந்தான்; எனக்காகவே இப்படி வந்து கிடக்கிறான்' என்றுகூடத் தோன்றுகிறது ஆழ்வாருக்கு.

அழகிய மணவாளனை இவர்

Koviloor Digital Library

பாயும்நீர் அரங்கம் தன்னுள்
பாம்பணைப் பள்ளி கொண்ட
மாயனார்

என்று குறிப்பிடுகிறார், இவரது ஆச்சரிய சக்தியைக் கருதும்போது.

'நெடுந்தூரம் ஓடிப்போன என்னையும் பிடித்து இழுத்துக் கொண்ட சக்தி எவ்வளவு ஆச்சரியமானது!' என்பதைக் குறிப்பாகக் கொண்டு இந்த வாக்கிலும் இவரது வரலாற்றுக் குறிப்பு ஒன்றை உய்த்துணர்ந்துகொள்ளலாம் என்பர். எப்படியும் இந்த ஆச்சரிய அழகில் ஈடுபடுவோர் கொஞ்சகாலம் இழந்திருந்தாலும் முற்றும் இதை இழந்து வாழ முடியாது என்ற குறிப்பை இச்செய்யுளில் காண்கிறோம் என்பதில் ஐயமில்லை.

தமது அழகிய மணவாளனின் உருவத்தைத்தான் எவ்வளவு விவரமாக இவர் வருணிக்கிறார்! ''என்ன தேஜஸ்!'' என்கிறார். கிரீடத்தை வருணிக்கிறார்; தோளை வருணிக்கிறார்; மார்பையும் வருணிக்கிறார்; கண்களை வருணிக்கிறார்; வாயை வருணிக்கிறார்; இதழையும் வருணிக்கிறார்.

இவர் எப்படித்தான் நீண்டகாலம் இந்த அழகனை இழந்திருக்க முடியும்?

மாயனார் திருநன் மார்வும்
மரகத உருவும் தோளும்
தூயதா மரைக்கண் களும்
துவர்இதழ்ப் பவள வாயும்
ஆயசீர் முடியும் தேசும்
அடியரோர்க்(கு) அகல லாமே?

(மார்வும் - மார்பும். மரகத உருவும் - மரகத மணி போன்ற திருமேனியும். துவர்இதழ் - சிவந்த அதரமும். ஆயசீர் முடியும் - வேலைப்பாடுள்ள அழகிய திருமுடியும். தேசு -

Koviloor Digital Library

தேஜஸ். அடியரோர்க்கு - அடியார்களுக்கு. அகலலாமே - இழக்கத் தகுமோ?)

என்ற வாக்கிலே காணும் அழகிய மணவாளன்தான் இவரை எப்படிப் பிரிந்திருக்க முடியும்?

திருவரங்கத்தை இந்த ஆழ்வார்.

கங்கையிற் புனித மாய
காவிரி நடுவு பாட்டுப்
பொங்குநீர் பரந்து பாயும்
பூம்பொழில் அரங்கம்

(கங்கையிற் புனித மாய - கங்கையைக் காட்டிலும் புனிதமாகிய. நடுவுபாட்டு - நடுவிடத்திலே. பூம்பொழில் - அழகிய சோலை.)

என்றும்,

வெள்ளநீர் பரந்து பாயும்
விரிபொழில் அரங்கம்

என்றும் வருணிக்கிறார்.

இந்தப் பூம்பொழிலில், பசுஞ்சுடர்ச் சோலையில் அமைந்திருக்கும் கோயிலை,

அணியினார் செம்பொ னாய
அருவரை அனைய கோயில்

(அணியின் ஆர் - அழகு நிறைந்ததாய். செம்பொனாய - செம்பொன்னாலாகிய. அருவரை அனைய - ஒரு சிறந்த மலையை ஒத்த.)

என்று வருணிக்கிறார்.

பசும்பொழிலில், பொன்மயமான கோயிலில் நீலரத்தினம் போலக் கிடக்கிறானாம் எம்பெருமான்.

மணியனார் கிடந்த ஆற்றை
மனத்தினால் நினைக்க லாமோ!

Koviloor Digital Library

(மணி அனார் - நீலரத்தினம் போன்ற பெருமான். கிடந்த ஆற்றை - கண்வளர்ந்தருளிய விதத்தை. நினைக்கலாமோ - அளவிட்டு நினைக்கக் கூடுமோ!)

என்று பாடுகிறவர், ''என் அழகனை மறக்கவும் முடிய வில்லை; மனத்தினால் நினைக்கவும் முடியவில்லையே!'' என்கிறார். உழக்கைக் கொண்டு சமுத்திரத்தை அளந்த கதைதான் அழகிய மணவாளன் என்ற அழகுப் பெருங்கடலை மனத்தினால், நினைப்பினால் அளவிட்டுப் பார்ப்பது என்பது குறிப்பு.

தம் அழகனை 'மாயனார்' என்று குறிப்பிட்டதுபோல் 'கள்வனார்' என்றும் குறிப்பிடுகிறார். உள்ளத்தைக் கொள்ளை கொண்ட கள்வனல்லவா?

கள்வனார் கிடந்த வாறும்,
கமலநன் முகமும் கண்ணும்
உள்ளமே, வலியை போலும்!

(வலியை போலும் - நீ கல்லைப்போல் வலிமையாக இருக்கிறாய் போலும்.)

என்ற வாக்கிலும் இவரது பக்திக் காதலின் ஆழத்தைக் காணலாம்.

தர்மமாகிற சுவர் வடிவெடுத்து வந்ததுபோல் இவருக்குக் காட்சி கொடுக்கிறான் அழகிய மணவாளனன்.

காதலித்த உருவாகி
அறம்வளர்க்கும் கண்ணாளன்

அல்லவா?

அவரவர்களுடைய பக்குவத்திற்கும் ருசிக்கும் தக்கபடி தெய்வங்களை எங்கும் நாட்டியிருப்பவனே திருவரங்கத்தை இவருக்குக் காட்டினானாம். உய்ய விரும்புவோருக்கு உய்யும் வண்ணம் நல்லருள் காட்டிய வழிதான் இவரைத் திருவரங்கத்தில் கொண்டு சேர்த்ததாம்.

Koviloor Digital Library

நாட்டினான் தெய்வம் எங்கும்
நல்லதோர் அருள்தன் னாலே
காட்டினான் திருவ ரங்கம்
உய்பவர்க்(கு) உய்யும் வண்ணம்

என்ற வாக்கிலே, அழகிய மணவாளன் தனது ஒப்பற்ற கிருபையினால் அரங்கமாநகரைத் தமக்குக் கைங்கரிய பூமியாகக் காட்டியதாகச் சொல்லுகிறார்.

தமக்கு இடையிடையே தோன்றிய சந்தேகங்களை யெல்லாம் அழகன் போக்கினான் என்ற குறிப்புடன்,

உய்யப்போம் உணர்வி னார்கட்(கு)
ஒருவன்என்(று) உணர்ந்த பின்னை,
ஐயப்பா(டு) அறுத்துத் தோன்றும்
அழகன்ஊர் அரங்கம் அன்றே.

(ஒருவன் என்று உணர்ந்த பின்னை - கடவுள் ஒருவன் உண்டு என்ற உணர்ச்சி பிறந்த பின்பு. ஐயப்பாடு - சந்தேகங்கள்.)

என்று பிறரும் உய்ந்து போகுமாறு அருளிச் செய்கிறார்.

இவரது குறிக்கோள்,

பணிவினால் மனம தொன்றிப்
பவளவாய் அரங்க னார்க்குத்
துணிவினால் வாழ

வேண்டும் என்பதுதான். இந்தத் துணிவிலிருந்து இவர் வழுவியிருக்கக் கூடும் என்பதற்கும் இப்பாடல்களில் சான்று கிடைக்கிறது.

மேலும் தமது குறிக்கோளை நோக்கும்போது இவருக்கு எத்தகைய பணிவும் பணிவாகத் தோன்றவில்லை; எத்தகைய தூய்மையும் தூய்மையாகத் தோன்றவில்லை. பூதக் கண்ணாடியில் பொருள்களைப் பார்ப்பதுபோல் சின்னஞ்சிறு

Koviloor Digital Library

குறைகளையும் பெருங்குறைகளாகவே பார்க்கத் தொடங்கி விட்டார் என்று கருதலாம்.

அதனால்தான்,

> **மனத்தில்ஓர் தூய்மை இல்லை;**
> **வாயில்ஓர் இன்சொல் இல்லை**

என்றெல்லாம் கடுமையாகத் தற்சோதனை செய்து பார்க்கத் தொடங்கிவிட்டார்.

'மூர்க்கன்' என்றும் 'பொய்யன்' என்றும் 'சூதன்' என்றும் 'கள்வன்' என்றும் தம்மைச் சொல்லிக்கொண்டதும் இவரது குறிக்கோளின் உயர்வையே காட்டுகிறது. எவ்வளவு பக்திக் காதல்கொண்டிருந்தும்,

> **கள்ளமே காதல் செய்(து)உன்**
> **கள்ளத்தே கழிக்கி ன்றாயே!**

என்று தம் உள்ளத்தை நோக்கிச் சொல்லிக்கொண்டதற்கும் குறிக்கோளின் உயர்வே காரணமெனக் கருதலாம்.

அழகிய மணவாளனிடம் இவர் தாம் கொண்டிருந்த காதலையே 'திருமாலை'யாகத் தொடுத்திருக்கிறார் என்று கூறுவது பொருத்தமே. ஒரு பூவைக் கண்டால் ஒரு காதலன், 'இதை என் காதலிக்குக் கொண்டுபோய்க் கொடுப்பேன்' என்று கருதுவது இயல்பு. தொண்டரடிப்பொடியாழ்வாரோ தம் காதலுக்குரிய அழகிய மணவாளனது பொன்னடி புனைவதற்கே எல்லாப் பூக்களும் வேண்டுமென்று ஆசைப்படுகிறார்.

காதலி, காதலன் குணத்தைச் சொல்வதற்கே தனக்குத் தெரிந்த மொழிகளெல்லாம் பயன்படவேண்டுமென்று கருதுவதுபோல் இவரும், 'தீ திலா மொழிகள் கொண்டு' அழகிய மணவாளனின் திருக்குணத்தை எடுத்துரைப்பதையே பொழுது போக்காகக் கொள்ள விரும்புகிறார்.

Koviloor Digital Library

'அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே' என்ற காதலர் நிலையை இவரும் அடைந்து, அழகிய மணவாளன் தன்மீது கொண்டிருக்கும் காதலை எண்ணியெண்ணிப் பார்த்து, அவன் பால் தமக்குள்ள காதல் போதாது, போதவே போதாது என்று கருதுகிறார். எனவே,

காதலால் நெஞ்சம் அன்பு
கலந்திலேன்!

என்றுகூடச் சொல்லுகிறார்.

இந்த அதிசயமான காதல் நிலையை இப்பாட்டிலே காணலாம்:

போதெல்லாம் போது கொண்(டு)உன்
பொன்னடி புனைய மாட்டேன்;
தீதிலா மொழிகள் கொண்(டு)உன்
திருக்குணம் செப்ப மாட்டேன்
காதலால் நெஞ்சம் அன்பு
கலந்திலேன்; அதுதன் னாலே
ஏதிலேன் அரங்கற்(கு) எல்லே!
என்செய்வான் தோன்றி னேனே?

(போது எல்லாம் - எல்லாக் காலங்களிலும். போது கொண்டு - பூக்களைக்கொண்டு. ஏதிலேன் - ஒரு காரணத்தாலும் தொடர்புபெற்றவன் அல்லேன். எல்லே - என்னே; ஐயோ.)

இதே காதல் நிலையில்,

ஆவியே! அமுதே! என்தன்
ஆருயிர் அனைய எந்தாய்!
பாவியேன் உன்னை அல்லால்
பாவியேன் பாவி யேனே.

Koviloor Digital Library

(அனைய - போன்ற. எந்தாய் - என் தலைவனே. பாவியேன் பாவியேனே - பாவியாகிய நான் நினைக்கவும் மாட்டேன்.)

என்ற வாக்கில் தெளிவாகக் காண்கிறோம்.

அழகிய மணவாளப் பெருமானிடத்தில் அவருக்குள்ள காதல், ஸாரம்சத்தில் பெற்றோரிடம் குழந்தை கொள்ளும் காதல்தான்.

தெளிவிலாக் கலங்கல் நீர்சூழ்
திருவரங் கத்துள் ஓங்கும்
ஒளியுளார் தாமே யன்றே
தந்தையும் தாயும் ஆவர்;
எளியதோர் அருளும் அன்றே
என்திறத்(து)? எம்பி ரானார்
'அளியன்நம் பையல்' என்னார்;
அம்மவோ! கொடிய வாறே!

(என் திறத்து - என் விஷயத்தில் அவர் செய்யவேண்டியதை. எளியதோர் அருளும் அன்றே - சாமானிய மானதொரு கிருபை மாத்திரமேயன்றோ. அளியன் நம் பையல் - நம்முடைய கருணைக்கு உரியவன் இவன்; நம்முடைய பையன். என்னார் - என்று சொல்லுகிறாரில்லை. கொடிய ஆறே - இவருடைய தன்மை மிகவும் கொடுமையாக இருக்கிறதே!)

இந்தப் பாட்டிலே தொண்டரடிப்பொடியாழ்வாரின் குழந்தையுள்ளத்தைக் கண்ணாடியில் காண்பதுபோல் கண்டு கொள்ளலாம்.

வெள்ளமிட்டு வரும் காவிரி மேலும் மேலும் பெருகி வருவதால், அந்தப் புதுவெள்ளம் தெளிவில்லாமல் கலங்கிக் காண்கிறதாம். இவரது மனக் கலக்கத்திற்கும் புதிய உணர்ச்சிப் பெருக்கத்திற்கும் இது ஓர் அறிகுறி.

காவிரிக்கு இடையே இவர் கண்ட அழகிய மணவாளன் இவருக்கு அந்தகாரத்திற்கிடையே தீபம் போலக் காட்சி

Koviloor Digital Library

அளித்தான். வழி, துறை தெரியாமல், ஒரு கலங்கரை விளக்கமும் காணாமல் கழிந்த வாழ்க்கை அந்தகார வாழ்வுதானே?

பரமபதத்தில் நித்திய சூரிகளின் நடுவே பகவான் காட்சி அளிப்பது சூரியர்களுக்கு நடுவே சூரியன் காட்சி அளிப்பது போலத்தான் என்பர். இருள்தரு மாஞாலமாகிய இவ்வுலகிலே திருவரங்கத்தில் அழகிய மணவாளன் காட்சி தருவது, 'இருள் துறக்க வானம் கை விளக்கு எடுத்தது' என்று சொல்லத்தக்க காட்சியாகத் தோன்றியது தொண்டரடிப்பொடியாழ்வாருக்கு.

உடனே, 'நம்முடைய தந்தையும் தாயும், இங்கே யல்லவா இப்படிக் காட்சி தருகிறார்கள்?' என்ற ஞானம் பிறந்தது. இந்த ஞானத்துடன், 'என்னை ரட்சிப்பதற்காக இவர் அதிக சிரமத்தையும் மேற்கொள்ள வேண்டியதில்லையே!' என்ற எண்ணமும் உண்டாயிற்று.

''விபீஷணன் முதலானவர்களை ரட்சிப்பதற்கு வில்லும் அம்பும் எடுத்துக்கொண்டு எவ்வளவு தூரம் சிரமப்பட்டீர்!'' அப்படியெல்லாம் செய்ய வேணுமா என்னைக் காப்பதற்கு? ஒருகால் குளிர நோக்கியருளினால் என் தாபம் தீரும்; பாபம் போகுமே!'' என்கிறார்.

''நான் உம்மைத் தாயும் தந்தையுமாக நினைத்திருக்க, நீர் ஜோதிவாய் திறந்து, 'அடே பையா!' என்று ஒரு வார்த்தையும் சொல்லவில்லையே'' என்கிறார்.

'அளியன், நம் பையல்' என்னார்;
அம்மஓ! கொடிய வாறே!

என்ற வாக்கிலே விப்பிரநாராயணர் தொண்டரடிப்பொடி யாழ்வாராகப் பரிணமிப்பதற்குக் காரணமான அந்த ஆச்சரியமான மனநிலையை அப்படியே காண்கிறோம்.

அழகிய மணவாளன், இத்தகைய உள்ளத்தில் புகுந்து, தன்பால் அன்பு பெருக வைத்த அழகனாகவும், ஐயப்பாடு அறுத்துத் தோன்றும் அழகனாகவும் காட்சி வழங்கி,

Koviloor Digital Library

எனக்(கு)இனிக் கதிஎன் சொல்லாய்
என்னைஆள் உடைய கோவே!

என்று கேட்டவரை ஸ்ரீவைஷ்ணவ உலகின் கதியாகிய பன்னிரண்டு பக்திப் பெருஞ்சோதிகளில் ஒருவராக்கி வைத்தருளினான் என்பது பிரசித்தம்.

'செம்பொனாய அருவரை அனைய கோயில் மணியனார்' - அதாவது, பொன்மலையைப் புடைபடத் துளைத்து அது விம்மும்படி அதிலே ஒரு நீலரத்தினத்தை அழுத்திவைத்தது போலக்கோயிலில் கண்வளரும் பெருமாள்' என்று இவர் போற்ற, இவர் தம் வாக்கிலே கோயில் கொண்டருளும் அழகிய மணவாளனை அன்றுபோல் இன்றும் நமக்குக் காட்டுகிறது 'திருமாலை.'

இத்தனை அடியர் ஆனார்க்(கு)
இரங்கும்நம் அரங்க னாய
பித்தனை

இதோ பாருங்கள் என்று காட்டுகிறார்.

★ ★ ★

முதலாழ்வார்கள் திருவரங்கத்தைக் காட்டிலும் திருவேங்கடத்தில் ஈடுபட்டனர் என்று கூறலாம். திருமழிசைப் பிரான் கும்பகோணம் முதலான சில திருப்பதிகளை உகந்து பாடினார். திருப்பாணாழ்வார் திருவரங்கத்தைப் பாடும்போது திருவேங்கடத்தையும் நினைத்துக்கொண்டு பாடினார். தொண்டரடிப் பொடி யாழ்வாரோ 'அழகிய மணவாளன் என்ற பெரிய பெருமாளை அல்லது வேறு அறியாதிருப்பார்' என்பர் பெரியவாச்சான் பிள்ளை.

திருவரங்கத்தின் நீர்வள நிலவளங்களைத் திருமழிசைப் பிரான் பாடியிருக்கிறார்; சோலை சூழ்ந்த அரங்கம் என்று பாடியிருக்கிறார். அரங்கநாதனின் சௌந்தரியமே தமக்கு அவனிடம் பக்தியை உண்டாக்கியதாகப் பாடியிருக்கிறார்.

Koviloor Digital Library

எனினும் திருவரங்கத்தின் வளங்களையும் அழகியமண வாளனின் திருமேனியழகுகளையும் தொண்டரடிப் பொடி யாழ்வார் முழுக்க முழுக்க அநுபவித்ததுபோல் திருமழிசைப் பிரான் அநுபவித்ததாகச் சொல்ல முடியாது.

திருப்பாணாழ்வாரும் தம்மைத் தூயராக்கி அருள் செய்த நீலமேனியின் நிர்மல சௌந்தரியத்தை நெஞ்சுகுளிர வாய்குளிரப் பாடியிருக்கிறார்; பாதாதிகேசம் என்ற முறையில் அநுபவித்துப் பாடியிருக்கிறார். தம்மைப் பேதைமை செய்த கண்களைப் பாடியிருக்கிறார். யோக க்ஷேமம் வினவத் துடித்துக்கொண்டிருந்த சிவந்த வாயைப் பாடியிருக்கிறார்; ஆரம் அணிந்த திருமார்பைப் பாடியிருக்கிறார். 'அரங்கன்என் அமுதினைக் கண்ட கண்கள்மற் றொன்றினைக் காணாவே!' என்றும் பாடியுள்ளார்.

எனினும் தொண்டரடிப்பொடியாழ்வார், அழகிய மணவாளனின் சௌந்தரியத்தை அநுபவித்த முறை ஒருதனிச் சிறப்பு வாய்ந்தது. இத்தனிச் சிறப்பைத் 'திருமாலை' என்ற பிரபந்தத்திலே விரிவாக நாம் அநுபவிக்கலாம்.

Koviloor Digital Library

9. இவர் குறிப்பிடும் கதைகள்

திருமாலின் பூர்ண அவதாரம் என்று கருதப்பெறும் கண்ணபிரானின் கதைகள் நீண்ட காலமாக நம் தமிழகத்திலே வழங்கி வந்திருக்கின்றன. பெரிய புராணம் இயற்றிய சேக்கிழார் சுவாமிகளும், 'முல்லையின் தெய்வம் என்று அருந்தமிழ் உரைக்கும் செங்கண்மால்' என்று கண்ணனைக் குறிப்பிடுகிறார். 'மாயோன்' என்பது கண்ணனுக்கு இந்நாட்டிலே மிகவும் பழமையான பெயராக வழங்கி வந்திருக்கிறது.

தொண்டரடிப்பொடியாழ்வார் தமது அழகிய மணவாளனை 'மாயனார்' என்றும்,

கற்றினம் மேய்த்த எந்தை

(கற்றினம் - கன்றுகளின் கூட்டங்களை.)

என்றும் குறிப்பிடுகிறார். ஆய்ப்பாடியில் கண்ணன் வளர்ந்து ஆனிரை மேய்த்த வரலாறு பிரசித்தமல்லவா?

'தாமரைக்கண்ணன்' என்றும் 'கனியிருந்தனைய செவ்வாய்க் கண்ணன்' என்றும் அழகிய மணவாளனை அழைப்பதில் இவருக்கு விசேஷ திருப்தி. 'கோவலனாய் வெண்ணெய் உண்டவாயன்' என்று திருப்பாணாழ்வாரும் அரங்கனைக் குறிப்பிடுகிறாரல்லவா!

தன்னுடைய அவதார காலத்திற்குப் பிற்பட்டவர் களுக்கும் உபகரிக்க வேண்டும் என்ற நோக்குடன் கண்ண பிரானே ஸ்ரீரங்கநாதனாக வந்து கண் வளர்ந்தருளுகிறான் என்பது குறிப்பு. 'யசோதைப் பிராட்டி, பிள்ளை மனம்

Koviloor Digital Library

கன்றாமல் தீம்பிலே கைவளரும்படி வளர்த்த மொசுமொசுப் பெல்லாம் பெரிய பெருமாள் - பள்ளி கொண்டிருக்கும் ஸ்ரீரங்கநாதன் - பக்கலில் தோற்றியிருக்கும்' என்பது ஸ்ரீபட்டர் என்ற பெரியாரின் வாக்கு.

'அரங்கம் தன்னுள் கள்வனார்' என்று இவர் போற்றிய பெருமாள் 'காரொளி வண்ண'னாகிய கண்ணனேதான். அன்று வெண்ணெய் திருடிய கள்வனே அழகிய மணவாளனாக வந்து கண் வலை வீசித் தம் உள்ளத்தைக் களவாடி அருளினான் என்பது இவர் கருத்து.

திருமாலையின் இறுதிப்பாட்டிலும்,

வளமெழுந் தவள மாட
மதுரைமா நகரம் தன்னுள்
கவளமால் யானை கொன்ற
கண்ணனை அரங்க மாலை

(வளம் எழும் - வளம் மிகுந்திருப்பதும். தவள மாடம் - வெண்ணிற மாடங்களை உடையதுமாகிய. மதுரை மாநகரம் தன்னுள் - வட மதுரை என்ற மாநகரில். கவளமால் யானை - கவளம் கொண்டிருப்பதும் பெருத்ததுமான குவலயாபீடம் என்னும் ய்யானையை.)

என்று கண்ணனும் அரங்கமாலும் அபேதமாய்ப் பிரஸ் தாபிக்கப்படுவதைக் காண்கிறோம்.

ஸ்ரீரங்கநாதனை ராமபிரானாகவும் பாடுகிறார் தொண்டரடிப் பொடியாழ்வார்.

சிலையினால் இலங்கை செற்ற
தேவனே தேவ னாவான்

(சிலையினால் - வில்லினால். இலங்கை செற்ற - இலங்கையை அழித்த.)

என்று கூறுவதைக் கேளுங்கள்.

Koviloor Digital Library

கடலை அணைகட்டிப் போரிலே அரக்கர்கோனை முடித்து உலகத்தை வாழ்வித்த அந்த வீரத்திருக்கதையும், கண்ணன் கதைகளைப்போல் இவருள்ளத்தைக் கொள்ளை கொண்டிருக்க வேண்டும்.

ஒருவில்லால் ஓங்கு முந்நீர்
அடைத்(து)உல கங்கள் உய்யச்
செருவிலே அரக்கர் கோனைச்
செற்றநம் சேவ கனார்
மருவிய பெரிய கோயில்
மதிள்திரு அரங்கம்

(ஓங்கு முந்நீர் - கொந்தளிக்கிற கடலை. செருவிலே - போர்க்களத்திலே. செற்ற - முடித்தருளிய. சேவகனார் - பெரிய வீரர். மருவிய - பொருந்தி வாழ்வதற்கு இடமான.)

ராமனாகவும் கண்ணனாகவும் அவதரித்த பெருமானே திருவரங்கம் பெரிய கோயிலில் கண்வளர்ந்தருளுகிறான் என்பது கருத்து. ராமன் கட்டிய அணைக்குக் குரங்குகள் மலைகளைத் தள்ளிக்கொண்டு வந்துபோட்டு உதவி செய்ததையும் குறிப்பிடுகிறார். பக்கத்திலிருந்த அணில்களும் வானர வீரர்களைப் போல் சேதுபந்தனத் தொண்டில் ஈடுபட்ட கதையையும் குறிப்பிடுகிறார்.

திருப்பள்ளி யெழுச்சியிலும் ராம கதைகளின் பிரஸ்தாபம் வருகிறது. 'இலங்கையர் குலத்தை வாட்டிய வரிசிலை வானவர் ஏறே!' - அதாவது, அரக்கர் வர்க்கத்தை அழித்த அழகிய வில்லையுடைய தேவாதி தேவனே!' - என்று ஸ்ரீரங்கநாதனைத் துயிலெழுப்பும்போது கூவியழைக்கிறார்.

விசுவாமித்திர மகரிஷியின் யாகத்தை இனிது நிறைவேறச் செய்ததையும், 'மாமுனி வேள்வியைக் காத்து' என்று குறிப்பிடுகிறார். வேள்வியின் முடிவில் செய்யும் ஸ்நானத்தை விசுவாமித்திரனுக்குச் செய்வித்ததாகக் கூறி,

Koviloor Digital Library

விரோதிகளை ஒழிக்கவல்ல அந்த மிடுக்கையும் பாராட்டி, 'அடுதிறல் அயோத்தி எம் அரசே! அரங்கத்தம்மா!' என்று அழைத்துப் பள்ளியெழுச்சி பாடுவதைக் கேளுங்கள்.

திருவரங்கம் பெரிய கோயிலை இவர், லங்கேச்வரனான விபீஷணன் வழிபடும் கோயில் என்றும் குறிப்பிடுகிறார்.

இலங்கையர்கோன் வழிபாடு செய்கோயில்
எம்பெரு மான்! பள்ளி யெழுந்தரு ளாயே.

புராணக் கதைகளையும் இவர் பயன்படுத்திக் கொள் கிறார். இக்கதைகளில் கஜேந்திரன் கதை இவருக்கு மிகவும் உகப்பானது என்று கருதலாம். 'ஆனையின் அருந்துயர் கெடுத்த அரங்கத் தம்மா! பள்ளி யெழுந்தருளாயே' என்ற வாக்கிலே, யானையின் துக்கத்தையும் அருந்துயராகக் கருதிப் போக்கியருளின பெருங்கருணை வற்புறுத்தப்படுகிறது.

இந்தப் பாட்டிலே யானையின் காலைக் கவ்விய முதலையை, 'விழுங்கிய முதலை' என்று கருதுவதிலேயே பெருமாளின் கருணை வெளிப்படுகிறது என்பர். குழந்தை கிணற்றின் பக்கத்திலே போய்விட்டாலும், 'ஐயோ, கிணற்றில் விழுந்துவிட்டது, விழுந்துவிட்டது!' என்று ஆத்திரப்படும் அன்பு நிலையை, 'விழுங்கிய முதலை' என்ற சொற்றொடரின் புதை பொருளாய்க் காட்டுவர்.

ஆனையின் துயர்தீர்த்த கதையைத் 'திருமாலை'யிலும் காண்கிறோம்.

உம்பரால் அறிய லாகா
ஒளியுளார் ஆனைக் காகிச்
செம்புலால் உண்டு வாழும்
முதலைமேல் சீறி வந்தார்

(உம்பரால் - தேவர்களால். செம்புலால் - சிவந்த மாமி சத்தை.)

Koviloor Digital Library

என்று, அரைகுலையத் தலைகுலைய மடுவின் கரையிலே ஓடி வந்த அந்தக் கருணையைச் சுட்டிக் காட்டுகிறார்.

'தவம் செய்தார் வெள்கிநிற்க, விண்ணுளார் வியப்ப, வந்து ஆனைக்கு அன்று அருளை ஈந்த' கதையிலே தவச்செருக்கும் ஜாதிச் சிறப்பும் பயனற்றவை என்ற பொருள் தொனிக்கிறது என்று வியாக்கியானம் இடுவதுண்டு. 'தவத்தில் இறங்கினோமே; ஐயோ, முதலை வாயில் இருந்தோ மில்லையே!' என்று தவசிகள் வெள்கி நின்றார்களாம்.

கோவர்த்தனகிரியைக் குடையாகப் பிடித்து இடையூறு சிறிதுமின்றி உயிர்களைக் காத்தருளிய அதே கருணையை, கஜேந்திரனைக் காத்தருளிய கதையிலும் காண்கிறார் இவர். 'அந்த ஆயர்களுடைய கூட்டத்திலாவது, பசுக்களின் கூட்டத்திலாவது அடியேனையும் சேர்த்துக்கொள்ளலாகாதா?' என்ற குறிப்புடன்,

மழைக்(கு)அன்று வரைமுன் ஏந்தும்
மைந்தனே!

(வரை - கோவர்த்தனம் என்னும் மலை.)

என்று கூவியழைத்தவர், 'கஜேந்திரனைப் போலாவது இறைவன் இரங்கத்தக்க ஆபத்து ஒன்றில் சிக்கிக்கொண்டு அருள் பெற்றோம் இல்லையே!' என்கிறார்.

குவலயாபீடம் என்ற அசுர ஆவேசம் கொண்ட யானையைக் கொன்றவன், கஜேந்திரனைக் காக்க வந்தான் என்பதில், பகவானது துஷ்ட நிக்கிரக சிஷ்டபரிபாலன ஆற்றலையும் அருளையும் கண்டு, நமக்கும் காட்டுகிறார் இவர். பிரசித்தமாக இல்லாத இரண்டு புராணக்கதைகளையும் இவர் பிரஸ்தாபிக்கிறார். ஒன்று க்ஷத்ரபந்துவின் கதை; மற்றது முத்கலன் என்பவன் கதை. இருவரும் பெரும்பாவிகள்.

Koviloor Digital Library

க்ஷத்ரபந்து க்ஷத்திரியர்களில் அதமன். தன் கொடிய நடத்தையினால் உற்றார் உறவினர்களாலும் கைவிடப் பட்டான். தாய் தந்தையராலும் சொந்த மக்களாலும் கைவிடப்பட்டான். இவன் நாட்டைவிட்டுக் காட்டிலே வில்லும் அம்புகளும் கொண்டு திரிந்து ஜீவஹிம்ஸையால் வயிறு வளர்த்துவந்தான். இப்படி நெடுநாள் நடந்து வரும்போது ஒருநாள் ஒரு முனிவர் கொடிய வெயில் வேளையில் வழி தப்பித்தான் இருந்த காட்டுக்குள் வந்ததைப் பார்த்தான்.

முனிவர் வெயிலின் கொடுமையாலும் வழி நடந்த களைப்பாலும் பொறுக்கமுடியாத தாபத்தையும், தாகத்தையும் அடைந்திருந்தார். அருகே ஒரு பொய்கையைக் கண்டு அந்தக் குளத்தில் நீராடித் தாகசாந்தி செய்து கொள்ளலாமென்று போய் அங்கே விழுந்துவிட்டார். அதுகண்ட க்ஷத்ரபந்து அவரைப் பிடித்துத் தூக்கி விட்டான்.

பிறகு இவன் அம்முனிவருக்குத் தாமரைக் கிழங்குகளை உணவாகக் கொடுத்தான். அவர்வி டாய் தீர்ந்து பொய்கைக் கரையிலுள்ள ஒரு மரத்தடியில் போய் உட்கார்ந்தார். தன்னை அறியாமலே அம்முனிவரிடம் க்ஷத்ரபந்துவுக்கு எப்படியோ இரக்கம் தோன்றிவிட்டது. இவன் அவர் காலடியில் உட்கார்ந்துகொண்டு அக்கால்களை நோவுதீரப் பிடித்தான். முனிவர் மகிழ்ச்சியடைந்து, ''பேருதவி புரிந்த பெரியோனே! நீ யார்?'' என்று கேட்டார். இவனும், ''நான் பெரியவன் அல்ல; ஒரு கொடியவன்'' என்றுதான் செய்த கொடுமைகளை யெல்லாம் மறைக்காமல் சொல்லிவிட்டான். முனிவருக்கு இவன்மீது பெருங்கருணை தோன்றியது. 'இவனை எப்படியாவது நல்வழிப்படுத்தவேண்டும்' என்று நினைத்தார்.

Koviloor Digital Library

உடனே அவனைப் பார்த்து அவர், ''நீ இனி ஹிம்ஸை வழியிலிருந்து விலகி ஜீவகாருண்ய ஒழுக்கத்தை மேற்கொள்ள முடியாதா?'' என்று கேட்டார். அதற்கு அவன், ''என் மனம் என்வசமாக இருக்கவில்லையே, என் செய்வேன்?'' என்று பதில் சொன்னான். முனிவருடைய இரக்கம் அதிகரித்தது. இவனைத் திருத்தவேண்டும் என்ற அவா, பேரவா ஆயிற்று.

''கோவிந்தா! என்று கூப்பிடத் தெரியுமா உனக்கு?'' என்று அவர் கேட்டார். ''இதில் ஒன்றும் சிரமம் இல்லையே; கோவிந்தா கோவிந்தா!'' என்றான் இவன். ''இப்படி அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்க முடியுமா?'' என்று கேட்டார் முனிவர். ''இது முடியுமே. க்ஷத்ரபந்து என்ற என் பெயரைக் காட்டிலும் கோவிந்தா! என்ற பெயர் உச்சரிக்க எளிதாயிருக்கிறதே.''

''தும்பினாலும் இருமினாலும் கோவிந்த கோவிந்த என்று சொல்லிக்கொண்டிரு'' என்றார் முனிவர். க்ஷத்ரபந்துவுக்கு அது முதலில் வேடிக்கையாகத் தோன்றியது. பிறகு அதில் ஏதோ ஒருவனை இனிமை இருப்பதாகவும் தோன்றியது. நாளடைவில் இவன், 'கோவிந்த கோவிந்த கோவிந்த கோவிந்த' என்று சொல்லிக் கோவிந்த நாம சங்கீர்த்தனம் செய்யத் தொடங்கிவிட்டான். கடைசியாகப் பக்தியும் உண்டாயிற்று.

க்ஷத்ரபந்து மரணமடைந்தபின் இந்தப் பிறப்பின் நினைவுடன் மறுபிறப்பில் ஓர் அந்தணனாகப் பிறந்தான். கோவிந்த நாம சங்கீர்த்தனம் செய்து, பகவானை வழிபட்டுப் பரமபாகவதனாகிவிட்டான்.

இந்தக் கதை 'ஸ்ரீவிஷ்ணுதர்ம'த்தில் சொல்லப் பட்டிருக் கிறது. இக்கதையைத்தான் தொண்டரடிப்பொடி யாழ்வார்,

Koviloor Digital Library

மொய்த்தவல் வினையுள் நின்று
மூன்றெழுத்(து) உடைய பேரால்
கத்திர பந்தும் அன்றே
பராங்கதி கண்டு கொண்டான்

(வல்வினையுள் - கொடிய தீவினையினுள்ளே. கத்திர பந்தும் - க்ஷத்திரபந்துவும். பராங்கதி - சிறந்த கதியை.)

என்ற செய்யுட்பகுதியில் குறிப்பிடுகிறார்.

'கோவிந்த' என்பது வடமொழியில் மூன்றெழுத்துடைய பெயர். வல்வினைகள் நான் முன்னே, நான் முன்னே என்று க்ஷத்ரபந்து மேல் விழுந்து நெய்க்குடத்தை எறும்புகள் மொய்த்துக்கொள்வதுபோலவும் தேன் கூட்டத்தைத் தேனீக்கள் மொய்த்துக்கொள்வது போலவும் மொய்த்துக்கொண்டிருந்தனவாம். எண்ணிறந்த வல்வினைகளிலிருந்து அந்தக் கொடியவனைக் காப்பாற்றிப் பரகதி அளித்தது 'மூன்றெழுத்துடைய பேர்' என்கிறார்.

முத்கலன் கதையையும் ஸ்ரீவிஷ்ணு தர்மத்திலே காண்கிறோம். க்ஷத்ரபந்துவைப்போல் பெரும்பாவியாக இருந்த இவன், 'கிருஷ்ண' நாமத்தைச் சொல்லி ஒரு தானம் செய்தானாம். இறந்த பிறகு இவனை எமகிங்கரர்கள் பாசத்தால் கட்டி எமனிடம் கொண்டுபோனார்கள். எமனோ எதிர்கொண்டு வந்து உபசரித்தான்.

முத்கலன் ஆச்சரியமடைந்து, ''என்னை நீ கௌரவிப்பதற்குக் காரணம் என்ன? உன்னுடைய கிங்கரர்களோ என்னைக் கயிற்றால் கட்டிக்கொண்டு வந்தார்களே!'' என்று சொல்ல, எமன், ''நீ பகவானுடைய திருநாமத்தைச் சொல்லி உன்னை அறியாமலே நல்வழிப்பட்டிருக்கிறாய்'' என்று சொன்னான்.

இந்த உரையாடல், முத்கலனை எமகிங்கரர் நரகத்தில் தள்ள வரும்போது நடைபெற்றது. எமன், திருநாமத்தின்

Koviloor Digital Library

பெருமை பேசியது, நரகத்தில் துக்கத்தை அநுபவித்துக் கொண்டிருந்தவர்களின் காதில் விழுந்தது.

பகவானுடைய திருநாமமும் அதன் சிறப்பைக் குறித்த பேச்சும் காதில் விழவே நரகத்திலே துக்க அநுபவம் ஆனந்த அநுபவம் ஆகிவிட்டதாம். ஏன் அந்த அநுபவநிலமே ஆனந்த அநுபவநிலம் ஆகிவிட்டதாம்.

நரகமே சுவர்க்கமாயிற்று என்று பாடுகிறார் ஆழ்வார்:

நமனும்முற் கலனும் பேச
நரகில்நின் றார்கள் கேட்க
நரகமே சுவர்க்கம் ஆகும்
நாமங்கள் உடைய நம்பி
அவன(து) ஊர்அ ரங்கம்.

(முற்கலன் - முத்கலன். நம்பி அவனது ஊர் - நம்பியினுடைய ஊர்.)

★ ★ ★ ★ ★

இதிகாசங்களும் புராணங்களும் உபபுராணங்களும் பொதுமக்களிடையே சமய உண்மைகளையும் தத்துவக் கொள்கைகளையும் பரப்புவதற்காக எழுந்த நன்முயற்சிகளின் விளைவாகக் கருதத்தக்கன. இக்கதைகளில் பண்டைப் பழங்கதைகளையும் கர்ணபரம்பரை வரலாறுகளையும் நாடோடிக் கதைகளையும் உவமக் கதைகளையும் காணலாம். கலைத்துறையிலும் சமயத் துறையிலும் அரசியல் துறையிலும், வேறு துறைகளிலும் மக்களுக்குப் பயன்படத் தக்க உண்மைகளையும் கொள்கைகளையும் கதைவடிவில் காணலாம்.

புராணக்கதைகளைக் கவிஞர்களும் பக்தர்களும் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள்; தமது வாழ்க்கையை வளமுறச் செய்யவும், ஒழுக்கத்தை ஒளியுறச் செய்யவும், பக்தி

Koviloor Digital Library

விசுவாசங்களை உறுதிப்படுத்தவும் பயன்படுத்திக் கொண் டிருக்கிறார்கள். தனிவாழ்க்கைக்கும் பொது வாழ்க்கைக்கும் நல்லறிஞர் புராணக்கதைகளைப் பயன்படுத்திக் கொள்வது உண்டு. வேதோப நிஷதக் கொள்கைகளையும் சித்தாந்தக் கருத்துக்களையும் புராணக் கதைகள் வாயிலாகப் பொதுஜன உள்ளத்திலே விதைப்பது எளிது.

தொண்டரடிப்பொடி யாழ்வாரும் மற்ற ஆழ்வார்களும் தங்கள் பக்தியை வளர்த்துக்கொள்ளவும், பக்திப்பிரசாரம் செய்யவும் புராணக்கதைகள் முதலியவற்றை உபயோகித்துக் கொள்வதைக் காண்கிறோம்.

Koviloor Digital Library

10. பக்தி வாழ்வின் ஊன்றுகோல்
(நாமம் கற்ற கல்வி)

'பகவானுடைய திருப்பெயர்களைக் கொண்டு பரகதி பெற்றார்களென்றும், நல்வாழ்வு பெற்றார்களென்றும் சொல்வது புராணமதக் கொள்கைதான். அது, இன்றைய நாகரிக வாழ்விற்குப் பொருந்துவதில்லை' என்று கூறுவோர் உண்டு. இவர்கள், 'கோவிந்த நாமத்தின் உதவியால் க்ஷத்ரபந்து பரகதி கண்டதும் முத்கலன் கிருஷ்ணன் பெயரால் கதி பெற்றதும் பௌராணிகர்களின் கற்பனைகள் அல்லது பயனற்ற பழைய நாடோடிக் கதைகள்' என்று சொல்லிவிடுவார்கள்.

வேடன் ராமநாமத்தின் உதவியால் வால்மீகியாகி ஆதிகாவியத்தை இயற்றினான் என்பதும் கற்பனைக் கதைதானே என்று தள்ளிவிடுவார்கள். தொண்டரடிப்பொடி யாழ்வாரைப் போன்ற பக்தர்கள் நாமசங்கீர்த்தனத்தால் பேறு பெற்றார்களே என்று சொன்னாலும், 'அது பக்தியுகம்; இது பகுத்தறிவு - யுகம் ஆயிற்றே!' என்று, அந்தப் பாடல்களைக் கவிச்சுவைக்காக அநுபவிப்பவர்களும் பதில் சொல்லி விடுவார்கள்.

'தஞ்சை ஜில்லாவைச் சேர்ந்த திருவையாற்றில் ராமநாமத்தைத் தாரகமாகக் கொண்டு பக்தி ததும்பும் அமரகீர்த்தனங்களைத் தியாகராஜர் இயற்றிப் புகழ் பெறவில்லையா?' என்றாலும், சென்ற நூற்றாண்டின் அந்தக் காலப்பகுதியும் பழைய பக்தியுகத்தைச் சேர்ந்ததுதானே என்று விவகரிக்கக் கூடும்.

Koviloor Digital Library

ஆனால் சமீபகாலத்தில் கண்கண்ட ஓர் ஆழ்வாராக நம்மிடையே வாழ்ந்து, சில ஆண்டுகளுக்கு முன்பே உயிர் துறந்த மகாத்மா காந்தி, ராமநாமத்திலே வைத்துக் கொண்டிருந்த அபார பக்தியையும் நம்பிக்கையையும் குறித்து எவரும், 'அது ஒரு பழைய கதை, பழைய புராண யுகத்தைச் சேர்ந்தது' என்று சொல்ல முடியாதல்லவா? பிள்ளைப்பிராயம் முதல் காந்தியடிகளின் உள்ளம் ராமநாமத்தில் தோய்ந் திருந்தது. வயதும் அநுபவமும் அதிகரிக்க அதிகரிக்க ராமநாமத்தில் நம்பிக்கையும் அதிகரித்தது. வாழ்க்கையின் இறுதிப் பகுதியில் ராமநாமம் உள்ளும் புறமும் ஊறிப் போயிருந்தது என்று சொல்வதும் பொருத்தமே.

வாழ்விலே ஆறுதல் தந்த ராமநாமம் சாவிலும் ஆறுதல் அளித்தது என்பதற்கு உயிர்போகும் தருணத்தில் காந்தியடிகளின் வாயிலிருந்து, 'ராம், ராம்' என்று இந்த நாமம் இருமுறை வெளி வந்ததே சான்றாகும். மரண பயத்தையும் வென்றுவிட்டார் காந்தியடிகள், ராமநாமத்தின்மீது நம்பிக்கை வைத்துத் தம் வாழ்க்கையை உருவாக்கிக் கொண்ட மகிமையினாலே.

தொண்டரடிப்பொடியாழ்வார் தமது 'திருமாலை'யில் முதற் பாட்டிலேயே திருநாமத்தின் மகிமையை வெளியிடு கிறார். 'நாமம் கற்ற பெருமிதத்தால் மரண பயத்தையும் வென்றுவிட்டோம்!' என்கிறார்.

பக்தனுக்கு மரணமே இல்லை என்றும், அவர் இறந்தாலும் உண்மையில் இறப்பதில்லை யென்றும் கூறுவதுண்டு. 'சாவுதான் செத்துப்போகும்; பக்தன் சாவதில்லை' என்று மேலைநாட்டு அறிஞர் ஒருவரும் கூறியுள்ளார். 'நாம் ஆர்க்கும் குடி அல்லோம்; நமனை அஞ்சோம்' என்று திருநாவுக்கரசரும் பாடியிருக்கிறாரல்லவா? காலனை வதம் செய்து கால காலனாகிய சிவபெருமான்

Koviloor Digital Library

தன்னுடைய பக்தனாகிய சிறுவனைக் காப்பாற்றிய கதை புராணப் பிரசித்தமானது. தொண்டரடிப் பொடியாழ்வார் 'திருமாலை'யில் முதற் பாட்டில், ''மரணமே! நீ செருக்கித் திரியாதே; திருநாமம் கற்ற செருக்கினால் நான் உன் தலையிலும் உன்னைச் சேர்ந்தவர்கள் தலையிலும் இதோ அடியிட்டுத் துவைக்கிறேன்!'' என்று அறை கூவிப் பறைசாற்றுகிறார்.

ஐம்புலன்களும் தீவழியில் இழுத்துச் செல்லும் ஆற்றலை இழந்து விட்டனவாம் திருநாமத்தின் மகிமையால்; புலன்களை அடக்கி ஆள முடியாதபடி தடையாகவுள்ள பாவங்களையும் உதறித் தள்ளிவிட்டாராம். அதனால் ''நரகபயம் போய்விட்டது. நமனுடைய பயமும் போய் விட்டது'' என்கிறார்.

''எமன் தலைமீதும் எமகிங்கரர் தலைமீதும் அடியிட்டுத் திரிகிறோம்; பாருங்கள் எம்முடைய செருக்கை!'' என்று வெற்றி முரசு கொட்டுகிறார்.

இந்த முரசு திருமாலையின் முகப்பிலே முழங்குகிறது.

காவலில் புலனை வைத்துக்
　　கலிதன்னைக் கடக்கப் பாய்ந்து
நாவலிட்(டு) உழிதர் கின்றோம்
　　நமன்தமர் தலைகள் மீதே
மூவுல(கு) உண்(டு) உமிழ்ந்த
　　முதல்வநின் நாமம்கற்ற
ஆவலிப்(பு) உடைமை கண்டாய்
　　அரங்கமா நகரு ளானே.

(நாவலிட்டு - வெற்றி முழக்கம் செய்து. உழிதர்கின்றோம் - சஞ்சரிக்கிறோம். நமன், தமர் தலைகள் மீது - எமன் தலை மீதும் எமபடர்களின் தலைமீதும். ஆவலிப்பு - செருக்கு.)

Koviloor Digital Library

'காவலில் புலனை வைத்து'

என்பதற்கு, 'காவல் இல்லாதபடி புலன்களை வைத்து' என்று சிரமப்பட்டு வியாக்கியானம் இடுவதும் உண்டு. 'அர்த்த கௌரவத்தாலே சப்தத்தை நியமித்துச் சொல்லு கிறோம்' என்பர் பெரியவாச்சான் பிள்ளை. பொருளின் சிறப்பை முன்னிட்டுச் சொற்களை இப்படி வலிந்து பொருள்தரச் செய்கிறார் என்பது கருத்து.

இத்தகைய பொருளின் சிறப்பு என்ன? இந்திரிய ஜயம் என்பது எவ்வளவோ கஷ்டமான காரியம். இதில் தவறிவிட்டாலும் திருநாமம் நன்மைகளைத் தருவது நிச்சயம் என்கிறார்.

வைத்திய நிபுணன் ஒருவன் நோயாளியை நோக்கி, 'நான் பத்தியம் போட்டு உன்னை ஹிம்ஸிக்கப் போவதில்லை. நீ உண்ணலாம், உறங்கலாம், குளிக்கலாம், எண்ணெய் தேய்த்தும் குளிக்கலாம். என்னுடைய வைத்தியம் உன் நோயைக் குணப்படுத்திவிடும், சுகமாக்கிவிடும்' என்று உறுதி கூறுவதாக வைத்துக்கொள்வோம். இத்தகைய ராஜவைத்தியம் செய்வது திருநாமம் என்பது உரையாசிரியர் கருத்து.

இந்திரிய ஜயத்தை ஒரு சாதனமாக்குவதைக் காட்டிலும், அதைத் திருநாம மகிமையின் ஒரு பலனாகக் காட்டுவது பக்தி மதத்தின் ஒரு பரம ரகசியம். 'புலனை அடக்கவேண்டும், இல்லாவிட்டால் இறைவனுடைய அருளைப் பெறமுடியாது' என்று பயந்துகொண்டே இருப்பதைக் காட்டிலும், அது குறித்துக் கவலைப்படாமல் நாமசங்கீர்த்தனம் செய்து கொண்டே இருக்கலாம். அத்தகைய பக்திச் சுவையிலே ஐம்புலன்களும் தாமே அடங்கி ஒடுங்கிப் போகும் என்பது குறிப்பு.

இந்திரியங்கள் எத்தனையோ காரியங்களில் மண்டித் திரிகின்றன. 'திருநாமத்தை அண்டை கொண்ட பலத்தாலே'

Koviloor Digital Library

இந்திரியங்களை அடக்கமுடியும். 'அராஜகமாய்க் கிடந்த காலம் குறும்பு செய்தாரை, அரசாங்கம் உறுதிப்பட்டதும் சிறையிலே வைப்பது போலத்தான் இதுவும்' என்பர் உரையாசிரியர்.

திருநாமத்தின் மகிமையால் புலன்களையும் காவலில் வைத்துவிட்டார்; இந்திரிய ஜயத்திற்கு முட்டுக் கட்டையாக இருந்த கலியென்ற பாபராசியையும் அடியோடு போக்கி விட்டாராம். ஏன், 'கலிதன்னைக் கடக்கப் பாய்ந்து' என்பதற்கு, 'அனுமன் சமுத்திரத்தைப் பாய்ந்து கடந்ததுபோல் இந்த ஆழ்வாரும் பாபசமுத்திரத்தைக் கடந்து கிருதயுக புருஷர்களிலே ஒருவராகிவிட்டார்' என்று வியாக்கியான மிடுகிறார் பெரியவாச்சான் பிள்ளை.

'நாவலிடுதல்' என்பது தோற்றவர் முன்னே ஜயித்தவர் தமது வெற்றியைச் சொல்லிக் கோஷிப்பது. 'முன்பு யமாதிகள் பேர் கேட்க அஞ்சிக் கிடந்தவர், திருநாமத்தை அண்டை கொண்ட பலத்தாலே எமன் வாசலிலே சென்று அறை கூவுகிறார்' என்பது வியாக்கியானம்.

'வாலி பேர் கேட்க அஞ்சிச் சுரமடைந்து கிடந்த' சுக்கிரீவ மகாராஜா ராமனுடைய பலத்தாலே கிஷ்கிந்தை வாசலிலே சென்று அறைகூவியதுபோல், தொண்டரடிப் பொடியாழ்வாரும் எமனுடைய வாசலிலே அறைகூவு கிறாராம். சுக்கிரீவன் பகவானைப் பலமாகக் கொண்டான்: ஆழ்வாரோ பகவானுடைய நாமத்தையே பலமாகக் கொண்டார். ஒருவனைத் துணையாக அழைத்துக் கொண்டு போவதைக் காட்டிலும் அவனுடைய பெயரை உபயோகித்துக் காரியத்தை நிறைவேற்றிக் கொள்வதில் விசேஷ சாமர்த்தியம் இருக்கிறது. இத்தகைய சாமர்த்தியம் உடையவர்கள் பக்தர்கள்.

Koviloor Digital Library

'உழிதர்கின்றோம்' என்று பன்மையில் பேசுகிறாரல்லவா? 'திருநாமம் ரஸிக்க, வாயிலே பட்டவாறே இவர் சதசாகமாகப் பணைத்தபடி' என்பது வியாக்கியானம். ஆலமரம் ஒரு வித்திலிருந்து முளைத்து, நாலு திசைகளிலும் போக்கிய கிளைகளோடும் விழுதுகளோடும் காணப்படுவது போல் இந்த ஆழ்வாரும் பண்ணப் பணைத்த பெருஞ் செல்வராய்க் காணப்படுகிறார், நமன் தமர் தலைகள்மீது அடியிட்டுத் துவைக்கும்போது.

இதில் வெறுப்பும் பகைமையும் இல்லாதவர்களையும் தம்முடன் கூட்டிக்கொண்டு மரணத்தையும் அதன் பரிவாரங்களையும் இவர் அடியிட்டுத் துவைக்கிறாரென்றும் பொருள் கூறுகிறார் உரையாசிரியர். அனுமன் ஒருவனே சமுத்திரத்தைத் தாண்டி, சீதையைக் கண்டு வீரம்விளைத்துத் தூது சொல்லித் திரும்பிவந்தான் என்றாலும், அந்தக் காரியசித்தியை முன்னிட்டு அந்தப் பிரீதிக்குப் போக்குவீடாக மதுவனம் அழித்து மதுவைப் பருகியதில் அனுமனோடு மற்றவர்களுக்கும் பங்கு கிடைத்ததல்லவா?

ஒருத்தனுக்கு ராஜகுல சம்பந்தம் உண்டானால் அவனுடைய உற்றார் உறவினரும் ஏன், அவனுக்கு வேண்டியவர்களெல்லாம் அந்த வாழ்விலே பங்குகொண்டு பயன்பெறக்கூடும் என்பதையும் ஒரு உபமானமாகக் காட்டி, ஒருவனுடைய பகவத் சம்பந்தமும் அவனைச் சார்ந்தவர்க் கெல்லாம் பயன்படும் என்கிறார். தொண்டக்குலத்தை நாற்பாற் குலத்திற்கும் மேற்பட்ட ஒரு ராஜகுலம் என்று பக்தர் கருதுவர்.

பலரையும் இவர் கூட்டிக் கொள்வதால் சஞ்சார ஸ்தலம் வேண்டுமல்லவா? எனவே நமனையும் அவன் பரிவாரங் களையும் கூட்டிக்கொள்வதாக நயம்பட உரை கூறப்படுகிறது. பாவம் பண்ணினவர்கள் அந்தப் பலனை அநுபவிக்க அஞ்சி

Koviloor Digital Library

எமனையும் அவனுடைய கணக்கனையும் ஆராதிக்கும்போது, இந்த ஆழ்வார் அவர்கள் தலையிலே தாமும் தம்மைச் சேர்ந்தவர்களும் அடியிட்டுத் துவைப்பது பக்தியின் வெற்றி என்பர்.

தர்மராஜா என்று எமன் பெயரையும், சித்திரகுப்தன் என்று அவனுடைய கணக்கன் பெயரையும் வைத்துக் கொள்வோர் உண்டு. எமனுக்கும் சித்திரகுப்தனுக்கும் திருப்தியாகச் சில சடங்குகளைச் செய்வோரும் உண்டு. அத்தகைய மூட நம்பிக்கைகளுக்கு இந்த ஆழ்வாரின் பக்திமதத்தில் இடம் இல்லை என்பது உரையாசிரியரின் கருத்து.

'யமாதிகளை இப்போது ஒரு பேரையிட்டு (பகவானுடைய திருப்பெயரைச் சொல்லி)த் துகைக்கிறார் காணும்' என்பது உரை. 'தான் தன் தலைகண்டது, திருநாமம் கற்றார் திருவடிகளிலே வணங்க' என்று எமனும் மகிழ்ந் திருக்கிறானாம். 'கண்டதே காட்சி, கொண்டதே கோலம்' என்று கண்டவாறு திரிவோர்மீதுதான் எமன் ஆணை செலுத்துகிறானாம். 'பக்தர் எனக்கு எஜமானர்!' என்று மரணதேவதையும் பக்தர் அடிகளில் பணிந்துகிடக்கிறதாம்.

எம படர்களைப் பார்த்து எமன், ''நீங்கள் சாதுக்களான பக்தர்களைக் கண்டால் பயங்கர சொரூபத்தை மறைத்துக் கொள்ளவேண்டும்; நீங்களும் சாதுக்களாகி அந்தச் சாதுக்களை வணங்கிப் போகவேண்டும்; அவர்களுக்கு அநுகூலமான பணிகளைப் புரிந்து போகவேண்டும்'' என்று கட்டளை யிடுவதாகத் திருமழிசையாழ்வர் கூறியுள்ளார். அந்தக் கருத்தை ஒட்டித் தொண்டரடிப்பொடியாழ்வாரும், எமனும் எமபடரும் சாதுக்களான பக்தர்களுக்கு அஞ்சுவதாய்க் கூறுகிறார்.

வெற்றி முழக்கம் செய்து கொண்டு, ''எமன் தலையிலும் எமபடர் தலையிலும் அடியிட்டுத் திரிகிறோம்!'' என்று பக்தர்

Koviloor Digital Library

கொள்ளும் செருக்கெல்லாம் செருக்கே அல்ல; குழந்தையின் குதூகலத்தை ஒத்தது. எல்லாம்,

மூவுலகு உண்டு மிழ்ந்த
முதல்வ! நின் நாமம் கற்ற
ஆவலிப்பு

என்று சொல்லுகிறபடி அந்த முதல்வனின் நாமம் கற்ற செருக்கேதான்.

ஒரு பிரதேசத்திற்குத் தலைவனுடைய தயவு இருந்தாலும், உலக சக்கரவர்த்தியின் தயவே இருந்தாலும் எமனுக்குப் பயப்பட வேண்டும்; எம கிங்கரர்களுக்கும் பயப்பட வேண்டியதுதான். ஆனால் 'மூவுலகு உண்டு உமிழ்ந்த முதல்வ'னைப் பற்றிக் கொண்டவர்களுக்கு அச்சம் என்பதே இல்லை.

பிரளய ஆபத்திலே உலகங்களையெல்லாம் வயிற்றிலே வைத்து ரட்சிக்கிறான் பகவான் என்று புராணம் சொல்லுகிறது. மறுபடியும் உலகங்கள் தோன்றுவது குறித்து உரையாசிரியர், 'அங்கிருந்து நெருக்குண்ணாதபடி (அவற்றையெல்லாம்) வெளிநாடு காணப்புறப்பட' விடுகிறான் என்பர்.

இத்தகைய உலகநாதனுடைய திருநாமங்கள் ஒன்றல்ல, இரண்டல்ல ஓராயிரம் என்பர். 'அநந்தம்' என்ற பொருளில்தான் ஓராயிரம் என்கிறார்கள். ஓராயிரமாய் உலகத்தைக் காப்பாற்றுவது திருநாமம் என்பர்.

பக்தர்களுக்குப் பகவானைக் காட்டிலுங்கூடத் திருநாமம் முக்கியமானதென்று கூறுவது உண்டு. இறைவனைக் 'கட்டிப் பொன்' என்றால் அவன் திருப்பெயரப் 'பணிப்பொன்' (ஆபரண வடிவத்தில் இருக்கும் பொன்) என்று சொல்லுகிறார்கள். கட்டிப்பொன்னை அணிந்துகொள்ள முடியுமா? ஆபரணங்களைத்தானே அழகாக அணிந்துகொள்ள முடியும்?

Koviloor Digital Library

பகவானுடைய திருப்பெயரை உச்சரிப்பதற்கு ஒரு சடங்கும் தேவையில்லை. பட்டர் என்ற ஆசிரியரை நோக்கி அவர் சீடரான நஞ்சீயர், ''திருநாமம் சொல்வதற்கு முன்னெச்சரிக்கையாக ஒரு முயற்சியை மேற்கொள்ள வேண்டுமோ?'' என்று பொருள்பட ஒரு கேள்விகேட்டார். அதற்குப் பட்டர், ''கங்காஸ்நானம் பண்ணப் போமவனுக்கு உவர்க்குழியிலே தோய்ந்துபோக வேணுமோ?'' என்று ஒரு பதில் கேள்வி கேட்டாராம். ''இடறி விழுந்தவன், அம்மே! என்று சொல்வதற்கு ஒரு சடங்கு வேண்டுமோ?'' என்ற பதில் கேள்வியிலும் திருநாமத்தை எவரும் எந்த நிலையிலும் சொல்லலாம் என்ற உண்மை புலனாகும்.

'ஆவலிப்பு' என்பதற்குத் 'திருநாம சம்பந்தத்தால் வந்த ஐசுவரியம்' என்று பொருள் கூறுகிறார் உரையாசிரியர்.

ஆவலிப்(பு) உடைமை
கண்டாய்

என்பதற்கு, 'இதைச் சொல்லித்தான் தெரியவேண்டுமா? என் வடிவிலே தெரியாதோ?' என்று பொருள்பட வியாக்கியானம் செய்கிறார்கள்.

திருநாமசம்பந்தம், திருநாமசம்பத்து, அகத்தின் அழகு முகத்திலே தெரிவதுபோல் தெரிகிறதாம்; வடிவிலும் தெரிகிறதாம். மண் தின்றவருக்கும் காயசித்தி செய்வோருக்கும் உள்ள வேற்றுமையை லௌகிகக் கவலைகளில் மண்டிக் கிடப்பவர்களுக்கும், இறைவன்மீது பாரத்தைப் போட்டுத் திருநாமத்தைச் சொல்லிக்கொண்டிருப்பவர்களுக்கும் இடையே கண்டுகொள்ளலாம்.

'இவன் பழைய பேர்வழி இல்லை!' என்று சொல்லும்படி மாறிப் புதுவாழ்வு பெறக்கூடுமாம் திருநாமத்தின் மகிமையாலே. புதியதொரு ராஜகுலமல்லவா பிறந்து விடுகிறது!

Koviloor Digital Library

இப்படியெல்லாம் தொண்டரடிப்பொடியாழ்வாரும் இவர் உள்ளத்தை உய்த்துணர்ந்து உரை கண்ட பெரியோர்களும் திருநாமத்தின் மகிமையைப் பேசும்போது, மிகைபடப் பேசுகிறார்களோ என்ற ஐயம் தோன்றக்கூடும். ஆனால் அண்மையில் வாழ்ந்த மகாத்மா காந்தியின் அநுபவமும் கொள்கைகளும் மேலே சொன்ன கருத்துக்களை அரண் செய்கின்றன.

திருநாமத்திற்கும் மந்திரங்களுக்கும் சம்பந்தம் இல்லை என்பதைக் காந்தியடிகளும் வற்புறுத்துகிறார். மந்திரங்களுக்குச் சில நியமங்கள் உண்டு என்பர். பகவானுடைய நாமத்தைச் சொல்வதற்கோ நியமங்கள் இல்லை.

'மன ஒருமையுடன் ராமநாமத்தைச் சொல்வதென்பது ஒப்புவமையற்ற ஒரு சக்தியிடமிருந்து உதவி பெறுவதாகும்' என்பது காந்தியடிகளின் அபிப்பிராயம். 'மனிதனுக்கு உடைமையாகக் கூடியவை அனைத்திலும் பெரியது இதுவே' என்றும், 'இதனுடன் ஒப்பிடும்பொழுது அணுக்குண்டின் சக்தி ஒரு சக்தியே அல்ல' என்றும் காந்தியடிகள் கூறுவர்.

'எனது சொந்தச் சக்தி எதுவும் கிடையாது; பகவானிடமிருந்தே நான் என் பலம் முழுவதையும் பெறுகிறேன்' என்று காந்தியடிகள் நண்பர்களிடம் பன்முறை கூறியது உண்டு. 'மூவுலகு உண்டு உமிழ்ந்த முதல்வ'னின் நாமம் தந்த சக்தியே 'நமன் தமர் தலைகள்' மீதும் அடியிட்டுத் துவைக்கும் தமது சக்தியாயிற்று என்ற தொண்டரடிப்பொடி யாழ்வாரின் திருவாக்கை நினைவூட்டுவதுதான் மகாத்மா காந்தியின் மணிவாக்கும்.

பகவானுடைய திருநாமம் மன ஒருமையோடு உச்சரிக்கப்பட்டால் அது எல்லாத் தீய எண்ணங்களையும் விரட்டிவிடுகிறது என்பது காந்தியடிகளின் வாக்கும் வாழ்க்கை

Koviloor Digital Library

அநுபவமும் ஆகும். தீய எண்ணங்கள் போய்விட்டால் தீய செயலுக்கும் இடமில்லையல்லவா? ஆகவேதான், முதல்வனின் திருப்பெயரை உறுதியான துணையாகப் பற்றிக்கொண்டு, 'காவலில் புலனை வைத்துக் கலிதனைக் கடக்கப் பாய்ந்து,' தாம் ஒரு புதுயுக புருஷராய்ப் பரிண மித்துவிட்டதாகச் சொல்லுகிறார் தொண்டரடிப் பொடியாழ்வார்.

ராமநாமம் பற்றின்மை, பதறாமை, முதலான ஆற்றல்களை உதவி, ஆபத்துக் காலங்களில் நிதானம் இழவாது இருக்கவும் உதவுகிறது என்பதையும் காந்தியடிகள் சுட்டிக் காட்டுகிறார். நமது நோய்களுக்குக் கைகண்ட மருந்து ராமநாமமே என்றும் காந்தியடிகள் உறுதியாகக் கூறியது உண்டு. தொண்டரடிப்பொடியாழ்வாரும் திருநாமத்தை ராஜவைத்தியமாகச் சுட்டிக் காட்டுகிறார் என்பது உய்த்துணரப் படும் என்பர் உரையாசிரியர்.

மனம் மனிதனைக் கெடுக்கவும் செய்கிறது, உருவாக்கவும் செய்கிறது. இந்த உண்மை உபநிஷதங்களாலும் உபதேசிக்கப் படுகிறது; பகவத்கீதையிலும் சுட்டிக் காட்டப் படுகிறது. மில்ட்டன் மகாகவியும், 'மனம் சொர்க்கத்தை நரகமாக்கவும், நரகத்தைச் சொர்க்கமாக்கவும் செய்யவல்லது' என்று கூறியுள்ளார். இதைச் சுட்டிக்காட்டிக் காந்தியடிகள், 'மன ஒருமையுடன் பகவானுடைய நாமத்தை உச்சரிப்பது உறுதியான உதவியை எச்சமயத்திலும் அளிக்கவல்லது' என்கிறார்.

இனி, இந்தக் கருத்தை உள்ளத்தில் பதியவைத்துக் கொண்டு,

நரகமே சுவர்க்க மாகும்
நாமங்க ளுடைய நம்பி

என்ற ஆழ்வார் வாக்கை ஒருவாறு புரிந்துகொள்ளலாம்.

Koviloor Digital Library

'வாயால் ராமநாமத்தை உச்சரித்துக்கொண்டு நடைமுறையில் ராவணன் வழியே செல்வதால் ஒரு சிறிதும் பயனில்லை; அது வெறும் ஆஷாடபூதித்தனமே' என்று காந்தியடிகள் கூறியிருப்பதை நினைவூட்டுவதுதான்.

கள்ளத்தேன் நானும் தொண்டாய்த்
தொண்டுக்கே கோலம் பூண்டு

என்ற தொண்டரடிப் பொடியாழ்வாரின் வாக்கும்.

திருநாமம் பயத்தைப் போக்குவதுடன், அமுதம்போல் சுவைதரும் என்றும் தொண்டரடிப்பொடியாழ்வார் கருதுகிறார். திருமாலையின் முதலாவது பாட்டில் எம பயத்தையும் போக்கும் அருமருந்தாகத் திருநாமத்தைச் சுட்டிக் காட்டுகிறவர், அடுத்த பாட்டிலே,

அச்சுதா! அமரர் ஏறே!
ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை ... ...

என்று திருநாமத்தின் அமுதச் சுவையைத் தாம் அநுபவித்த வாறு வெளியிடுகிறார்.

முதல்முதல் முதல்வனது நாமம் பயநிவாரணி என்று சொல்லிவிட்டுப் பிறகு அதன் சுவையை வற்புறுத்துவதற்குக் காரணத்தைச் சுட்டிக் காட்டுகிறார் உரையாசிரியர். 'ஜ்வரம் அநுவர்த்தியாநிற்க, பால் ரஸிக்குமோ?' என்ற கேள்வியிலே அந்தக் காரணம் விளக்கம் பெறுகின்றது.

சுரநோய் பீடிக்கும் போது பாலின் ருசி தெரியாதது போல், 'பயஜ்வரம்' ஒருவனைப் பிடித்துப் பீடிக்கும்போது திருநாமத்தையும் சுவைத்து அநுபவிக்க முடியாதாம். எனவே ஆழ்வார் எமபயத்தைப் போக்கிக்கொண்ட பின்பு திருநாமத்தின் சுவையையும் அநுபவிக்கிறாராம்.

பயத்திற்கு மருந்தும் கசப்பு மருந்தல்ல, சுவைதரும் மருந்துதான்; வைத்தியம் ராஜவைத்தியந்தான்! பயத்தைப்

Koviloor Digital Library

போக்கிக்கொள்ள வேண்டுமே என்று கவலைப்பட்டு ஆழ்வார் திருநாமத்தைச் சொல்லவில்லையாம். ரிஷிகள் பயநிவிர்த்திக்காக இறைவன் திருநாமத்தைச் சொன்னார்களென்றும், தொண்டரடிப்பொடியாழ்வாரைப் போன்ற பக்தமணிகளோ, முக்கியமாகத் திருநாமத்தின் சுவையில் ஈடுபட்டார்களென்றும் பெரியவாச்சான் பிள்ளை அபிப்பிராயப்படுகிறார்.

காந்தியடிகள், திருநாமம் பயத்தைப் போக்கும் என்பதை வற்புறுத்துகிறார்; பயத்தைப் போக்கத் தலைசிறந்த மருந்து இதுவே என்றும் தெரிவிக்கிறார். இப்பயன் தரும் மருந்து அமுதச் சுவையுடன் கூடியது என்பதையும் காந்தியடிகள் குறிப்பிடுகிறார்.

புதுடெல்லியில் தாம் நடத்திய ஒரு பிரார்த்தனைக் கூட்டத்திலே பாடப்பெற்ற ஒரு கீர்த்தனையை விளக்கும் போது காந்தியடிகள் பின்வருமாறு கூறியுள்ளார்: 'அந்தப் பாட்டிலே பக்தர் தமது ஆத்மாவிடம் இறைவன் திருநாமங்களை வேண்டிய மட்டும் அள்ளியள்ளிப் பருகுமாறு கூறுகிறார். நாம் ஒவ்வொரு நாளும் உண்ணுகிற உணவும் பருகுகிற பானங்களும் அளவுக்கு அதிகமாகிவிட்டால், தெவிட்டிப்போய் நோயை விளைவிக்கின்றன. ஆனால் கடவுளின் திருநாம அமுதத்திற்கோ அத்தகைய வரம்பு எதுவுமே கிடையாது. இதைப் பருகப் பருக, பருகுவோருக்கு இதன் தாகமும் பெருகவே செய்கிறது.'

திருநாமத்தின் அமுதச் சுவையைத் தெவிட்டாது அநுபவித்ததால்தான் தொண்டரடிப்பொடியாழ்வார்.

இச்சுவை தவிர யான்போய்
இந்திர லோகம் ஆளும்
– அச்சுவை பெறினும் வேண்டேன்

என்று துணிந்து கூறலானார்.

Koviloor Digital Library

இறைவனுக்குத் தொண்டுபூண்டு திருநாம அமுதத்தை உண்ணாதவர்களே நீசர்கள், அடிமைகள் என்கிறார்.

தண்துழாய் மாலை மார்பன்
தமர்களாய்ப் பாடி யாடித்,
தொண்டுபூண்(டு) அமுதம் உண்ணாத்
தொழும்பர்சோ(று) உகக்கு மாறே!

(தண்துழாய் - திருத்துழாய். தமர்களாய் - பக்தர்களாய்; அன்பர்களாய். தொழும்பர் - (இங்கே) நீசர்கள்; அடிமைகள் - சோறு உகக்கும் ஆறே - சோற்றை விரும்பும் வகைதான் என்னே!)

இறைவனுக்குத் தொண்டர்களாய்த் திருநாம அமுதத்தைப் பருகி இன்புறாதவர்கள் பயதேவதைக்கே அடிமைகளாய்க் காலம் கழிப்பார்களாம். மகாத்மா காந்தி சிறு பிராயத்தில் பேய் பிசாசு பயத்தைப் போக்கிக் கொள்வதற்காக ராமநாம ஜபம் செய்யத் தொடங்கினாராம். தம் குடும்பத்தின் பழைய வேலைக்காரி ஒருத்தி இவரிடம் பயத்திற்கு மருந்து ராமநாமம் என்று சொன்னாளாம்.

தொண்டரடிப்பொடியாழ்வாருக்கோ ஸ்ரீரங்கநாதனே திருநாம வைபவத்தை உபதேசித்தான் என்பது கதை. எப்படியும் இவர் பரிபூர்ண நம்பிக்கையுடன் பகவானுடைய நாமத்தைத் தமது பக்தி வாழ்வின் ஊன்றுகோலாகச் செய்துகொண்டார் என்பது நிச்சயம்.

திருநாமத்தால் இகலோக நன்மைகளைப் பெற ஆசைப்படக்கூடாது என்பர் காந்தியடிகள். இதைத் தொண்டரடிப்பொடியாழ்வாரின் கொள்கையாகவும் கருதலாம். இந்த ஆழ்வார் பகவானிடம் பரிபூர்ண நம்பிக்கையுடன், அவனுடைய அருளுக்கு அறிகுறியான திருவடிகளில் அடைக்கலம் புகுந்து வெற்றிகண்டார் என்பதற்கு இவரது பிரபந்தமான திருமாலை தக்க சான்று தருகிறது.

Koviloor Digital Library

இகலோக நன்மைகளை அடைவதற்காகத் திருநாமத்தை உபயோகிப்பவர்கள், முத்தை நெல்லுக்கு விற்பவர்களை நினைவூட்டுகிறார்கள் என்பர் உரையாசிரியர். சிலர் யோக சித்திகளை ஆசைப்படுகிறார்கள்; சிலர் முக்தி வேண்டுமென்று திருநாமத்தைச் சொல்லக்கூடும். இவர்களும் முத்தை விற்பவர்களே! நெல்லுக்கும் புல்லுக்கும் விற்கமாட்டார்கள். ஆனால் 'அதிக' விலைக்கு விற்கும் வியாபாரிகளே இவர்களும்!

'ஆசைகள் வெற்றிகொண்டுவிடும் என்று உங்களுக்கு அச்சம் உண்டாகும்போது கடவுளிடம் சரண்புகுந்து கதறுங்கள். ராமநாமம் ஒன்றே என்னிடமுள்ள, வீணாகாத மருந்து' என்று காந்தியடிகள் தமது 'புலனடக்கமும் சுகபோகமும்' என்ற நூலின் முன்னுரையில் கூறியுள்ளார். தொண்டரடிப்பொடியாழ்வாரும்,

கடல்வண்ணா! கதறுகின்றேன்

என்றும்,

காரொளி வண்ண னே!என்
கண்ணனே கதறு கின்றேன்

என்றும் கதறி, 'என் விஷயத்தில் அருள்புரியவேணும்' என்று பிரார்த்திக்கிறார்.

'அதிகப் படிப்பினால் மழுங்காத அறிவும் மங்காத நம்பிக்கையும் உள்ளவர்களுக்கு, ராமநாமம் ஆபத்துக் காலங்களில் பேருதவி அளிக்கும்' என்று தாம் போதித்ததாகக் காந்தியடிகள் சொல்லுகிறார். 'படிப்பு, வாழ்க்கையின் பல கட்டங்களிலும் நமக்கு உதவியபோதிலும், ஆபத்துக் காலங்களிலும், ஆசை நம்மைத் தன் வலையில் சிக்கவைக்க வரும்போதும், அது (படிப்பு) நமக்குச் சிறிதும் பயன் படுவதில்லை. அப்பொழுது கடவுள் நம்பிக்கை ஒன்றே நம்மைக் காப்பாற்றுகிறது' என்பது காந்தியடிகளின் அநுபவம்.

Koviloor Digital Library

இதே அநுபவம் தொண்டரடிப்பொடியாழ்வாருக்கும் உண்டு என்று கருதுவது தவறாகாது. இவர் ஆழ்வாராகப் பரிணமிப்பதற்குமுன் நான்மறைகளையும், ஆறு சாஸ்திரங் களையும் கசடறக் கற்று வல்லவராய்ப் பெற்றோர்க்கு மிக்க மகிழ்ச்சி அளித்தாரென்று குருபரம்பரைக் கதைகள் தெரிவிக்கின்றன. நாளடைவில், பக்தியே முக்கியமான தென்று தெளிந்தார்.

ஐயப்பாடுகளைக் கல்வி போக்குவதில்லை; பக்தியே போக்கும் என்கிறார். கருவிலே திருவுடையவர்கள் பக்தர்களே என்கிறார். ஆசைப்பேய்களின் பயத்தைப் போக்குவது கல்வியன்று, பக்தியே என்கிறார். 'பணிவினால் மனம் தொன்றிப்' பக்தி வாழ்வு வாழ்வதே பெருவாழ்வு என்கிறார்.

அறிவைக் கொண்டு பார்த்தால் 'எல்லாம் இருளாய்'த் தோன்றக் காண்கிறேன்; அருளைக்கொண்டு பார்க்கும்போது தான் ஒளி காண்கிறேன், நெறி காண்கிறேன் - என்றார், பிற்காலப் பக்தமணி ஒருவர். இதுவே தொண்டரடிப்பொடி யாழ்வாரின் நிலையும்.

இறையருளைக் கண்ணாக இசைத்துக்கொண்டு உண்மை காண்பதற்குத் திருநாமம் பயன்பட வேண்டுமென்றால், அது கள்ளங்கபடமற்ற உள்ளத்திலிருந்து வெளிப்பட வேண்டும். ராமநாமத்தின் அளவில்லாத சக்தியை உணர்ந்துகொள்வ தற்கும் இந்த நாமம், 'மாசுமறுவற்ற உள்ளத்தின் உள்ளிருந்து வரவேண்டும்' என்றார் காந்தியடிகள். தொண்டரடிப்பொடி யாழ்வாரின் மாசற்ற குழந்தையுள்ளத்திற்குத் திருமாலை சான்று தருகிறது என்பதைச் சொல்லவா வேண்டும்?

'ராமநாமத்தை உள்ளத்தில் பதித்துக்கொண்டால் போதாதா? அதை வாயினால் சொல்வதற்கு விசேஷ மகிமை உண்டா?' என்று ஒருவர் காந்தியடிகளை ஒரு சமயம் கேட்டார். அதற்கு விடையாக, 'ராமநாமத்தை வாயினால்

Koviloor Digital Library

உச்சரிப்பதற்கு ஒரு தனி மகிமை உண்டு என்பது என் நம்பிக்கை. ... ... ராமநாம ஜபத்திற்கு அசாதாரண மகிமை உண்டு என்பது என் சொந்த அநுபவம். ஏன் எப்படி என்றெல் லாம் தெரிந்து கொள்ளத் தேவையில்லை' என்றார் காந்தியடிகள். தொண்டரடிப்பொடியாழ்வாருக்கும் திருநாமத்தை வாய் விட்டுச் சொல்வதில் விசேஷ நம்பிக்கை உண்டு.

வேறொரு சமயம் காந்தியடிகள் சொன்னார்: 'ராமநாமம் ஒருவரது உள்ளத்தில் கோயில்கொண்டிருக்குமாயின் எந்தச் சமயத்திலும், தூக்கத்திலுங்கூட அதை உச்சரிக்கலாம். ராமஜபம் பழக்கத்திற்கு வந்துவிடும்போது, மூச்சு விடுவதுபோல் அவ்வளவு இயற்கையாகிவிடுகிறது'. இது தமது அநுபவத்திலிருந்து தெரியவந்ததாகச் சொன்னார். இத்தகைய அநுபவம் தொண்டர்களுக்கெல்லாம் உண்டு; தொண்டரடிப்பொடியாழ்வாருக்குச் சிறப்பாக உண்டு.

தமது பிரார்த்தனைப் பிரசங்கம் ஒன்றில் காந்தியடிகள், ''நீங்கள் இங்கிருந்து சென்ற பிறகும் உங்கள் வீடுகளில் தனித்தும், பலருடன் சேர்ந்தும் நாமபஜனையைத் தொடர்ந்து நடத்திவருவீர்களென்று . எதிர்பார்க்கிறேன். சமூகப் பிரார்த்தனையின் ரகசியம் என்னவென்றால், ஒன்றாகக் கூடியுள்ள பலரிடத்திலிருந்தும் எழுகின்ற சக்தி, கூட்டத்தி லுள்ள அத்தனை பேருக்கும் லட்சியத்தை அடைய உதவி செய்யும்'' என்றார்.

லட்சக்கணக்கான படைவீரர்கள் தங்கள் படையின் 'பாண்டு' வாத்திய இசைக்கு இசைய அடிவைத்து நடைபோடுவதிலுள்ள சக்திக்கு ஒப்பிடுகிறார் கோஷ்டியாக இருந்து நாமசங்கீர்த்தனம் செய்வதால் ஏற்படும் சக்தியை. ஆனால் போர்வீரர்களின் சக்தி உலகத்தைப் பாழாக்க, கடவுளின் போர் வீரர்களான பக்தர்களின் சக்தியோ உலகத் திற்கு நலம் தருகிறது. 'மக்கள், தாளத்திற்கு ஒத்து ஓதும் ராம

Koviloor Digital Library

நாமாவளி, படைபலத்திலிருந்து வேறுபட்டிருப்பதோடு, அதைவிட எவ்வளவோ சக்தி வாய்ந்தது என்பதைச் சிறிதும் தயக்கமின்றி வற்புறுத்துகிறேன் - என்பது காந்தியடிகள் வாக்கு.

தொண்டரடிப் பொடியாழ்வாரும்

ஆடிப்பாடி 'அரங்க ஓ!' என்(று)
அழைக்கும் தொண்டர்.

பலரையும் சேர்த்துக்கொண்டு ஸ்ரீரங்கநாதனுடைய சந்நிதியில் நாமசங்கீர்த்தனம் செய்துவந்தார் என்று ஊகிக்கலாம்.

''மனஒருமையுடன் கடவுளின் பெயரை ஓதுவதால் பஞ்சமும் படுசாவும் நீங்க, அழியாத அமைதியும் ஆனந்தமும் தோன்றும்'' என்கிறார் காந்தியடிகள். தொண்டரடிப் பொடியாழ்வார் சேர்த்த தொண்டர் குழாமும் திருநாமத்தைப் பலருக்கும் வாழ்வில் உறுதிக்கோலாகக் காட்டி, அவர்களுக் கெல்லாம் அமைதியும் ஆனந்தமும் அளித்ததென்று கருதலாம்.

Koviloor Digital Library

11. வாழும் சோம்பர்

(அணில் கற்பிக்கும் பாடம்)

'ராமனுடைய உதவியினால் நமது புலன்கள் என்ற ராவணனை நாம் வெல்லவேண்டும். நமக்கு ராமனிடம் நம்பிக்கையிருந்து அவனுடைய அருளை அடைக்கலமாக அடைந்துவிட்டால் வெற்றி உறுதி. எல்லாவற்றுக்கும் மேலாக, தன்னம்பிக்கையை இழத்தல் கூடாது' என்பது காந்தியடிகளின் பொன்மொழிகளில் ஒன்று.

பகவானுடைய திருநாமத்தின் உதவியால் எமனையும் எமபடர்களையும் வெல்லவேண்டும் என்பதைத் தமது அநுபவ வாயிலாகப் பிறருக்கும் உபதேசம் செய்கிறார் தொண்டரடிப் பொடியாழ்வார். முதல்வன் அருளால், அவனது திருநாம மகிமையால் இவருக்குக் கிடைத்த பெருமிதமே (ஆவலிப்பு) இவர் தன்னம்பிக்கையின் விசுவரூபத்தைக் காட்டுகிறது.

கிளிப்பிள்ளைபோல், எந்திரம்போல் இவர் தாம் கற்ற நாமத்தைச் சொல்லிக்கொண்டிருந்தவர் அல்லர். குருட்டு நம்பிக்கைகளை ஒழிப்பதற்கும் இவர் திருநாமத்தை ஒரு பெருந்துணையாகக் கொண்டார்.

ஆனால் தொண்டு பூண்டு உழைக்கும் தொண்டர்களுக்கே திருநாமம் உரிய செல்வமாகும் என்பது இவர் கொள்கை. கேவலம் வாய்த்தொண்டு புரிவோருக்கும், தொண்டுக்கோலம் மாத்திரம் பூண்டு தொண்டு நெறியில் நில்லாதவர்களுக்கும் திருநாமம் பயன்படுவதில்லை.

Koviloor Digital Library

'செயல் ஒன்றும் புரியவேண்டியதில்லை; நல்வினையும் ஒரு பொன் விலங்குதானே!' என்றெல்லாம் திண்ணை வேதாந்தம் ஆழ்வாருக்கு உடன்பாடன்று.

ஒருவன் வளர்ச்சியுறுவதற்குச் செயல் இன்றியமையாத தென்றும், அது பயன்கருதாச் செயலாக இருக்க வேண்டு மென்றும், அத்தகைய செயல்புரிய உதவுவதற்கும், அத்தகைய செயலுக்குக் கடவுளிடமிருந்து உதவி பெறுவதற்கும் ராமநாமம் பயன்படுமென்றும் காந்தியடிகள் கூறியுள்ளார். எனவே செயலை நிறுத்திவிட்டு ஜபம் செய்வதிலோ, ஜபமாலை உருட்டிக்கொண்டிருப்பதிலோ பயனில்லை.

தொண்டரடிப்பொடியாழ்வாரும் கைங்கரியத்தைச் சரியான பாதையில் செலுத்துவதற்கும், அதற்காக அச்சத்தை ஒழித்து உள்ளத்தைச் செம்மைப்படுத்திக்கொள்வதற்குமே முதல்வனின் நாமம் கற்றார் என்றுசொல்லவேண்டும். திருநாம அமுதத்தை உண்ணவேண்டுமென்றால் தொண்டு பூண்டுதான் ஆகவேண்டும் என்பர்.

அறம்சுவர் ஆகி நின்ற
அரங்கனார்க்கு ஆட்செய் யாதே

வேறு எது செய்தாலும் பயனில்லை என்பர்.

அழகிய மணவாளனுக்கு ஏழு மதில்கள் உண்டு என்பதை நாம் அறிவோம். ஆழ்வாரோ அறமே மதிலாகி நிற்கிறது என்பர். அறத்திற்கு அரணாக இருப்பவன் ஆண்டவன் என்ற பொருளையும்,

அறம்சுவர் ஆகி நின்ற
அரங்கனார்

என்ற சொற்றொடரில் கண்டுகொள்ளலாம்.

'அறமாகிய சுவர், வடிவெடுத்து வந்தாற்போல் இவருக்கு அழகிய மணவாளன் காட்சி கொடுத்தான் என்று

Koviloor Digital Library

கருதலாம். இப்பெருமானுக்கு ஆட்செய்வதென்றால், பயன் கருதாது லோகோபகாரமான அறச்செயல்களில் இவன் பெயரால் ஈடுபட வேண்டியதுதானே.

அவதார மூர்த்திகளான கண்ணனும் ராமனும் செயலற்றுச் சும்மா இருந்து சுகம் பெறவில்லை.

கற்றினம் மேய்த்த எந்தை

(கற்றினம் - கன்றுகளின் கூட்டம்.)

என்று கண்ணனைக் குறிப்பிடுகிறார். ராமனையோ, ''ஒரு வில்லால், கடல் அடைத்து உலகம் உய்ய அரக்கர்கோனை வென்றவன்'' என்கிறார்.

தொண்டர்களும் தொண்டுபுரிய வேண்டியதுதான்; கடவுளை நம்பி அவன் திருநாமத்தைச் சொல்லிக்கொண்டே பயனை அவனுக்கு உரிமையாக்கித் தொண்டுபுரிய வேண்டியதுதான். இதுவே பயத்திற்கு மருந்து; கவலைக்கு மருந்து; வெங்காம வெம்பிணிக்கும் உண்மையாகவே ஒரு மாமருந்தாகும்.

இக்கொள்கையைத் தொண்டரடிப்பொடியாழ்வார் தம் வாழ்க்கையிலும் அநுஷ்டித்துக் காட்டினார். சோலை சூழ்ந்த அரங்கத்திலே 'சோலைக்குள்ளே சோலை' என்று சொல்லும் படி இவர் தம் பூங்காவை அமைத்துக்கொண்டு தொண்டு பூண்டு உழைத்தாரல்லவா?

பணிவினால் அரங்கனுடன் மனம் ஒன்றி வாழ வேண்டும் என்றவர், பணியினால் வாழவேண்டும் என்பதையும் உய்த்துணர வைக்கிறார்; வெளிப்படையாகவும் சொல்லுகிறார்.

எல்லாக் காலங்களிலும் பூக்களைக் கொண்டு அழகிய மணவாளனின் பொன்னடி புனைவதில் இவருக்குள்ள விருப்பம் நாம் அறிந்ததே. இதற்காகத்தான் தோட்டக் கலைஞராகித் தோட்டப்பணி புரிந்தார்.

Koviloor Digital Library

'நெஞ்சாலுங்கூட ஆட்செய்யாது அவஸ்தைப் படுகிறேனே!' என்று கதறியவர்,

எம்பிராற்கு ஆட்செய் யாதே
என்செய்வான் தோன்றி னேனே

(எம்பிராற்கு - எம்பிரானுக்கு)

என்று வருந்தியவர், தொண்டுபூண்டு உழைப்பதில் அளவில்லாத ஆசை கொண்டிருந்தார் என்று சொல்லவேண்டும்.

தொண்டன் எப்படிக் கைங்கரியம் புரியவேண்டும் என்பது குறித்து இந்த ஆழ்வார் ஆச்சரியமாக வழி காட்டியுள்ளார். முதல்முதல் மேலான பொருள் என்று பிறர் கருதுவதிலுள்ள ஆசையை அடியோடு விட்டுவிட வேண்டுமாம்.

மேம்பாட்டை விளைவிக்கும் பொருளில் ஆசையை விட வேண்டுமென்றால் அதிலும் மேம்பட்ட ஒன்றைப் பற்றிக்கொள்ள வேண்டுமல்லவா? 'மெய்ம்மை' யைப் பற்றிக் கொள்ள வேண்டும் என்கிறார். 'மெய்ம்மை' என்றால், பகவானுக்கும் பாகவதர்களுக்கும் கைங்கரியம் புரிவதே தனது கடமை என்று ஒருவன் உணர்ந்துகொள்வது தான் என்பர்.

இந்த மெய்ம்மை உணர்வினால் கிடைக்கும் பரிசுதான் என்ன? கைங்கரியமே புருஷார்த்தம் என்பதுதான். சாதாரணமாக அறம் பொருள் இன்பம் வீடு என்று நால்வகைப் புருஷார்த்தங்களைக் கூறுவது உண்டு. பாகவதனுக்கோ தொண்டு புரிவதே புருஷார்த்தமாய்க் காண்கிறது.

இத்தகைய கைங்கரிய நெறியிலேயே புலனடக்கமும் சித்திக்கிறதாம். இந்த நெறியில் செல்லுகிறவர்கள் அகங்காரத்தைத் தூண்டும் உபாயங்களையும், சாதனங்களையும் பற்றற ஒழித்துவிடுவார்களாம்.

Koviloor Digital Library

இத்தொண்டர்கள் இறைவனுடைய சந்நிதியிலேயே வாழும் உணர்ச்சியுடன் கைங்கரியம் புரிந்துகொண்டிருப்பார்களாம். இவர்கள் பகவானுடைய விசேஷ உகப்பிற்கு உரியவர்கள் என்கிறார் ஆழ்வார்.

இந்தத் தூய தொண்டு - வாழ்வின் முழுச் சித்திரத்தையும் இப்பாட்டிலே காணலாம்:

> மேம்பொருள் போக விட்டு
> மெய்ம்மையை மிகஉ ணர்ந்து
> ஆம்பரி(சு) அறிந்து கொண்டு
> ஐம்புலன் அகத்(து) அடக்கி
> காம்(பு)அறத் தலைசி ரைத்(து)உன்
> கடைத்தலை யிருந்து வாழும்
> சோம்பரை உகத்திபோலும்
> சூழ்புனல் அரங்கத் தானே!

(மேம்பொருள் - மேவின பொருள், மேம்பாட்டை விளைவிக்கும் பொருள். ஆம்பரிசு - ஆகும் பரிசு, மெய்ம்மையை உணர்ந்துகொண்டவருக்கு உரிய பரிசு. காம்பு அற - அடிவேர் அற்றுப் பேர்கும்படி. கடைத்தலை - தலைக்கடை, சந்நிதி, திருவாசல். உகத்திபோலும் - நீ உகக்கிறாய்.)

பிறர் மேம்பொருளாகக் கருதி அபிமானிக்கும் பொருள்களையெல்லாம் அநாயாஸமாக அடியோடு போகவிட்டுவிடும் ஆற்றல் தொண்டனுக்கு உண்டு. மெய்ம்மையைப் பற்றிக்கொண்டு அதனோடு இசையாத பொருள்களைத் துறந்துவிடுகிறானாம்.

ஆத்மா பரமாத்மாவுக்குத் தொண்டுபூண்டு ஒழுக வேண்டும் என்பதை உள்ளபடி உணர்ந்துகொள்ளும்போது, தொண்டன் மெய்ம்மையை மிக உணர்ந்தவனாகிறான் என்பர். இப்படி மெய்ம்மையை உணர்ந்துகொள்கிறவன் கைங்

Koviloor Digital Library

கரியமே புருஷார்த்தம் என்பதைத் தெளிவாக அறிந்துகொண்டு அப்படியே ஒழுகி வருகிறான்.

இந்தத் தொண்டுநெறியில் புலனடக்கம் எளிதாகிறது. புலனடக்கத்தைச் சாதனமாகக் கொண்டு முன்னேறவேண்டும் என்று சாதாரணமாகக் கூறுவதுண்டு. இது எவ்வளவோ கஷ்டமான காரியம். பக்தர்களோ புலனடக்கத்தைச் சாதனமாகக் கொள்ளாமல் கைங்கரிய நெறியிலே சுலபமாய் ஒரு பலனாகப் பெற்றுக்கொள்கிறார்களாம்.

பக்தி பண்ணிக் கைங்கரியம் செய்துகொண்டிருக்கும் போதே ஐம்புலனும் அடங்கப்பெறுவர் என்பது குறிப்பு. எம்பெருமானுக்கும் அன்பர்களுக்கும் இனிதாகக் கைங்கரியம் புரியும்போது புலன்கள் சுலபமாக அடங்கிப் போகின்றனவாம்.

இனி, 'காம்பறத் தலைசிரைத்து' என்ற ஓர் அம்சத்தைத் தொண்டுநெறியின் ஒரு மைல் கல்லாகக் காட்டுகிறார் ஆழ்வார். அகங்காரத்தைப் போக்குவதற்கு அக்காலத்து அரசர்கள் விதிக்கும் தண்டனை ஒன்றை அடிப்படையாகக் கொண்டது இந்த நிலை. அகங்காரத்தைத் தூண்டும் சாதனங்கள் உபாயங்கள் ஆகியவற்றிலுள்ள பற்றை அறவே விட்டுவிடவேண்டும் என்பது கருத்து.

சாதனப்பற்றை, உபாயங்களின் மீதுள்ள பற்றை ஒழித்து விடவில்லையென்றால், நம்முடைய முயற்சியால் வெற்றி பெற்று விட்டோம் என்ற அகங்காரம் தோன்றிவிடும். ஏதோ ஒரு விலையைக் கொடுத்துச் சந்தையிலோ க்டையிலோ ஒரு சாமான்வாங்குவதுபோல் இறையருளை வாங்கிக்கொள்ள முடியாது; இவ்விதமாக இறைவன் உகப்பையும் பெற்றுக் கொள்ள முடியாது.

காதலியின் புன்னகையை விலை கொடுத்தோ, வழக்காடியோ பெறுவது போலத்தான், உபாயங்களால், சாதனங்களால் இறைவனது உகப்பை, முக மலர்ச்சியைப்

Koviloor Digital Library

பெற்றுக் கொள்ளலாம் என்பதும்! அகங்காரத்தையும் அதைத் தூண்டும் செயல்களையும் விட்டொழித்துக் காதலால் பணிபுரிவதே காதலன் காதலியின் அன்பையும், காதலி காதலனின் அன்பையும் பெறுவதற்கு உரிய ராஜமார்க்க மாகும்.

இந்த ராஜமார்க்கத்திலே அடிவைப்பவர், 'நாம் எப்போதும் எம்பெருமான் சந்நிதியிலேயே இருக்கிறோம்; அவன் திருவாசலையே பற்றிக் கிடக்கிறோம்' என்ற உணர்ச்சியுடன் இருப்பார்கள். எனவே ஆழ்வார் இறைவனை நோக்கி, ''அவர்கள் எப்போதும் உன் கடைத்தலையிருந்து வாழ்பவர்கள்'' என்கிறார்.

மேலை நாட்டு மெய்ஞ்ஞானி ஒருவரும் இறைவன் சந்நிதியிலேயே இருந்து வாழும் உணர்ச்சியைப் பிரஸ்தாபிக் கிறார். தியான வேளைகளில் பகவானுடைய சந்நிதியிலேயே உள்ளத்தை நிறுத்தி அது அப்பாலோ இப்பாலோ அலைந்து திரியாதபடி பார்த்துக்கொண்டாராம். இந்த உணர்ச்சியை அடைவதற்குக் காயக்கிலேசம் முதலான கடுந்தவ முறைகள் பயன்படவில்லை என்கிறார். விரதம், பிராயச்சித்தம் முதலான உபாயங்களும் இந்த நெறியில் இடையூறுகளே என்கிறார்.

இறைவனுடைய சந்நிதியிலிருந்து வாழும் உணர்ச்சியைப் பெறுவதற்குக் கல்வியோ சாஸ்திரமோ அத்தியாவசியமல்ல என்றும் சொல்லுகிறார். ''என்னுடைய எண்ணங்களுக்கும் ஆசைகளுக்கும் லட்சியம் ஈசனே என்று துணிந்து சிரத்தை நிறைந்த உணர்ச்சியின் மூலமாகவும், விசுவாசம் என்னும் ஒளியின் உதவியாலும் பகவானது இருப்பை என் நெஞ்சில் பதிய வைக்க விரும்பினேன்'' என்கிறார்.

மேலும் இந்த மெய்ஞ்ஞானி, ''எல்லாச் செயல்களை யும் அவனுக்கே அர்ப்பணம் செய்தேன். கைங்கரியத்திலே சிறியது, பெரியது என்று கருதாமல் நம்பிக்கையும்

Koviloor Digital Library

சிரத்தையுமே முக்கியமென்று கருதி ஒழுகினேன்'' என்கிறார். அந்தக் கருத்துக்களை உள்ளத்தில் கொண்டு, 'உன் கடைத் தலையிருந்து வாழும்' என்ற சொற்றொடர்க்கும் பொருள் காண்பது அரிதன்று.

ஆனால் 'சோம்பர்' என்று தொண்டர்களைக் குறிப் பிடுவதற்குக் காரணம் என்ன? 'வாழும் சோம்பர்' என்று ஆழ்வார் குறிப்பிடுவது கூர்ந்து நோக்கத்தக்கது.

பணி செய்யாதவர்களுக்கு வாழ்வும் இல்லை. எனவே வாழும் சோம்பர் என்பதற்கு, ''சுயநலமான காரியங்களில் சோம்பியிருப்பவர்கள்'' என்று பொருள்பட உரையிடுவர் உரையாசிரியர்.

தன்னலம் என்றால் பின்வாங்கிப் பரோபகாரம் என்றால் முன்வந்து உழைப்பவர்களை, ஆண்டவனுக்கும் அன்பர் களுக்கும் குதூகலமாகப் பணிசெய்ய முந்துகிறவர்களை, 'வாழும் சோம்பர்' என்பர் தொண்டரடிப்பொடியாழ்வார்.

இத்தொண்டர்கள் நீறுபூத்த நெருப்பைப்போல் இருப்பார்கள். பண்டிதத் திறமையோ செருக்கோ இவர்களிடம் காணப்படுவதில்லை. தாமரையிலைத் தண்ணீர்போல் உலகத்தில் வாழ்வார்கள்.

சிறிதும் தங்களை விளம்பரப் படுத்திக்கொள்ளாமல் தொண்டினாலேயே மறைந்திருப்பார்கள். இவர்களை இறைவன் கண்டுபிடித்து உகப்பதாகக் கூறி, இவர்கள் பிடித்தொழுகும் பெருவழியே தொண்டுநெறி என்பதை வற்புறுத்துகிறார் தொண்டரடிப்பொடியாழ்வார்.

தொண்டிலே சிறியது பெரியது ,என்ற வேற்றுமை கொண்டு அற்பத் தொண்டையும் அலட்சியம் செய்வது சரியன்று. கள்ளங்கபடமற்ற குழந்தையுள்ளத்துடன் தொண்டிலே ஒருவன் தன்னை முழுக்க இழப்பதே தொண்டு நெறியின் உயிர்நிலை அம்சமாகும்.

Koviloor Digital Library

இந்த உண்மையை வலியுறுத்தத் தொண்டரடிப்பொடி யாழ்வார், 'அணிலும் சேதுபந்தனமும்' என்ற ஒரு விநோதக் கதையை ராமகதையின் பகுதியாக்கிக் காட்டுகிறார். ராமன் இலங்கை செல்வதற்காக அணைகட்ட நேர்ந்தபோது நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சி இது.

வானர வீரர்கள் மரங்களையும், மலைகளையும் கொணர்ந்து வீசி எறிந்து கடலைத் தூர்க்கிறார்கள். 'ஆகா, என்ன லோகோபகாரமான கைங்கரியம்!' என்று மூன்று லோகமும் வியந்து பார்த்துக்கொண்டிருக்கிறது. 'இந்த வானர வீரர்களின் பாக்கியமே பாக்கியம்!' என்று பாராட்டுகிறது.

இந்த மகத்தான கைங்கரியம் கண்டு, 'இதில் நம்மால் பங்கு கொள்ள இயலவில்லையே; இதற்கு இசைந்த வலிமையோ வசதியோ நம்மிடம் இல்லையே!' என்று வருந்தியவர்கள் உண்டு. வானர வீரர்கள்மீது பொறாமை கொண்டவர்களும் உண்டு.

அணிற் பிள்ளைகளும் கடல்தூர்த்த கைங்கரியம் கண்டு அத்தகைய பெருமுயற்சியில் கலந்துகொள்ள விரும்பின. ஆனால் அநுமன், சுக்கிரீவன் போன்ற வானர வீரர்கள் எங்கே? அணிற் பிள்ளைகள் எங்கே? எத்தனையோ பலசாலிகள், வீரர்கள், பரோபகார சீலர்கள் பங்குகொள்ள இயலாதிருக்கும் போது, அணில் என்ன செய்யமுடியும்?

ஆசைபெரிது, ஆற்றலோ சிறிது. எனினும் கைங்கரிய ஆசை உண்மையாக இருக்கும்போது உள்ளத்தின் உண்மை யொளி ஒரு வழிகாட்டித்தான் தீரும். 'நாமும் நமது அற்ப ஆற்றலுக்கேற்றவாறு இப்பெருந் தொண்டினில் ஈடுபடு வோம்' என்று துணிந்தன அணிற் பிள்ளைகள்.

'மலைகளை வானரர்கள் தூக்கி வீச, நாம் மணலையாவது கொஞ்சங் கொஞ்சமாகக் கொண்டுபோய்க் கடலில் போடுவோம்!' என்று எண்ணமிட்டன. மணலைத்

Koviloor Digital Library

நான் அணில் எப்படிக் கொண்டுபோக முடியும்? அது உடம்பில் ஒட்டினால் தானே?

ஆனால் கைங்கரிய ஆசை, ஒளி காட்டி நெறி காட்டாமல் இருக்குமா? அணில் - மேதை ஒன்றின் உள்ளத்திலே உதித்தது ஓர் யோசனை. மணலில் புரண்டு பார்த்து மணற் பொடிகூட ஒட்டாதது கண்டு, அந்த அணில் கடல் ஓரத்திலே சென்றது, இனி என் செய்வோம் என்று.

அலைத்திவலைகளால் அதன் உடம்பு நனைந்துபோக, அது அந்த ஈர உடம்புடனேயே கரைமேல் மணலில் மறுபடியும் புரண்டு பார்த்தது. இப்போது உடம்பில் ஒட்டிக் கொண்டது மணல். மகிழ்ச்சியுடன் அந்த மணலைக் கடலிலேகொண்டு உதறியது.

இப்போது தெரிந்துவிட்டது இன்னது செய்ய வேண்டும் என்று. கடல் அலைகளில் நனைவதும், அந்த ஈர உடம்பை மணலில் புரட்டுவதும், உடம்பில் ஒட்டிய அந்த மணலைக் கொண்டு போய்க் கடலில் சேர்ப்பதும் ஆகிய அந்தக் கைங்கரிய வழியை மற்ற அணில்களும் தெரிந்துகொண்டன.

இவ்விதமாகச் சேதுபந்தனக் கைங்கரியப் பெரு முயற்சியில் அணில்களும் பங்குகொண்டன. வானர வீரர் களின் கைங்கரியத்தை உகந்ததுபோல் ராமன் அணில்களின் கைங்கரியத்தையும் உகந்தருளினான் என்பர்.

கைங்கரிய வழியின் ஒரு மகத்தான ரகசியத்தை இந்தக் குட்டிக்கதை எவ்வளவு அழகாக, எவ்வளவு தெளிவாக, எவ்வளவு பொருத்தமாக வெளியிடுகிறது பாருங்கள்! 'ராமன் அணைக்கு அணிலும் உதவிசெய்த மாதிரி' என்று சாதாரணமாகத் தமிழ் மக்கள் பேசிக்கொள்வதுண்டு. நம் தமிழகத்தில் இக்கதை பிரசித்தமானது.

இது வடநாட்டார் அறியாத கதை; வடநூல்களில் காணப்படாத தொன்று. இந்தக் கதையைத் தொண்டரடிப்

Koviloor Digital Library

பொடியாழ்வார் ஸ்ரீரங்கேச கைங்கரியத்தின் ஓர் அரிய ரகசியத்தை வெளியிடப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்;

குரங்குகள் மலையை நூக்கக்
குளித்துத்தாம் புரண்டிட்(டு) ஓடித்
தரங்கநீர் அடைக்க லுற்ற
சலமிலா அணிலும் போலேன்!

(நூக்க - தள்ளிக்கொண்டு வர. தரங்கநீர் - அலைக் கிளர்ச்சியுள்ள சமுத்திரத்தை. சலம்இலா - கபடம் அற்ற. அணிலும் போலேன் - அணில்களையும் நான் ஒத்திருக்க வில்லை.)

இந்தக் கதை தொண்டரடிப் பொடியாழ்வார் 'தாமாக ஸாக்ஷாத்கரித்த விருத்தாந்தம் என்பர் பெரியோர்' என்று காஞ்சி மகா வித்வான் அண்ணங்கராசாரியார் தமது திவ்யார்த்த தீபிகை என்னும் உரையில் கூறியுள்ளார். இந்த அபிப் பிராயத்தை அரண் செய்வதற்காக, 'மற்றையாழ்வார்கள் திவ்யப்ரபந்தங்களிலும் இவ்வாறு தாமாக ஸாக்ஷாத்கரித்த விருத்தாந்தங்கள் சில கூறப்பட்டுள்ளமை அறிக' என்றும் கூறுவர்.

ஆழ்வார்கள் சொல்லும் கதைகளெல்லாம் இதிகாசங் களிலும் புராணங்களிலும் காணப்படுகின்றன என்பதில்லை. தமிழ்நாட்டில் மட்டும் பரம்பரையாக வழங்கிவந்த கதைகளையும் செவிவழிச் செய்திகளையும் ஆழ்வார்கள் உபயோகித்துக் கொள்கிறார்கள் என்பது உண்மைதான். முக்கியமாக ராம கதைகளிலும் கண்ணன் கதைகளிலும் தமிழ்நாட்டு வழக்குகளைத் திவ்யப்பிரபந்தத்திலேயே காண்கிறோம்.

எனினும், 'அணிலும் சேதுபந்தனமும்' என்ற கதை, ஆழ்வார் தாமாக ஸாக்ஷாத்கரித்த விருத்தாந்தந்தானா? என்பது ஆராய்ச்சிக்கு உரியது. 'இவ்வரலாறு ஆழ்வார்கள் காலத்துக்கு

Koviloor Digital Library

முற்பட்ட வழக்காயிருத்தலால், பழைய தமிழ்ச் செய்திகளுள் ஒன்றாகவே இதுவும் நாம் சேர்த்துக்கொள்ளற்குரியது' என்று ஆராய்ச்சிப் பேரறிஞர் திரு.மு. இராகவையங்கார் கூறுவது கவனிக்கத்தக்கது.

பேராசிரியர் காளிதாஸ நாக் என்பவர் ஒரு சமயம் சென்னைப் பல்கலைக் கழக மண்டபத்தில் செய்த சொற்பொழிவு ஒன்றில், சுமத்ரா, ஜாவா முதலிய தீவுகளில் வழங்கும் ராமாயணத்திலே அணிற்கதை காணப்படுகிறது என்று தெரிவித்தார். அந்த அணிற்கதை அமைந்த சித்திரத்தையும் 'மாஜிக் லான்டர்ன்' மூலம் விளங்கக் காட்டினார்.

அந்த அணிற் கதைக்குத் தென்னாட்டு வழக்கு உண்டென்று அவர் கூறியதையும் திரு.மு. இராகவையங்கார் தமது அபிப்பிராயத்திற்கு ஆதாரமாகக் காட்டியுள்ளார். அணிற் கதையைத் தொண்டரடிப்பொடியாழ்வார் தாமாகக் கற்பனை செய்துகொண்டார் என்று சொல்வதைக் காட்டிலும் பழைய தமிழ் வழக்கைத் தழுவித் தம் பாசுரத்தில் பயன்படுத்திக் கொண்டார் என்று கருதுவதே பொருத்தமாகத் தோன்றுகிறது.

இது எப்படி இருந்தாலும், தொண்டரடிப்பொடி யாழ்வாரின் அணிற்கதை அமைந்த வாக்கு, கைங்கரிய தத்துவத்தின் ஓர் உயிர்நிலை அம்சத்தை நன்கு வெளியிடுகிறது எனலாம். கைங்கரியத்திலே ஆசை, ஆற்றல் அளிக்கிறது. வழியைக் காட்டுகிறது. உள்ளம் மட்டும் தூய குழந்தை யுள்ளமாக இருக்க வேண்டும்.

என்ன செய்யலாம்? எப்போது செய்யலாம்? எப்படிச் செய்யலாம்? யாருக்குச் செய்யலாம்? இவை கைங்கரியத்தில் ஈடுபடுவோர் உள்ளத்தில் எழுகின்ற நாலு முக்கியமான கேள்விகள். இந்த நான்கு கேள்விகளுக்கும் உரிய விடைகளை ஆழ்வாரின் அணிற்கதையிலே கண்டுகொள்ளலாமென்று தோன்றுகிறது.

Koviloor Digital Library

ராமன் அணைகட்டத் தொடங்கியதும் நாமும் அந்தப் பணியில் பங்கு கொள்ளவேண்டுமென்று அணில்கள் துணிந்தன. ராமனுக்கே பணிசெய்வதென்று தீர்மானித்ததால், எவருக்குப் பணி தேவையோ, அவருக்குத் தேவையான பணியைச் செய்ய வேண்டும் என்ற உண்மை இனிது புலனாகிறது.

இனி எப்போது செய்யலாம்? என்ற கேள்விக்கு விடைகிடைத்துவிடுகிறது இதே கதையில். அணைகட்டி முடிந்து ராமனும் வானரர்களும் அப்பால் போனபின் அணில்கள் மணலில் புரண்டு உருண்டாலும், கடல் தூர்ந்துபோகும்படி மணல்களை உதிர்த்துவிட்டாலும் பயன் ஒன்றும் இல்லை. 'அன்றே அப்போதே கைங்கரியம், அதுவே கைங்கரியம்' என்ற நிலையில் அணில்கள் பணிபுரிந்தது நமக்கும் வழிகாட்டுவதுதான்.

'எப்படிப் பணிபுரிவது? என்ற கேள்விக்கும் விடை தருகிறது இந்தக் குட்டிக்கதை. ஆசையில் பொதிந்து கிடக்கும் சூட்சும ஆற்றலை விழிக்கச் செய்து பயன்படுத்திக் கொண்டன கதையில் வரும் அணில்கள். கள்ளங் கபடற்ற தொண்டுக் காதல் தனக்கு வழியை எப்படியும் வகுத்துக்கொள்ளும் என்பது உறுதி.

குரங்குகள் மலைகளைத் தள்ளிக்கொண்டு வந்து கடல் தூர்க்கும்போது குளித்துப் புரண்டு ஓடிய அணில்களையும்

தரங்கநீர் அடைக்க லுற்ற
சலமிலா அணிலும்

என்று குறிப்பிடுவது கருத்தூன்றி நோக்கத்தக்கது. அணில்செய்த அற்பப் பணியையும் ராமன் பாராட்டினான் என்பதல்ல. அந்த உள்ளத்தை வியந்து அணில்களும் சேர்ந்து அணைகட்டியதாகவே ராமன் மகிழ்வெய்தினான் என்பது கருத்து.

Koviloor Digital Library

'குரங்குகள் மலையை நூக்க' என்று ஆழ்வார் கூறுவதிலும் ஒரு விசேஷமான கைங்கரிய பாடம் கற்றுக்கொள்ளலாம் என்பர் பெரியவாச்சான் பிள்ளை. 'குரங்குகள்' என்ற பன்மைக்கு இசைந்தபடி 'மலைகள்' என்று சொல்லாமல் மலை என்றுதானே சொல்லுகிறார் ஆழ்வார்.

'மலைகளாலே கடலைத் தூர்க்கிற இடத்தில், மலை களுக்குத் தொகையுண்டாய் ஸ்ரீவானரர்களுக்குத் தொகை இல்லாமையாலே ஒருமலையை அநேகர் கூடித் தொட்டுக் கொண்டு வருவார்கள்' என்பது வியாக்கியானம். உபாத்தியாயர் ஒரு பொருளை வாங்கிவரச் சொன்னால், அது ஒரே பையன் கொண்டுபோகக்கூடிய ஒரு சிறு பொருளாயினும், பிள்ளைகள் எல்லோரும் கூடிச் செய்ய விரும்புவது உண்டல்லவா?

'ஒருவன் கொண்டுபோய்க் கொடுத்தால் அவனைத் தானே உபாத்தியாயர் உகந்திருப்பர்' என்பது சிறுவர்களின் எண்ணம். அப்படியே ராமனுடைய உகப்பிற்கும் வானரர்கள் எல்லாரும் போட்டி போடுகிறார்களாம்.

அணில்களோ ராமன் கட்டளை இல்லாமலே பணிபுரியத் தொடங்கிவிட்டன. அவன் பார்த்து உகக்க வேணுமே என்றும் கவலைப்படவில்லை. 'இந்த அணில் களைப்போல் பணி செய்தாலும் போதுமே! எப்படியாவது பகவானது கைங்கரியத்தில் நெஞ்சை ஈடுபடச் செய்ய வேண்டும். கைங்கரியத்தை மறப்பது அனர்த்தம்' என்று ஆழ்வார் அருளிச் செய்கிறார்.

'வாழும் சோம்பர்'களாய்ப் பணிபுரிய விரும்பு வோருக்கு அணிலும் பாடம் கற்பிக்கிறது. ஏன், இயற்கை யன்னை இறைவன் ஆணையை எத்தனை விதமாகப் புலப்படுத்தி நல்வழி காட்டுகிறாள்!

Koviloor Digital Library

12. தொண்டக்குலம் ஒன்றே

நடாதூர் ஆழ்வான் என்ற பக்தர் ஒருவர் ஒரு ஸ்ரீவைஷ்ணவர் கையைப் பிடித்துக்கொண்டு ஸ்ரீரங்கத்தில் ஒரு வீதியிலே போய்க்கொண்டிருந்தார். 'பஞ்சமர்' என்றும் 'தாழ்ந்த வகுப்பினர்' என்றும் ஒதுக்கப்பட்டிருந்தவர்களில் ஒருவரை (இவரும் பக்தரே) வீதியின் நடுவிலே இவர்கள் சந்திக்க நேர்ந்தது.

எதிரே வந்தவர் நெருங்கி வந்ததும் நடாதூர் ஆழ்வானுக்குக் கைகொடுத்துக்கொண்டு வந்தவர், ''கடக்கப்போ'' என்று சொல்லிவிட்டார். இதுகேட்டு நடாதூர் ஆழ்வான் மூர்ச்சித்துப்போனார்.

மூர்ச்சை தெளிந்த பின்பு அருகு நின்றவர்கள், ''ஏன் இப்படி மூர்ச்சயையாகிவிட்டீர்கள்?'' என்று கேட்டார்கள். அதற்கு நடாதூர் ஆழ்வான், ''திருக்குலத்திலே திருவவதரித்து இரண்டாற்றுக்கும் நடுவே வர்த்திக்கப்பெற்ற மகானுபாவனா பறையன்? நெடுங்காலம் ஆத்மாபஹாரம் பண்ணித் திரிந்த நானன்றோ பறையன்?'' என்று பதில் சொன்னதாக வார்த்தாமாலை என்ற நூல் தெரிவிக்கிறது.

பக்த மணிகளான பெரியோர்களின் வார்த்தைகளாகிய மலர்களை மாலையாகத் தொடுத்துக் காட்டுகிறது இந்த நூல். அவர்கள் வெளியிட்ட கருத்துக்களை மாத்திரமல்ல; 'முன்னோர் மொழிபொருளே அன்றி அவர் பொழியும் பொன்னே போல்' அப்படியே போற்றி வைத்திருக்கிறது வார்த்தாமாலை.

மேலே சொன்ன கதையில் நடாதூர் ஆழ்வான் வார்த்தையை அப்படியே வார்த்தா மாலையில் உள்ளபடி

Koviloor Digital Library

கண்டுகொள்ளலாம். உயர் குலத்தினரான நடாதூர் ஆழ்வான் ''ஆத்மாபஹாரம் (இறைவனுக்குரிய ஆத்மாவைத் தனக்கு உரியதென்று கருதியிருக்கும் களவு) பண்ணித் திரிந்த நானன்றோ பறையன்?'' என்று கூறுவது கூர்ந்து நோக்கத் தக்கது.

பிறப்பால் உயர்வு தாழ்வு கருதுவதைத் தொண்டர்கள் ஒப்புக்கொள்வதில்லை. 'தாழ்த்தப்பட்ட' வகுப்பினரை 'ஹரி ஜனங்கள்' என்று காந்தியடிகள் குறிப்பிட்டதுபோல் 'திருக்குலத்தினர்' என்று அந்த நாளிலே திருவரங்கத்திலுள்ள தொண்டர்கள் குறிப்பிட்டதுண்டு.

சாதிச் செருக்குடன் அந்த ஸ்ரீவைஷ்ணவர் திருக்குலத்து ஸ்ரீவைஷ்ணவர் ஒருவரை விலகிக்கொள்ளச் சொன்னவுடன், நடாதூர் ஆழ்வான் என்ற பெரியார் அதைப் பொறுக்க முடியாமல் மூர்ச்சித்துப் போனதும், 'அந்தக் குலம் அவருக்கு இல்லை; எனக்குத்தான்!' என்று சொன்னதும் காந்தி யுகத்திற்கு முன்பே பக்தி யுகம் பக்தி நெறியிலே தீண்டாமை - விலக்கிற்கு ஒரு நல்ல வழிகாட்டியாயிருக்கிறது என்பதை நினைவூட்டு கின்றன.

இறைவனுக்கும் கைங்கரியத்திற்கும் உரிய ஆத்மாவை, 'எனது' என்று அகங்காரம் கொண்டிருப்பதை 'ஆத்மாபகாரக் களவு' என்பர். இந்தக் களவு செய்பவனே சண்டாளன் என்பது நடாதூர் ஆழ்வான் கருத்து. இப்பெரியாரின் இந்த வார்த்தையை 'வார்த்தா மாலை'யிலுள்ள வாடாத நன்மலர்களில் ஒன்றாக மதிக்கலாம்.

'சண்டாளன் யார்?' என்று கேட்க, 'அகங்காரம்' என்று பதில் சொன்னாராம் வேறொரு பெரியார். சண்டாளன் மனைவியின் பெயர் 'மமகாரம்' என்றும் சொன்னாராம். அகங்காரம் என்றால் அகப்பற்று; மமகாரம் என்றால் புறப்பற்று. இவர்களுடைய குழந்தைகளாக விருப்பு வெறுப்புக்களை (ராகத்வேஷங்களை)க் குறிப்பிட்டாராம்.

Koviloor Digital Library

திருமலையில் ஜீயர் அருளிச் செய்த வார்த்தையாக இக்கொள்கை வார்த்தாமாலையில் வெளியிடப் பெறுகிறது. இந்த வார்த்தைக்கும், நடாதூர் ஆழ்வான் வார்த்தைக்கும் ஆணிவேராகிய கொள்கையைத் தொண்டரடிப்பொடி யாழ்வார் 'திருமாலை'யில் காண்கிறோம்.

முக்கியமாக இரண்டு பாடல்களில் வற்புறுத்துகிறார், இந்த ஆழ்வார் 'தொண்டக்குலம் ஒன்றே' என்ற கொள்கையை. முதலாவது பாட்டு, வைதிகர்களான பிராம்மணர்களை நோக்கிப் பகவான் பேசுவதுபோல் அமைந் திருக்கிறது. மற்றது ஸ்ரீவைஷ்ணவப் பிராம்மணர்களைக் குறித்து இவர் பேசுவதுபோல் அமைந்திருக்கிறது.

முதலாவது பாட்டு வருமாறு:

பழுதிலா ஒழுக லாற்றுப்
பலசதுப் பேதி மார்கள்!
இழிகுலத் தவர்க ளேலும்,
எம்அடி யார்க ளாகில்,
'தொழுமின்நீர்; கொடுமின்; கொள்மின்;
என்று,நின் னோடும் ஒக்க
வழிபட அருளி னாய்போல்
மதிள்திரு அரங்கத் தானே!

(பழுதிலா - ஒரு பழுதும் இல்லாத. ஒழுகல் ஆறு நீண்டு வருகிற பரம்பரை. சதுப்பேதிமார்கள் - சதுர்வேதிகள்; நாலு வேதங்களையும் அத்தியயனம் பண்ணியிருப்பவர்களே. தொழுமின் நீர் - நீங்கள் அவர்களைத் தொழுங்கள். கொடுமின் - கொடுங்கள். கொள்மின் - கொள்ளுங்கள். என்று - என்று இப்படிச் சொல்லி. நின்னோடும் ஒக்க - உனக்குச் சமமாக. வழிபட - அவர்களை வழிபடுமாறு. அருளினாய் - உரைத்தருளினாய்.)

வைதிகர்கள் தங்கள் வம்ச பரம்பரையின் பெருமையை யும் நீளத்தையும் சுட்டிக்காட்டுவதற்காக ரிஷிகளின்

Koviloor Digital Library

கோத்திரங்களைச் சொல்லிக் கொள்கிறார்களல்லவா? 'உங்கள் வம்சப் பிரவாகமானது பிரமதேவனிடம் தொடங்கி உங்கள் அளவும் ஒரு பழுதும் இல்லாமல் வந்திருந்தாலும் சரி. நீங்கள் நம்முடைய அடியார்களைத் தொழ வேண்டியதுதான்' என்று பகவான் சொல்லுகிறானாம்.

உற்பத்தியிலும் ஆசாரம் முதலியவற்றிலும் பழுதின்றி யிருக்கும் சதுர்வேதிகளை நோக்கி, 'எம் அடியார்கள் எக்குலத்தவரேனும் அவர்களை நீங்கள் தொழுங்கள்' என்று எம்பெருமான் கட்டளையிடுகிறானாம். தொழுதாலும் போதாது; 'கொடுமின், கொள்மின்' என்றும் உபதேசிக் கிறானாம்.

'எதற்காகத் தொழுவது?' என்றால், 'அவர்களைக் கௌரவிப்பதற்காக அல்ல; சாதிச் செருக்கையும் கல்விச் செருக்கையும் போக்கிக் கொள்வதற்காக நீங்கள் அவர்கள் காலிலே விழுங்கோள்' என்பது வியாக்கியானம்.

இனி எதைக் கொடுப்பது, எதைக் கொள்வது? 'அவர்கள் உங்களிடம் ஞானத்தை அபேட்சித்தால், நீங்கள் ஆதரித்துச் சொல்லிக்கொடுக்க வேணும்' என்று சொல்லிவிட்டு, 'அவர்கள் ஞானத்தில் சிறந்தவர்களாக இருந்தால் நீங்கள் பெற்றுக் கொள்ள வேணும்' என்று பகவானே கட்டளை யிடுகிறானாம்.

பக்தர்கள் எல்லாரும் ஆத்மபந்துக்கள். ஜாதிசம்பந்தம் நீர்மேல் எழுத்து; ஆத்ம சம்பந்தமே உண்மையான, நித்தியமான தொடர்பு என்று பொருள்பட உரையாசிரியர் கூறுவர். எனவே பரஸ்பர ஞானத்தைப் பரிமாறிக்கொள்வது பாகவதர்களுக்கிடையே விசேஷமான தொடர்பு எனக் கருதப்படுகிறது.

எப்படியும் பாகவதர்களைச் சாதி கருதாது ஆராதிக்க வேண்டும். இந்த ஆராதனைக்கு, இந்தத் தொழுகைக்கு

Koviloor Digital Library

அளவுதான் என்ன? 'நின்னோடும் ஒக்க வழிபட அருளினாய்' என்பது இறைவனை நோக்கிச் சொல்லும் ஆழ்வார் வாக்கு.

இறைவனுக்கு மேல் பூஜிக்கத் தகுந்தவர் இல்லை. எனவே, 'நம் அடியார்களை நமக்குச் சமமாகவே ஆராதித்து நல்வழிப் படுங்கள்' என்று இறைவன் உபதேசிக்கிறானாம்.

உபதேசம் வேறு, அநுஷ்டானம் வேறு என்ற நிலையை நாம் சாதாரணமாகக் காண்கிறோம். 'நான் சொல்லுகிறபடி செய்; நான் செய்கிறபடி செய்யாதே!' என்பதுபோல் உபதேசம் செய்யும் குருமார்களும் உண்டு.

ஸ்ரீரங்கநாதனோ தன்னுடைய உபதேசம் 'உபதேச மாத்திரமேயாய்'ப் போகாமல் இருக்க வேணும் என்ற உறுதியுடன் அநுஷ்டானத்திலும் தன் கொள்கையை வெளியிட்டிருக்கிறானாம். 'கோயிலிலே வந்து லோகஸாரங்க மகா முனிகள் தலையிலே திருப்பாணாழ்வாரை வைத்து' இந்த உபதேசத்திற்கு உயிர் கொடுத்திருக்கிறான் என்பது வியாக்கியானம்.

'மதிள்திரு வரங்கத்தானே!' என்று முடிகிறது இச்செய்யுள். கோயிலுக்கு மதில்போல் இக்கொள்கையும் பக்தி மார்க்கத்திற்கு ஓர் அரண் என்பது குறிப்பு. எனினும் இப்பாட்டிலே கொள்கையின் ஒரு பாதியைத்தான் பார்க்கிறோம்.

மற்றப் பகுதி இதைக்காட்டிலும் முக்கியமானது. அடியார்களை வழிபடுவது அவசியம் என்று கூறியபின் அவர்களைப் பழிப்பது பேராபத்து என்பதையும் வற்புறுத்துகிறார்.

முந்திய பாட்டு ஜாதி அந்தணர்களுக்கு உபதேசம் என்றால் இந்தப் பாட்டு, வைதிகர்களாகவும் பக்தர்களாகவும் உள்ள அந்தணர்களுக்கு ஓர் எச்சரிக்கை:

Koviloor Digital Library

அமரஓர் அங்கம் ஆறும்
வேதம்ஓர் நான்கும் ஓதித்
தமர்களில் தலைவ ராய
சாதிஅந் தணர்க ளேலும்,
நுமர்களைப் பழிப்ப ராகில்,
நொடிப்பதோர் அளவில் ஆங்கே
அவர்கள்தாம் புலையர் போலும்
அரங்கமா நகரு ளானே!

(அமர - நெஞ்சில் அமர்ந்து பதிந்திருக்கும்படி. ஓர் அங்கம் ஆறும் - ஒப்பற்ற ஆறு வேத அங்கங்களையும். தமர்களில் - பாகவதர்களுக்குள்ளே. நுமர்களை - உம்முடைய அடியார்களை. நொடிப்பது ஓர் அளவில் - அந்த ஒரு நிமிஷ காலத்துக்குள்ளே. ஆங்கே - அப்போதே, அந்த இடத்திலேயே.)

வேத வேதாங்க வேதாந்தங்களெல்லாம் தெரிந்து, பரம பக்தனாயிருப்பவனுக்கும் அடியார்களைப் பழிப்பது அபாயத்தையே விளைக்கும் என்கிறார். பழிப்பு என்றால் தூஷிப்பதுகூட அல்ல; சாதியைக் குறிப்பிடுவதே பழிப்பாகும் என்பர்.

இதற்குத் தண்டனை மறுமையில் எமலோகத்திலோ வேறு எங்கேயோ என்பதில்லையாம். தூஷித்த அந்தக் கணத்திலேயே அந்த இடத்திலேயே தண்டனை கிடைத்து விடுகிறதாம்.

தண்டனைதான் என்ன? பிறரைப் புலையர் என்றவர் தாமே புலையராகிறார்! 'அத்தேகத்தோடே சண்டாளர் ஆவர்கள்' என்பது வியாக்கியானம். 'திரிசங்குவுக்கு... கழுத்தில் வீர சங்கிலிதானே (தோல்) வார் ஆனாற்போல் இவனுக்கும் மார்பில் இட்ட பூணூல் தானே வாராய் விடும்' என்று பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியான மிடுகிறார்.

Koviloor Digital Library

பாகவத அபசாரம் மகாபாபம் என்பதும், பாகவதர் களின் சாதியைத் துலக்குவதே அபசாரம் என்பதும் இந்தப் பாட்டிலே வற்புறுத்தப்படுகின்றன. 'மிலேச்சனும் பக்தனா னால் சதுர்வேதிகள் அநுவர்த்திக்க அறிவுகொடுத்துக் குல தெய்வத்தோடு ஒக்கப் பூஜைகொண்டு...' என்று 'ஆசார்ய ஹ்ருதயம்' என்ற நூலில் வருவது கவனிக்கத்தக்கது.

அடியார்கள் அமுது செய்து மிகுந்த உணவைத் தருவராகில் அதைப் பெற்றவர்களும் புனிதராவர் என்று இந்த ஆழ்வார் வேறொரு பாட்டில் கூறியுள்ளார்:

போனகம் செய்த சேடம்
தருவரேல் புனித மன்றே!

(போனகம் - போஜனம். சேடம் - உண்டபின் மிகுந்திருக்கும் உணவு.)

இந்த வாக்கியத்தை, உரையாசிரியர், 'கொடுமின், கொள்மின்' என்பதற்கு உரை கூறும்போது, ஞாபகப்படுத்திக் கொள்கிறார். இது பிரசாத வைபவம் (உணவு கொடுப்பதையும் கொள்வதையும்) சொல்வதால். 'கொடுமின், கொள்மின்' என்பதைத் 'தீர்த்த வைபவம்' சொல்வதாகவும் பொருள் கொள்ளலாம்.

'தீர்த்த வைபவம்' என்றால் தீர்த்தத்தைக் கொடுப்பதும் கொள்வதும். தீர்த்தம் என்றால் ஸ்ரீபாத தீர்த்தம்.

'உயர்' குலத்துப் பிறந்தவர்களாயிருந்தபோதிலும் பக்தி செய்யாதவரை இறைவன் உகப்பதில்லையாம். பக்தர்கள் எக்குலத்தவராயினும் அவரையே விரும்புகிறானாம்:

அடிமையில் குடிமை இல்லா
அயல்சதுப் பேதி மாரில்,
குடிமையில் கடமைப் பட்ட
குக்கரில் பிறப்ப ரேனும்,

Koviloor Digital Library

முடியினில் துளபம் வைத்தாய்!
மொய்கழற்(கு) அன்பு செய்யும்
அடியரை உகத்தி போலும்,
அரங்கமா நகரு ளானே!

(அடிமையில் - கைங்கரியம் செய்வதால். குடிமை இல்லா - தொண்டர் குலப்பிறப்பை அடையாத. அயல் - கைங்கரியத்திற்கு அயலான. சதுப்பேதிமாரில் - சதுர்வேதி களான பிராம்மணர்களைக் காட்டிலும்; குடிமையில் கடமைப்பட்ட - குடிப்பிறப்பினால் இழிவடைந்த. குக்கரில் - பரம சண்டாளர் வகுப்பில். முடியினில் துளபம் வைத்தாய் - திருமுடியிலே துழாய் மாலையை அணிந்திருப்பவனே. மொய்கழற்கு - நெருங்கிய திருவடிகளிலே. அடியரை உகத்தி - அடியார்களையே நீ விரும்புகின்றாய்.)

அடிமையில் குடிமை என்பது தொண்டினால் பிறக்கின்ற தொண்டக்குலத்தைக் குறிப்பிடுவதாகும். குடிப்பிறப்பில் இழிந்தவர்களும் 'அடிமையில் குடிமை' பெற்று, இறைவனது உகப்பாகிய பேறும் பெற்று வாழலாம்.

'முடியினில் துளபம் வைத்தாய்!' என்பதில் ஒரு குறிப்புப் பொருளும் காண்கிறார் உரையாசிரியர். துழாய் மாலையைத் திருமுடியில் சூட்டிக்கொண்டிருப்பதுபோல், எக்குலத்து அடியவரையும் இறைவன் கௌரவித்து மகிழ்கிறானாம்.

இறைவன் சர்வேச்வரன் என்பதற்கும், முடிமாலை யாகிய துளசிமாலை ஓர் அறிகுறி என்பர். உண்மையில் ஸர்வேச்வரன் என்ற நிலை உறுதிப்படுவது அவன் எக்குலத்து அடியவர்களையும் முடியில் துளபம்போல் வைத்துக் கொள்வதால்தான் என்று பொருள்படச் சொல்லுகிறது வியாக்கியானம்.

இறைவனைச் சிந்தையுள் திகழவைத்துப் பணிபுரிவதே முக்கியமானது. உயர்குலத்தில் பிறப்பதைக் காட்டிலும்

Koviloor Digital Library

தொண்டக்குலத்தில் பிறப்பதே ஒருவனுக்குச் சிறப்புடைய தாகும்.

அங்கும் இங்கும் பரபரப்பாகத் திரிந்து 'பொருள், போகம், வேகம்' என்ற மும்மூர்த்திகளுக்கும் ஆளாவதைக் காட்டிலும் பரம்பொருளுக்கு ஆளாகி வாழ்வதே மேலானது. சரீர பந்துக்களை நம்புவதைக் காட்டிலும் இறைவனையே தந்தையும் தாயுமாகக் கருதி ஆத்ம பந்துக்களான பக்தர்களை நம்பி வாழ்வதே வாழ்வு.

'ஆவியே! அமுதே!' என்று பகவானைக் காதலித்து அந்தக் காதலிலும் பக்தர்களின் நட்புக் காதலிலும் தொண்டின் சிரமத்தை மறந்து, 'தொண்டு ஒன்றே வழி' என்பதை மறவாது வாழ்க்கை நடத்துவதே நம்பெரு வாழ்வு.

இப்படியெல்லாம் போதிக்கிறவர், 'தொண்டக்குலம் ஒன்றே' என்பதைக் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் வற்புறுத்துகிறார். இதற்கு அடிப்படைத் தத்துவமாக, 'திருவரங்கத்தில் கோயில் கொண்டிருப்பவன், நினைப்பவர் உள்ளங்களையெல்லாம் கோயிலாகக் கொண்டிருக்கிறான்' என்கிறார்.

நினைப்பவர் நினைவுகளையெல்லாம் உடனிருந்து அறிந்து கொண்டேயிருக்கிறான் இறைவன் என்ற உண்மையை நன்குணர்ந்து நாம் ஒழுகத் தொடங்கிவிட்டால், பொய் வேஷங்களுக்கும் போலி ஆசாரங்களுக்கும் இடம் எங்கே? குலஉயர்வு, குலத்தாழ்ச்சி கற்பிப்பதற்குத்தான் இடம் ஏது?

Koviloor Digital Library

13. அநுபூதிச் செல்வம்
(இவர் துயிலுணர்ந்து எழுந்தது)

ஒருவன் பாலைவனத்திற்குப் போய்விட்டான். ஏதோ கொஞ்சம் மணலாயிருக்கிறது என்று எண்ணிக்கொண்டே நடந்தான்.

நடக்க நடக்க மணலாகத்தான் இருந்தது. 'இப்படியே கொஞ்ச தூரம் இருக்கும்' என்று கருதிப் போய்க் கொண்டேயிருந்தான். 'என்ன மோசம் போனோமே!' என்று திரும்பிப்பார்த்தான். நாலு திசையும் பார்த்தான்.

வடக்கே திரும்பினான்; மணலைத்தான் பார்த்தான். கிழக்கே பார்த்தான்; அங்கும் மணல்தான். தெற்கே திரும்பினான்; மணல்தான். மேற்கு நோக்கினான்; ஒரே மணல்தான்.

இந்தப் பாலைவனத்தை, 'மணல், மணல், மணல், மணல்' என்று ஒரே வார்த்தையை நாலுதரம் சொல்லி வருணித்து விடலாமென்று தோன்றியது.

இப்படியே ஜீவயாத்திரையில் நடைபெறக் காண் கிறோம். முதலில் 'சிறு பொய்தானே! என்று நினைக்கிறோம். 'அரிச்சந்திரரா நாம்?' என்று எண்ணுகிறோம். 'போகப் போகச் சரியாகிவிடும்' என்று நம்மை நாமே ஏமாற்றிக் கொள்கிறோம்.

'நாலு புறமும் பொய் சூழ்ந்துகொண்டதே!' என்று அஞ்சுகிறோம். 'எங்கே பார்த்தாலும் பொய் வந்து நெருக்குகிறதே!' என்று நடுங்குகிறோம்.

Koviloor Digital Library

'மணல், மணல், மணல், மணல்' என்று பாலை வனத்தை வருணித்ததுபோல், இந்த வாழ்க்கைப் பாலையையும் 'பொய், பொய், பொய், பொய்!' என்று வருணிக்கலாமோ எனத் தோன்றுகிறது. இத்தகைய ஒரு நிலையில் ஒருசமயம் தாமே தம்மைக் கண்டுகொண்டதாகத் தொண்டரடிப்பொடியாழ்வார் பாடுகிறார்:

பொய்யெல்லாம் பொதிந்து கொண்ட
போழ்க்கனேன் வந்து நின்றேன்;
ஐயனே! அரங்க னே! உன்
அருள்என்னும் ஆசைதன்னால்,
பொய்யனேன் வந்து நின்றேன்;
பொய்யனேன், பொய்ய னேனே!

(போழ்க்கனேன் - முறைகேடனாகிய நான்; வழி தப்பிய நான்.)

இறைவனுடைய திருமுன்பு - அதாவது ஈசுவரனுடைய சந்நிதியிலே என்றும் இருந்து வாழும் தொண்டர்களை இவர் குறிப்பிடுகிறாரல்லவா? அத்தகைய தொண்டராவதற்குமுன், இவர் தமது வாழ்க்கையைச் சோதித்துப் பார்த்துக்கொண்டார்.

நாற்புறமும் பொய்ம்மையிருள் பரவியிருக்கக் கண்டதும், 'வழி தப்பி எப்படியோ பாலைவனத்திற்குள் வந்து சேர்ந்துவிட்டோமே!' என்று அஞ்சி, இறைவனது சந்நிதியிலே போய்நின்றுகொண்டார். 'ஒளி உளார்' என்று தாம் வருணிக்கும் பெருமானை நோக்கியதும், அந்தத் திசையில் பொய்ம்மை இருள்மறைந்துவிட்டது.

'ஐயனே! அரங்கனே!' என்று சொல்லிக்கொண்டு அந்த அருளாசையால் வந்து நின்றவர், இப்போது மூன்று திசைகளில் மட்டும் பொய்யிருள் கண்டதுபோல்,

பொய்யனேன் வந்து நின்றேன்;
பொய்யனேன், பொய்ய னேனே!

என்று சொல்லுகிறார்.

Koviloor Digital Library

இறைவனுடைய பார்வையிலே இவர் செய்து கொள்ளும் தற்சோதனை இது. கடுமையான தற்சோதனை. மன மெய்மொழிகளையும் ஊடுருவிப் பார்க்கும் மெய்யொளி யாகிய சோதனை ஒளியின் முன் போய் நின்றுகொண்டிருக் கிறாரல்லவா?

இறைவன் மெய்யர்க்கு மெய்யன்; பொய்யர்க்குப் பொய்யன் என்கிறார்:

மெய்யர்க்கே மெய்ய னாகும்;
விதியிலா என்னைப் போலப்
பொய்யர்க்கே பொய்ய னாகும்,
புட்கொடி யுடைய கோமான்.

(விதியிலா - இறைவனை அணுகி நிற்கும் விதியை நெடுங்காலம் பெறாமலிருந்த. புட்கொடியுடைய கோமான் - கருடனைக் கொடியாகவுடைய தலைவனாகிய திருமால்.)

பொய்யிருளில் திரிந்துகொண்டிருந்த இவருக்குக் கடைசியாக மெய்யொளிக்கு வழி தெரிந்ததும் அவ்வழியே வந்து சேர்ந்தவர்,

மார்க்கம்ஒன்(று) அறிய மாட்டா
மனிசரில் துரிச னாய
மூர்க்கனேன் வந்து நின்றேன்
மூர்க்கனேன், மூர்க்க னேனே!

(துரிசன் - குற்ற முள்ளவன்)

என்று கதறுகிறார்.

பிடித்தது விடாத முதலைபோன்ற மூடனை 'மூர்க்கன்' என்று சாதாரணமாய்க் குறிப்பிடுவதுண்டு. அறியாமை என்ற பொய்யிருளை விட்டு வெளிப்பட்டு வந்து மெய்யனைக் கண்டுகொண்டதும்,

Koviloor Digital Library

சேவியேன் உன்னை அல்லால்
சிக்கெனச் செங்கண் மாலே!

(சேவியேன் - சேவிக்கமாட்டேன். சிக்கென - எப்போதும் விடாத உறுதியுடன். செங்கண் மாலே - சிவந்த கண்களையுடைய திருமாலே.)

என்ற அந்த ஆசை சிக்கெனப் பற்றிக்கொண்டதாம்.

ஆம்; இப்போதும் விடாத பிடிதான்; ஆனால் இது ஞானப்பிடி, மெய்மைப்பிடி, வாழ்வுப்பிடி, கைங்கரியப்பிடி. தொண்டு பூண்டு இறைவனுடன் ஏற்படுத்திக்கொண்ட இத்தொடர்பு, இவருக்கு உண்ணும் உணவுபோல் வாழ்க்கை யின் இன்றியமையாத அம்சமாகிவிட்டது.

இந்த நிலையில் இவர்,

தண்துழாய் மாலை மார்பன்
தமர்களாய்ப் பாடி ஆடித்
தொண்டுபூண்(டு) அமுதம் உண்ணாத்
தொழும்பர்சோ(று) உகக்கு மாறே!

என்று பாடியதாகக் கருதலாம்.

இறைவனிடமிருந்து ஒதுங்கி விலகும் வாழ்க்கையால் ஒரு பயனும் இல்லை; அப்படிப்பட்ட வாழ்க்கையில் மன அமைதியோ மகிழ்ச்சியோ ஏற்படாது என்பது காந்தியடிகளின் வாழ்க்கை அநுபவம். இதே அநுபவ ஆசைதானே,

பணியினால் மனம தொன்றிப்
பவளவாய் அரங்க னார்க்குத்
துணிவினால் வாழ மாட்டாத்
தொல்லைநெஞ் சே!நீ சொல்லாய்

என்று பாடியிருக்கக்கூடும்.

'இந்த நம்பிக்கை இல்லாத மனிதன் சமுத்திரத்திலிருந்து சிதறிய தண்ணீர்த் துளிபோல் அழிந்துபோவான். கடலில்

Koviloor Digital Library

உள்ள நீர்த்துளிக்கோ கடலின் பெருமையில் பங்கு உண்டு' என்பது காந்தியடிகளின் கருத்து. தொண்டரடிப்பொடி யாழ்வார், ஸ்ரீரங்கராஜா என்ற சௌந்தரிய மகாசமுத்திரத்தின் ஒரு துளியாகவும், ஸ்ரீரங்கேச கைங்கரியம் புரிந்த தொண்டர்களின் பாததூளாகவும் தம்மைக் கருதி வாழ்ந்தார். அரங்கனையும் அடியார்களையும் பிரியாது வாழ்ந்து பெரும்பேறு பெற்றார்.

தொண்டரடிப்பொடியாழ்வாரின் 'பவளவாய் அரங்கனார்' பார்க்கும் இடம் எங்கும் பரவிக்கிடக்கும் அழகுக்கடல், ஒளிக்கடல், உயிர்க்கடல், சக்திப் பெருங்கடல். அரங்கன் என்ற சக்தியை, சௌந்தரியத்தை இவர் தமது பக்தியிலும் அநுபவித்தார்; பணிகளிலும் அநுபவித் தார்; பேச்சிலும் மூச்சிலும் அநுபவித்தார் என்றுகூடச் சொல்லலாம்.

'கடவுள் மீதுள்ள என் நம்பிக்கையைத் தகர்த்துவிட்டால் அந்தக் கணமே நான் செத்தவன்தான்!' என்றார் காந்தியடிகள். இதுவே நமது ஆழ்வாரின் நிலையும் என்பதற்கு,

ஆவியே! அமுதே! என்தன்
ஆருயிர் அனைய எந்தாய்!

என்று இவர் அரங்கனைக் கூவியழைப்பதே சான்றாகும்.

தமக்கு இவ்வளவு மெய்யனாக இருந்த இறைவனை அடைவதற்குத் தொண்டு ஒன்றே வழியாகக் கண்டிருந்த தொண்டரடிப்பொடியாழ்வார், அச்சத்தை அறியாது, அன்பு மயமாக, இன்பமயமாக அறவாழ்க்கை வாழ்ந்தார், நீதி வாழ்க்கை வாழ்ந்தார் என்பது திண்ணம்.

அற வாழ்க்கையிலும் நீதிநெறியிலும் இவருக்கு உள்ள பெரு விருப்பத்தைப் பின்வரும் 'திருமாலை'ப் பாட்டில் காணலாம்:

Koviloor Digital Library

மறம்சுவர் மதிள் எடுத்து,
மறுமைக்கே வெறுமை பூண்டு,
புறம்சுவர் ஓட்டை மாடம்
புரளும்போ(து) அறிய மாட்டீர்;
அறம்சுவ ராகி நின்ற
அரங்கனார்க்(கு) ஆட்செய் யாதே,
புறம்சுவர் கோலம் செய்து
புள்கவ்வக் கிடக்கின் றீரே!

(மறம் சுவர் - அறத்திற்கு மாறான கொடுமையாகிய சுவரை. மதிள் எடுத்து - மதிளாக எடுத்துக்கொண்டு வெறுமை - ஏழைமை. புறம் சுவர் ஓட்டை மாடம் - வெளிச்சுவராய் நிலையாததான சரீரம். புரளும்போது - மரண அவஸ்தையுடன் புரளும்போது. அறம் சுவராகி நின்ற - அறமாகிய மதிள் வடிவெடுத்தது போல நிலைபெற்றிருக்கிற. ஆள் செய்யாதே - பணிகளைச் செய்யாமல். புறம் சுவர் கோலம் செய்து - வெளிச் சுவரான உடம்பை அலங்கரித்துக்கொண்டு. புள் கவ்வ - பறவைகள் கவ்விக்கொள்ளும்படி.)

'அறம் சுவராகி நின்ற அரங்கனார்' - அறநெறிக்கும் நீதிநெறிக்கும் அரணாகியவர்க்கு. 'எனக்குக் கடவுள் சத்தியமும் அன்பும் ஆவார். அறநெறியும் நீதிநெறியும் ஆவார். அச்சமின்மையின் உருவமும் அவரே' என்று காந்தியடிகள் கூறுவதையெல்லாம் மேலே சொன்ன பாட்டிலே கண்டுகொள்ளலாம்.

'நேரடியாகத் தமது திருமுன்பு இருக்கவேண்டுமென்று விரும்புவோருக்கு அவ்வாறே கடவுள் காட்சி வழங்குவார். அவருடைய ஸ்பரிசம் படவேண்டுமென்று எண்ணுவோரிடம் அவர் அப்படியே வியாபித்திருப்பார்' என்ற மகாத்மாவின் மணிவாக்கை நினைவூட்டும் அனுபவமும் தொண்டரடிப் பொடியாழ்வாருக்கு உண்டு.

Koviloor Digital Library

கனியிருந் தனைய செவ்வாய்க்
கண்ணனைக் கண்ட கண்கள்
பனியரும்(பு) உதிரு மாலோ
என்செய்கேன் பாவி யேனே!

என்ற வாக்கிலே அழகிய மணவாளப் பெருமானை விக்கிரகத்தில் கண்டதுடன் நேரடியாகவும் தம் கண்முன்பு காணவிரும்பி அப்படியே கண்டுகொண்டார் என்பதற்குச் சான்று கிடைக்கிறது எனலாம்.

அழகிய மணவாளனின் ஸ்பரிசம் படவேண்டும்; 'நம்முடைய பையன்' என்று அவன் தம்மை அழைத்து அணைத்துக் கொண்டு தட்டிக் கொடுக்க வேண்டும் என்ற இவரது ஆசையை இந்தப் பாட்டில் தெளிவாகக் காணலாமென்று தோன்றுகிறது:

தெளிவிலாக் கலங்கல் நீர்சூழ்
திருவரங் கத்துள் ஓங்கும்
ஒளியுளார் தாமே யன்றே
தந்தையும் தாயு மாவார்;
எளியதோர் அருளும் அன்றோ?
என்திறத்(து) எம்பி ரானார்
'அளியன்நம் பையல்' என்னார்;
அம்மவ, கொடிய வாறே!

தமது இஷ்ட தெய்வத்தைக் 'கொடியவர்' என்றுகூட ஆழ்வார் குறிப்பிடுவதைப் பாருங்கள். கடவுளைக் குறித்துக் காந்தியடிகளும், 'அவர் உலகம் இதுவரை கண்டிராத பெரிய ஜனநாயகவாதி... இதுவரை நாம் அறியாத பெருங் கொடுங்கோலரும் அவரே!' என்று கூறியுள்ளார்.

காரணம்: 'இரங்கி மன்னிப்பதில் தாயை ஒத்த தயாபரராக இருந்தும் கடவுள், உதடுவரை நாம் கொண்டு போகும் கிண்ணத்தைப் பலமுறை தட்டிவிடுகிறார்!' என்பதைச் சுட்டிக் காட்டுகிறார் காந்தியடிகள்.

Koviloor Digital Library

தமது எல்லையற்ற அன்பினால் பரம நாஸ்திகர்கள் வாழவும் அநுமதிக்கிற கடவுள் அடியவர்களின் இதயங்களைச் சோதிப்பதற்காகப் பயங்கரமான சோதனைகளையும் ஏற்படுத்துகிறார் என்பதையும் காந்தியடிகள் சுட்டிக் காட்டுகிறார். தொண்டரடிப்பொடியாழ்வாரையும் பகவான் கடுமையான சோதனைக்கு உட்படுத்தியிருக்கவேண்டும். இதற்குச் சான்றுகள் பல கிடைக்கின்றன இவரது பாடல்களிலே.

எந்த நிலையில் இறைவன் தம்மை வைத்தபோதிலும் அதை அவனுடைய லீலையென்றும், ஆச்சரிய சக்தியாகிய மாயையென்றும் கருதுவது தொண்டர்கடன். 'மாயனார்' என்று இறைவனைக் குறிப்பிடும் தொண்டரடிப் பொடியாழ்வாரும் இதே கருத்தை வெளியிடுகிறார்.

'இறைவனுடைய புகழை என்றென்றும் பாடிக் கொண்டிருக்கவேண்டும். அவனுடைய சித்தப்படி நடந்து கொண்டிருக்க வேண்டும். 'அவனுடைய வீணாகானத்திற்கு ஏற்றபடி நாம் ஆடுவோம்; எல்லாம் சரியாக முடியும்' என்பது காந்தி காட்டும் பாதை. இதே பாதையில் சென்ற ஆழ்வாரும் நமக்கு இதே பாதையைத்தான் காட்டுகிறார்.

இப்படி நடைபெறும் வாழ்க்கை, 'சத்தியமே கடவுள்' என்ற முடிவிற்கு வந்துவிடுகிறது என்பதில் ஐயமில்லை. எனினும், 'ஐயப்பாடு அறுத்துத் தோன்றும் அழகன், வழிகாட்ட வேண்டுமென்றால், சத்தியம் என்னும் சமுத்திரத்தில் நீந்தித் திளைக்க வேண்டுமென்றால் முதலில் உங்களை நீங்கள் ஒரு பூஜ்யமாகக் கருதிக்கொள்ள வேண்டும்' என்பது மகாத்மா காந்தியின் புத்திமதி.

தொண்டரடிப்பொடி யாழ்வாரும், இறைவன், 'வாழும் சோம்ப' ராகித் தன்னுடைய சந்நிதியில் ஒடுங்கிக் கிடக்கும் அடியவரை உகப்பதாகக் கூறுகிறாரல்லவா?

Koviloor Digital Library

இப்படித் தங்களைப் பூஜ்யமாக்கிக்கொண்டு தொண்டே சிறக்கவேண்டுமென்று 'வாழும் சோம்பர்' களுக்கு, அவர்கள் புரியும் தொண்டே பிரார்த்தனையாகிவிடும். அவர்கள் செய்யும் பிரார்த்தனைகளும் கூட்டுப் பிரார்த்தனைகளும், 'ஆடிப்பாடி 'அரங்க, ஓ!' என்று அழைத்து அவர்கள் நடத்தும் பஜனைகளும் எல்லாம் தொண்டுகளாகவே கருதத்தக்கன.

'பிரார்த்தனை என்பது ஆத்மாவின் வேட்கை' என்று காந்தியடிகள் கூறுவது மிகவும் பொருத்தமானது. இது தன்னல வேட்கையாக இருக்க முடியாது. 'ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்' என்ற பழமொழியின் உட்பொருள் தொண்டர் வாழ்க்கைக்குப் பெரிதும் பொருந்துவதே.

எனவே தொண்டரடிப்பொடி யாழ்வார்,

அவன(து)ஊர் அரங்கம் என்னா(து)
அயர்த்துவீழ்ந்(து) அளிய மாந்தர்
கவலையுள் படுகின் றார்என்(று)
அதனுக்கே கவல்கின் றேனே.

(அயர்த்து வீழ்ந்து - மறந்து படுகுழியில் விழுந்து. அளியமாந்தர் - அருமந்த மனிதர்கள்.)

என்று கூறக் காண்கிறோம்.

பிறர்நலம் குறித்த இந்தக் கவலை நீர்மேல் கோடு; தன்னலக் கவலையோ நெஞ்சிலே சுமை. இந்த ஆழ்வார் தம்மைக் குறித்துச் செய்துகொண்ட பிரார்த்தனைகளெல்லாம் கைங்கரியப் பிரார்த்தனைகளே. பிறருக்குத் தொண்டுபுரியத் தம்மைப் பக்குவப்படுத்திக்கொள்வதற்காக, அன்பர் பணிக்குத் தம்மை ஆளாக்கிக் கொள்வதற்காகச் செய்து கொண்ட பிரார்த்தனைகளே.

'இறைவன் அடியவர்களுக்கு இரங்கும் பித்தன்; அவன் அடிகளில் அடைக்கலம் தேடிக்கொள்ளுங்கள்' என்கிறார்.

Koviloor Digital Library

'பாடி ஆடித் தொண்டு பூண்டு' அமுதம் உண்ணச் சொல்லு கிறார்.

'அறம் சுவராகி நின்ற' இறைவனை அரணாகக் கொண்டு அறப்பெருந் தொண்டுகளில் ஈடுபடுமாறு உபதேசிக் கிறார். கண்ணன் அடியினை பணிந்து உய்ந்துபோகச் சொல்லுகிறார்.

மூதேவியின் செல்வங்களான உறக்கம், சோம்பல், மூடத்தனம் முதலியவற்றை உதறித் தள்ளச் சொல்லுகிறார். கவலையைத் தள்ளி நரகத்தைச் சொர்க்கமாக மாற்றிவிடுங்கள் என்கிறார்.

தொண்டக் குலத்தில் வேற்றுமை காணாது ஒருமை கண்டு, சாதி, செல்வம், கல்வி ஆகிய வீண் பெருமைகளை ஒழித்து முன்னேறச் சொல்லுகிறார். தொண்டக்குலமே ராஜகுலம், தொண்டு நெறியே ராஜவைத்தியம் என்கிறார்.

எல்லாவற்றுக்கும் மேலாக, தொண்டர்களுக்கு மரணமும் நோய்களும் பொருளற்றவை என்பதை உணர்த்தி, அமரநிலை எய்தப்பெற்ற தாம் மரணத்தின்மீது கொண்ட அந்த வெற்றியைப் பிறரோடும் பங்கிட்டுக் கொள்கிறார்.

இப்படியெல்லாம் உண்மையாகவே பிறருக்கு உபகரிக்க வேண்டுமென்று உபதேச ரத்தினங்களை வாரி வழங்குகிறவர் எத்தகைய அநுபூதிச் செல்வத்தை உடைய வராக இருக்க வேண்டும்! திருமாலையின் நாற்பத்தைந்து பாடல்களுக்குள்ளே நாம் காணும் செல்வம், ஏதோ ஒரு சிறிய அறையில் எல்லையற்ற செல்வத்தைக் காண்பதையே நினைவூட்டுகிறது.

இந்தப் பிரபந்தத்தின் முகப்பிலேயே இவர் கலி யுகத்தைக் கடக்கப் பாய்ந்து கிருதயுக புருஷராகி 'நமன் தமர் தலைகள் மீது' அடியிட்டுத் துவைக்கும் வெற்றிப் பெரு மிதத்தையும், தன்னம்பிக்கையின் அந்த விசுவரூபத்தையும்,

Koviloor Digital Library

அதே சமயம், 'என்னால் ஒன்றும் இல்லை; எல்லாம் முதல்வனின் திருநாம மகிமைதான்' என்று ஒப்புக்கொள்ளும் பெரும்பணிவையும் காண்கிறோம். இது விசேஷமான பக்தியநுபவங்களில் ஒன்று.

அச்சம் அறியாத உள்ளத்திலே திருநாமத்தின் சுவை கண்டு, 'இச்சுவை போதும்; முக்திச் சுவையும் வேண்டேன்' என்று இறுமாந்து பேசுவதும் ஒரு சிறப்பான அநுபூதி ரத்தினந்தான்.

தொண்டிலே அமுதச் சுவை கண்டு, 'இவர் செய்வதே அறம்; பேசுவதே நீதி' என்று உலகம் வியக்க 'வாழும் சோம்ப' ராகித் தொண்டுநெறிக்கு ஒரு வழிகாட்டியாகத் திகழ்ந்ததும் அநுபூதி விசேஷந்தான்.

நரகத்தையும் சுவர்க்கமாக்கும் மனநிலையுடன் பிறர் கவலையே தமது கவலையாகக் கொண்டு, மெய்யொளி கண்டு, அதைப் பிறருக்கும் காட்டி, தன் ஐயப்பாடுகளை அறுத்துப் பிறர் ஐயங்களையும் தெளிவிக்கும் நிலையில் நின்றதும் ஒரு விசேஷ அநுபூதிச் செல்வந்தான்.

'இப்படி வா, பையா!' என்று பெற்றோர்போல் குரல் கொடுத்து, புத்தியில் புகுந்து, அன்பைப் பெருக்கி, இறைவன் இவருக்குத் தன்னைக் காட்டிக் கொடுத்தது ஓர் அநுபவ சிகரமாகும்.

கண்ணால் பருகும் கரும்பாக இவர் தாம் கண்டு கொண்ட இறைவனை ஆனந்தக் கண்ணீரே திரையிட்டு மறைப்பதும்,

என்செய்வேன் பாவி யேனே

என்று இவர் கூறுவதும் எத்தகைய அநுபவ விசேஷம் பாருங்கள்.

அழகிய மணவாளனது திருவுருவந்தான் எவ்வளவு தெளிவாக இவர் அகக் கண்ணுக்கு இலக்காகிறது! பச்சை

Koviloor Digital Library

மாமலைபோல் மேனியும் பவளவாயும் தூய தாமரைக் கண்களும் மட்டுமா? - அடியும் முடியும் மார்பும் தோளும் மரகத உருவும் ஒளியும், உலகமெல்லாம் பரந்து சிதறிக் கிடக்கும் அழகுகள் அனைத்தும் திரண்டு குவிந்து ஒரு வடிவம் பெற்று வந்தது போலக் காண்கின்றனவாம்.

எந்தப் பூவை எப்போது பார்த்தாலும், 'அந்தப் பொன்னடிகளை அணிசெய்து பார்க்கவேணும்' என்று நினைக்கிறார். இந்த நினைப்பிலேயே இவர் கண்ட மலர்கள், அந்தப் பொன்னடிகளை அடைந்து தாமே அழகு பெறுகின்றன!

'நீநிலா மொழிகள் கொண்டுஉன் திருக்குணம் செப்பமாட்டேன்!' என்று இவர் சொல்லும்போதே சூதுவாது அறியாத தமிழ்ச் சொற்கள், 'நான் முன்னே, நான் முன்னே' என்று போட்டி போட்டுக்கொண்டு ஓடிவருகின்றனவாம், இவர் வாயிலாக அவன் குணம் சொல்லித் தாங்கள் பேறுபெறுவதற்காக.

நெஞ்சிலே அன்பு எப்படிப் பெருகி வந்தாலும்,

காதலால் நெஞ்சம் அன்பு
கலந்திலேன்!

என்றுதான் சொல்லத் தோன்றுகிறது. அப்படி ஒரு காதற் பசி! அன்புத் தாகம்!

இத்தகைய மனநிலையில் காவிரிபோல், கங்கைபோல், கடல்போல், பெருகிவருகிறது காதல் வெள்ளம். அந்த வெள்ளத்தை அடைத்து, அணைகட்டிப் பயிர்செய்து, பெருக்கிக்கொண்ட அளவற்ற, அநுபூதி - விவசாயத்தைத்தான் அதிசயமாகப் பார்க்கிறோம் இவர் பாடிய பாசுரங்களிலே.

'இறைவனை எப்படி நினைப்பது இத்தனை வாழ்க்கைக் கவலைகளுக்கிடையே! என்று சொல்லிக்கொண்டிருக்கும் உலகத்திலே இந்த ஆழ்வார்,

Koviloor Digital Library

எங்ஙனம் மறந்து வாழ்கேன்?
ஏழையேன், ஏழையேனே.

என்கிறார்.

சிலர் இந்த ஆழ்வாரிடம் வந்து, ''இறைவனை நினைத்துக் கொண்டாலும் எங்கள் உள்ளம் உருகவில்லையே; நீர் மனம் உருகக் கண்டுகொண்ட உபாயந்தான் என்ன?'' என்று கேட்டார்களாம். அதற்கு இவர்,

கடல்நிறக் கடவுள் எந்தை
அரவணைத் துயிலுமா கண்(டு)
உடல்எனக்(கு) உருகு மாலோ;
என்செய்கேன்? உலகத் தீரே!

என்று அவர்களுக்கு எதிர்க்கேள்வி ஒன்று போடுகிறார்.

''அறிதுயில் அமர்ந்த மூர்த்தியின் அழகைக்கண்டு எனக்கு உடலும் உருகுகிறதே! உங்களைப்போல் உருகாமல் கல்லாயிருப்பதற்கு உபாயம் ஒன்று எனக்குச் சொல்லிக் கொடுக்கமாட்டீர்களா?'' என்பது இவர் கேள்வி.

அவர்களால் இறைவனை நினைக்க முடியவில்லை! இவரால் மறக்க முடியவில்லை. அவர்களுக்கு உள்ளம் உருக வழி தெரியவில்லை; இவருக்கோ உடலும் உருகுகிற நிலையில் எப்படி உருகாமல் இருப்பது? என்பதே புரியவில்லையாம்.

ஆனால், அப்படி உருகாமல் இருக்க வழி என்ன என்று இவர் ஏன் கேட்கவேண்டும்?

'என்செய்கேன்? உலகத்தீரே!' என்று அவர்களை நோக்கி ஏதோ உதவி நாடுவதுபோல் கேட்பதற்குக் காரணம் என்ன?

'ஆற்றுப் பெருக்கிலே அருகு (அருகிலுள்ள) கரைகள் உடைந்தால், நோக்குகிறவர்கள் கைவிட்டுக் கடக்க நின்று கூப்பிடுமா போலே கூப்பிடுகிறார்' என்பது வியாக்கியானம்.

Koviloor Digital Library

காவிரியாற்றுப் பெருக்கைப்போல் வெள்ளமிடுகிறது இவரது பக்தியநுபவம். இவர் நிற்கும் கரை கரைந்து கொண்டிருக்கிறதாம். அந்த நிலையிலே கரையைப் பாதுகாக்க முயன்றவர்கள் வெள்ளத்திற்கு அப்பால் வசதியான மேட்டில் நின்று கொண்டிருப்பவர்களை நோக்கிக் கூப்பிடுவதுபோல், இந்த ஆழ்வாரும், தம் உடலும் உருகிக்கொண்டிருக்கும்போது லௌகிகர்களை நோக்கி, ''ஐயோ! நான் என்ன செய்வேன்!'' என்று கூப்பிடுகிறாராம்.

இதில் அநுபூதியின் பனிமூடிய ஓர் அதிசய வசீகர சிகரத்தைக் காண்கிறோம். பக்திவெள்ளத்திலே அப்படியே உருகிக் கரைந்துபோவது போன்ற உணர்ச்சி ஏற்படும்போது, பகுத்தறிவு இப்படிக் கேட்கக்கூடியதுதானே?

இத்தகைய ஆனந்த அதிசய உண்மைகள் வாசகர்களோடும் ரசிகர்களோடும் முகம் காட்டி உரையாட விரும்புகின்றன. கொஞ்சும் தமிழில் உரையாடப் பார்க்கின்றன என்று சொன்னாலும் மிகையாகாது.

Koviloor Digital Library

14. இறைவனைத் துயிலெழுப்பியது

(எல்லோரும் வாழும்படி)

அண்டம் முழுதும் ஒரு நியதிக்கு உட்பட்டு இயங்குகிறது என்பது விஞ்ஞான ஆராய்ச்சிகளாலும் உறுதிப்படுகிறது. நியதி என்றால் ஒழுங்குமுறை. எல்லா உயிர்கள் மீதும் ஆட்சி நடத்துகிற இந்த நியதியைக் 'கடவுள்' என்று ஆஸ்திகர்கள் சொல்லுகிறார்கள்.

இந்த ஒழுங்குமுறை குறித்து விஞ்ஞான ஆராய்ச்சியும் சரியாகத் தெரிந்துகொள்ளவில்லை. 'கற்றது கைம்மண்ணளவு; கல்லாதது உலகளவு' என்று சாதாரணமாய்ச் சொல்லுகிறோமே அது விஞ்ஞானிக்கும் பொருந்துவதுதான்.

அறியாமையாலோ அரைகுறை அறிவாலோ அண்டம் ஆளும் நியதி ஒன்றும் இல்லையென்று மறுப்பது, ஒரு நாட்டில் நடைபெறும் அரசாங்கத்தை ஒருவன் மறுப்பது போன்றதுதான்.

ராஜாதிராஜனாகிய கடவுளின் உண்மைக்குப் பல்வேறு நாடுகளிலும் தோன்றியுள்ள மகான்களும் முனிவர்களும் சான்று தருகின்றனர். சரித்திரத்திற்கு எட்டாத காலந்தொட்டுச் சங்கிலித் தொடர்போல் வந்துகொண்டிருக்கும் மகான்களில் தொண்டரடிப்பொடியாழ்வாரும் ஒருவர்.

உலகத்தை இறைவன் ஆடும் ஒரு கூத்தாகக் காட்டுகிறது சைவசமயம். இது பொருளற்ற பேயாட்டமல்ல; ஒழுங் கில்லாத வெறியாட்டமும் அல்ல. ராகதாளங்களுக்கு இசைய (ராகத்வேஷங்களுக்கு இசைய அல்ல) நடைபெறுகிறது இறைவன் ஆட்சியாகிய கூத்து. 'ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே?'

Koviloor Digital Library

அண்டமெலாம் பம்பரம்போல் ஆட்டிவைக்கும் அரசை நடராஜா என்கிறது சைவஉலகம். ஸ்ரீரங்கராஜா என்கிறது வைஷ்ணவ உலகம்.

உலகம், கோன் இல்லாத மந்தையல்ல என்று கண்டுகாட்டுகிறார்கள் தொண்டரடிப்பொடியாழ்வாரைப் போன்றவர்கள். இந்தக்கோனைக் 'கண்ணன்' என்பர். கண்ணன் எந்த ஆதியஞ்சோதியிலிருந்து அவதரித்தானோ அந்த மூலப்பொருளை 'அரவணைமேல் பேராயன்' என்பர்.

அந்தப் பேராயனுக்கும், அவதாரமூர்த்தியான கண்ணனுக்கும் அறிகுறியாகத்தான் அழகிய மணவாளன் என்ற ஸ்ரீரங்கராஜா பள்ளிகொண்டிருக்கிறானாம். பாடல்கள்பாடி ராஜாவைத் துயிலெழுப்புவதுபோல் அழகிய மண வாளனையும் பள்ளிஉணர்த்தப் பத்து அழகிய பாடல்களைத் தொண்டரடிப்பொடியாழ்வார் பாடியிருக்கிறார்.

இப்பாடல்களைத் திருப்பள்ளியெழுச்சிப் பாடல்கள் என்று சொல்லுவது உண்டு. சிவநேசச் செல்வரான மணிவாசகப் பெருமான் நடராஜாவுக்குத் திருப்பள்ளி யெழுச்சிப் பாடல்கள் பாடியிருக்கிறார்.

'புவனியும் விண்ணுலகும்... ... சோராமே ஆள்கின்ற செங்கோலுடைய திருவரங்கச் செல்வனார்' விஷயமாக இந்த ஆழ்வார் பாடியிருக்கும் திருப்பள்ளியெழுச்சிக்கு இரண்டு வியாக்கியானங்கள் உண்டு. ஒன்று பெரிய வாச்சான்பிள்ளை இயற்றியது; மற்றது நஞ்சீயர் இயற்றியது. இந்த இரண்டு வியாக்கியானங்களும் மணிப்பிரவாள நடையில் அமைந் திருக்கின்றன.

அறிதுயில் அமர்ந்தவனைத் துயில் எழுப்புவன இப்பாடல்கள். சாதாரண அரசர்களைப்போல் அறியாமைத் துயிலில் இறைவன் ஆழ்ந்து கிடக்கவில்லை. உலகத்தை ரட்சிப்பது குறித்தும், ஆட்படுத்திக்கொண்டு அருள் செய்வது குறித்தும் சிந்தனை செய்தவண்ணம் கண்வளர்ந் தருளுகிறானாம் கருணைக் கடல்.

Koviloor Digital Library

ஆழ்வாரைப்போன்ற ஞானதூதர்களின் வாயிலாக உலகத்தை நல்வழிப்படுத்த இறைவன் விரும்புகிறானாம். தன்னுடைய அவதாரங்களைக் காட்டிலும் ஆழ்வார்களால் உலகத்தைத் திருத்திப் பணிகொள்வது எளிது என்பது இறைவன் திருவுள்ளம் என்று வைஷ்ணவ ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

இறையருளால் உலகத்தை உய்விக்கத் தோன்றியவர் களில் தொண்டரடிப்பொடியாழ்வாரும் ஒருவர். இந்த ஆழ்வார் தமது 'திருப்பள்ளியெழுச்சி'யின் இறுதிப்பாட்டில் 'அடியனை அளியன் என்று அருளி, உன் அடியார்க்கு ஆட்படுத்தாய்' என்று கைங்கரியப் பிரார்த்தனை செய்து கொள்கிறாரல்லவா? அன்பர் பணிசெய்து உலகம் உய்ய இறைவன் திருவுள்ளத்தை நிறைவேற்றி வைக்கும் பொருட்டே ஆழ்வார் தமது கைங்கரியப் பிரார்த்தனையைச் செய்துகொண்டாரெனக் கருதலாம்.

'திருப்பள்ளியெழுச்சி'ப் பாடல்களில் அழகான உதயகால வருணனைகளைக் காண்கிறோம். இயற்கையழகு களும், அன்பர்கள் இறைவனது முகம் காண வந்துநிற்கும் வைபவமும் இப்பாடல்களில் கலந்து குலாவுகின்றன. கட்புலனாகாத தேவர்கள் வந்து வழிபடும் சிறப்பையும் மனோபாவம் நன்கு புலப்பட வருணிக்கிறார் இந்த ஆழ்வார்.

சூரியன் கீழ்த்திசையை அணைந்து, இருளைப் போக்குவதும், அந்த அழகிய காலைப்பொழுதில் தாமரை முதலான மலர்கள் இனிமையாக மலர்வதும் முல்லை மலர்கள் முதலியவற்றை அளைந்து காற்று மனோகரமாக வீசுவதும் நல்ல இயற்கை வருணனைகளாகக் காண்கின்றன இப்பாடல்களில்.

முத்துப் பந்தல் போட்டதுபோல் இருந்த நட்சத்திரங்கள் ஒளி சுருங்கிச் சந்திரனும் ஒளி மழுங்குகிறான். காலைக்காற்று, பசுஞ்சோலைகளில் கமுகின் மடலைக் கீறுவதுபோல் வீசி,

Koviloor Digital Library

அந்த அழகிய பாளைகளின் பரிமளத்தை நுகர்ந்துகொண்டு வருகிறது.

வண்டுகள் ஆரவாரித்துக்கொண்டு கிளம்புகின்றன. பறவைகளும் பூம்பொழில்களில் ஆரவாரம் செய்கின்றன.

மலரணைகளில் பள்ளிகொண்ட அன்னங்கள் பனியில் நனைந்த தங்கள் சிறகுகளை உதறிக்கொண்டு எழுகின்றன.

மேய்ச்சலுக்காக எருமைகளை ஆயர்கள் கட்டவிழ்த்து விடுகிறார்கள். அவர் ஊதுகிற புல்லாங்குழலோசையும் எருதுகளின் கழுத்தில் கட்டியுள்ள மணிகளின் ஓசையும் கலந்து எத்திசையும் பரவி ஒலிக்கின்றன.

இந்த இயற்கைக் காட்சிகளுக்கிடையே, காவிரியில் நீராடிய பெண்கள் தங்கள் கூந்தலைப் பிழிந்து உதறிக்கொண்டு துகிலுடுத்துக் கரையேறுவதையும் வருணிக்கிறார் ஆழ்வார்.

துடியிடையார் சுரிகுழல் பிழிந்(து) உதறித்
துகில்உடுத்(து) ஏறினர், சூழ்புனல் அரங்கா!

(துடி இடையார் - உடுக்கைபோன்ற இடையுள்ள பெண்கள். சுரிகுழல் - சுருண்ட ரோமமுள்ள கூந்தலை.)

சூரியன் மணிநெடுந்தேரில் வருகிறானாம். ஒரு சூரியனா? - பன்னிரண்டு சூரியர்கள் மனக்கண்முன் உதித்து, அழகிய மணவாளனை வழிபட வந்திருக்கிறார்களாம்.

துவாதச ஆதித்தர்களோடு ஏகாதச ருத்திரர்களும் வந்திருக்கிறார்கள். அஷ்டவசுக்கள், மருத்துக்களாகிய ஒன்பது தேவதைகள், தேவேந்திரன், வேறு தேவர்கள், கந்தர்வர், வித்யாதரர், யட்சர், சாரணர், கின்னரர் முதலானவர்களும் வந்திருக்கிறார்களாம் வாகனங்களிலே.

மயில் வாகனத்திலே முருகக் கடவுளும் வந்திருக்கிறார். தும்புருவும் நாரதரும் இசைக்கருவிகளுடன் வந்திருக் கிறார்கள். வானவர்களோடு மாதவர்களும் காணப்படு

Koviloor Digital Library

கிறார்கள். அரசர்களும் வானவர்களோடு போட்டி போட்டுக் கொண்டு திரண்டு வருகிறார்களாம்.

விண்ணும் மண்ணும் சந்திக்கின்றன. அழகிய மணவாளனின் திருக்கண்நோக்கம் பெறுவதற்காக. பண் மயமாய்த் திசைகளும் இசைந்திருக்கின்றன.

வாத்திய கோஷம் சமுத்திர கோஷத்தை நினைவூட்டுகிறது. பாட்டும் கூத்துமாயிருக்கின்றன மண்ணும் விண்ணும்.

'எம்பெருமான் பள்ளி உணர்ந்தவாறே அக்கண்கள் நம்மை முதலில் நோக்கவேணும்' என்ற எண்ணத்துடன் வந்து காத்திருக்கிறார்களாம். 'உன்னுடைய அழகை நாங்கள் கண்டுகளிக்குமாறு நீ பள்ளியுணர்ந்தருளவேணும்' என்று பிரார்த்திக்கிறார்களாம். இவர்களையெல்லாம் கடாட்சிக்க, 'அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாயே' என்கிறார் ஆழ்வார்.

'சிறியார், பெரியார் என்ற வேற்றுமையின்றி இப்படிவந்து படுகாடு கிடக்கிறார்கள். எல்லாரும் வாழும்படி துயிலுணர்ந்தெழுந்து குளிரக் கடாட்சிக்கவேணும்' என்பது திருப்பள்ளியெழுச்சியில் ஆழ்வார் மற்றவர்களுக்காகச் செய்து கொள்ளும் பிரார்த்தனை.

தமக்கோ 'தொண்டரடிப்பொடி' என்ற பெயருக்கிசையத் தொண்டர் பணியைப் பிரார்த்திக்கிறார்.

Koviloor Digital Library

15. முப்பெருந் தொண்டு

(ஒரு வாழ்க்கைப் பெருங்கதை)

'சோழ தேசத்திலே (தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள) மண்டலங்குடியென்ற ஊரைச் சேர்ந்த ஒருவர், காவிரிக் கரையிலுள்ள அவ்வூரை விட்டு, உபயகாவிரிக்கிடையே தேசப் பிரசித்தமாக இருக்கும், தொண்டர்களின் தலைநகரமான, திருவரங்கத்தையே உறைவிடமாகக் கொண்டு, அங்கே நந்தவனப் பணிசெய்து அழகிய மணவாளனை வழிபட்டார்' என்பது இத்தொண்டர் பெருமானின் கதைச் சுருக்கம். வெளிப்படையாக இவ்வளவுதான் இந்தக் கதை.

குருபரம்பரைக் கதைகளைக் கூர்ந்து நோக்கினால், 'திருமண்டங்குடி விப்பிரநாராயணர்' என்று கொண்டாடப் பெற்றவராய்க் குலத்தாலும் கல்வி நலத்தாலும் வைதிக ஆசார சீலத்தாலும் பேர்பெற்றுத் திகழ்ந்தவர்.

குளித்து மூன்(று) அனலை ஓம்பும்
குறிகொள்அந் தணமை தன்னை
ஒளித்திட்டேன்

(அந்தணமை தன்னை - பிராமணனாக இருக்கும் இருப்பை.)

என்றவாறு, அந்தப் பண்டைக் குலத்தைவிட்டுத் தொண்டக்குலத்தினராகிவிட்டகதை இது என்று தெரியவரும்.

'கிராம குலாதிகளால் வரும் பெயர் அநர்த்த ஹேது' என்று துணிந்து, திருமண்டங்குடி விப்பிரநாராயணர் தொண்டக் குலம் புகுந்ததுடன், அங்கும், காந்தியடிகள் தேசத்தொண்டர்களிடம் சொன்னதுபோல், தம்மைப்

Koviloor Digital Library

பூஜ்யமாக்கிக் கொண்டார்; பூஜ்யராகிவிட்டார் இறையருளால்! விப்பிரநாராயணர் தொண்டரானது மட்டுமா? - தொண்டரடிப் பொடியும் ஆகிவிட்ட வாழ்க்கைக் கதையல்லவா இது?

நந்தவனத்திலே இவர் புரிந்த தொண்டு திருமாலைத் தொண்டு. இதைத் 'துளவத் தொண்டு' என்று தமது பிரபந்தமாகிய திருமாலையில் குறிப்பிடுகிறார்.

இவரது பாடல்தொண்டிலும் திருமாலைத் தொண்டு முக்கியமானது. இவர் பூமாலைகள் கட்டியதுபோல் பாமாலைகளும் கட்டினார். கணக்கில்லாத பூமாலைகளைக் கட்டியிருப்பார். பாமாலைகளோ இரண்டே; அளவில் பெரியனவும் அல்ல.

இவரது பூமாலைத் தொண்டுடன், என்றும் வாடாத பாமாலைத் தொண்டுகளான திருமாலைத் தொண்டையும் திருப்பள்ளியெழுச்சித் தொண்டையும் சேர்த்து இத்தொண்டர் பெருமான் முப்பெருந்தொண்டுகள் புரிந்தார் என்று சொல்லலாம். இருவகைப் பாடல்தொண்டிலே இவர் இன்னும் வாழ்கிறார்.

'துளவத் தொண்டாய தொல்சீர்', 'மாதரார் கயற்கண் என்னும் வலையிற்பட்டநிலை', 'சூதனாய்க் கள்வனாகித் தூர்த்தரோடு இசைந்த காலம்', காதல் பக்திக் காதலாக மாறிய காலம், தாம் வழிபட்ட இஷ்டமூர்த்தியைச் சமணர் சாக்கியர் இகழ்ந்தது கண்டு இவர் கொண்ட கோபம், இவரது பக்திக் காதலின் வளர்ச்சி, முதிர்ச்சி, இவரது பக்தியநுபவங்கள், அநுபூதியின் சிகரத்தில் நின்று கிருதயுக புருஷராகி அச்சத்தை அழித்து, வாழ்க்கையில் சுவையை ஊட்டிக்கொண்டு 'பரம பதமும் வேண்டேன்' என்ற நிலை, அரங்கன் திருமுற்றத்திலே பரம பாகவதர்களும் யோகிகளுமான தொண்டர்களைச் சாதிவேற்றுமை கருதாது தெய்வ சமானராகக் கருதி அளவளாவிய நிலை, அவர்களோடு ஆடிப்பாடிக் கலந்து

Koviloor Digital Library

தொண்டாற்றிய நிலை. இவையெல்லாம் மனக்கண்முன் வருகின்றன. இவரது திருமாலைப் பிரபந்தத்தின் வாயிலாக.

மரண பயத்தை அறவே வென்றவர், அநுமன் கடலைக் கடந்ததுபோல் பாபசமுத்திரத்தையும் கலியுகத்தையும் ஒருங்கே கடந்து கரைகண்டவர், 'எனக்கென்று தனியாக ஒரு சக்தியும் கிடையாது, எல்லாம் முதல்வனின் பெயர்விளைத்த சக்திதான்' என்று இவர் கூறுவதும் நம் காதில் விழுகிறது.

'திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை' என்ற பழமொழிக் கிணங்க,

எனக்(கு)இனிக் கதிஎன் சொல்லாய்?

என்று கேட்பதும் காதில் விழுகிறது. இவரை இறையருள், ஸ்ரீவைஷ்ணவம் என்ற பக்திமதத்திற்குக் கதியான பன்னிரண்டு ஆழ்வார்களில் ஒருவராக உயர்த்தி வைத்திருப்பதையும் காண்கிறோம்.

'தொண்டர் அடிப்பொடி' என்று தம்மைத் தாழ்த்திக் கொண்டவரைக் குறித்துப் பக்தர் உலகம், 'இறைவன் அரங்க நகர் - எம்பெருமான் என்றால், இவர் தொண்டரடிப்பொடி - எம்பெருமான்' என்று போற்றத் தொடங்கியதையும் காண்கிறோம்.

★ ★ ★

பிரிட்டிஷ் கடற்படைத் தலைவர் ஒருவரது புதல்வியான மீராபென் அம்மையார் காந்தியடிகளை முதல் முதல் தாம் சந்தித்ததைக் குறிப்பிடும்போது பின்வருமாறு கூறியுள்ளார்: 'எனக்கு அப்போது ஒரே சிந்தனைதான். காந்தியடிகளின் அடியிணையை அடையவேண்டும் என்பது தான் அது. ஆற்றோரத்தில் இருந்த அவர் குடிசைக்குள் நான் நுழைந்தபோது, அங்கே ஒரு பேரொளி வீசுவதைக் கண்டேன். உடனே முழங்காலிட்டுப் பணிந்தேன். அவர் என்னை உயர்த்தி, ''நீ என் புதல்வியாக இருப்பாய்!'' என்றார்.

Koviloor Digital Library

இவரது பிரபந்தங்களுக்குள்ளே புகுந்து பார்த்தால், நாமும் தொண்டரடிப்பொடியாழ்வாரைச் சந்திக்க முடியும். பணிவுடன், பக்தி சிரத்தையுடன் பிரவேசிக்கும்போது, அங்கே தொண்டரடிப்பொடியாழ்வாரின் ஞானஒளி வீசக் காண்போம்.

'வா, இங்கே; அன்பனாக இரு; அன்பர் பணி புரிவாயாக' என்ற இரக்கம் தோய்ந்த குரலையும் கேட்டு, ஆறுதல் பெறுவோம்.

'தொடை, ஒத்த துளவமும் கூடையும் பொலிந்து தோன்றிய தோள் - தொண்டரடிப்பொடி' - துளசி மாலையும் கழுத்துமாய்ப் பூக்கூடையும் தோளுமாய்த் தோன்றும் அந்தப் பழைய தொண்டுக் கோலத்துடன், நமது இன்றயை அணுயுக வாழ்விற்கும் இன்றியமையாத சில அடிப்படை யுண்மைகளைத் தமது வாழ்க்கைப் பெருங்கதையிலிருந்து தேர்ந்தெடுத்துக் காட்டுவார்.

Koviloor Digital Library

16. திருப்பள்ளியெழுச்சி

1. சிற்றஞ் சிறுகாலையில்

கதிரவன் குணதிசைச் சிகரம்வந்(து) அணைந்தான்;
கனைஇருள் அகன்றது; காலையம் பொழுதாய்,
மதுவிரிந்(து) ஒழுகின மாமல ரெல்லாம்;
வானவர் அரசர்கள் வந்துவந்(து) ஈண்டி,
எதிர்திசை நிறைந்தனர்; இவரொடும் புகுந்த
இருகளிற்(று) ஈட்டமும் பிடியொடு முரசும்
அதிர்தலில், அலைகடல் போன்(று) உள(து) எங்கும்;
அரங்கத்தம் மா! பள்ளி யெழுந்தரு ளாயே.

(கதிரவன் - சூரியன். குணதிசை - கிழக்குத் திசையில். சிகரம் - உச்சியில்; உதயகிரியின் சிகரத்தில். வந்து அணைந்தான் - வந்து கூடினான். கனை இருள் - அடர்ந்திருந்த இருட்டு. அகன்றது - நீங்கியது. காலை அம்பொழுதாய் - அழகிய காலைப்பொழுது ஆக. மது - தேன். மாமலர் - சிறந்த மலர்கள். வானவர் அரசர்கள் - தேவர்களோடு மண்ணுலகத்து அரசர்களும். எதிர்திசை - ஸ்ரீரங்கநாதனது கண்ணோக்கம் படுகிற தெற்குத் திக்கிலே. இருங்களிறு ஈட்டமும் - பெரிய ஆண் யானைகளின் கூட்டமும். பிடியொடு - பெண் யானைகளோடு. அதிர்தலில் - ஒலி செய்வதால். அம்மா - (இங்கே) சுவாமியே.)

குறிப்பு :

காலைப்பொழுதின் இயற்கை வர்ணனை முதல் மூன்று அடிகளில் காணப்படுகிறது.

Koviloor Digital Library

'கதிரவன் குணதிசைச் சிகரம்வந் தணைந்தான்' என்று தொடங்கும் திருப்பள்ளியெழுச்சிப் பாடல்களைப் பூபாள ராகத்தில் பாடுவதை மார்கழி மாதத்தில் தமிழர்கள் அனைவரும் கேட்டுக் கேட்டு இன்புற்றிருப்பார்கள்.

ஆற அமரப் பாடிப் பாடி அநுபவிக்க வேண்டிய இன்னிசைத் தமிழ்ப் பாடல்கள்.

2. கஜேந்திரனைக் காத்ததுபோல்

கொழுங்கொடி முல்லையின் கொழுமலர் அணவிக்
கூர்ந்தது குணதிசை மாருதம் இதுவோ;
எழுந்தன மலரணைப் பள்ளிகொள் அன்னம்
ஈன்பனி நனைந்ததம இருஞ்சிற(கு) உதறி;
விழுங்கிய முதலையின் பிலம்புரை பேழ்வாய்
வெள்ளெயிறு உறஅதன் விடத்தினுக்(கு) அனுங்கி
அழுங்கிய ஆனையின் அருந்துயர் கெடுத்த
அரங்கத்தம் மா! பள்ளி யெழுந்தரு ளாயே.

(கொழுங்கொடி - செழுமை தங்கிய கொடி. கொழு மலர் - அழகிய மலர்கள். அணவி - அணைந்து. கூர்ந்தது - வீசியது. மாருதம் - காற்று. இதுவோ - இதோ. மலர் அணை - பூம்படுக்கை. ஈன்பனி - பெய்கிற பனியிலே. இருஞ்சிறகு - அழகிய சிறகுகளை. விழுங்கிய - (இங்கே) காலைப் பற்றிக்கொண்ட. பிலம்புரை - பிலத்துவாரத்தை ஒத்த. பேழ்வாய் - பெரிய வாயிலுள்ள. வெள்ளெயிறு உற - வெளுத்த கோரப்பற்கள் ஊன்ற. விடத்தினுக்கு - விஷத்திற்கு. அனுங்கி அழுங்கிய - மிகவும் நோவுபட்ட.)

குறிப்பு :

முதல் நான்கு அடிகளில் காலைப்பொழுதின் இயற்கை வருணனை. பாட்டின் பிற்பகுதியில், ஆனையின் அருந்துயர் தீர்த்த புராணக் கதை.

Koviloor Digital Library

'யானையை அன்று ஆபத்திலிருந்து காத்தருளிய கருணை, இன்று எங்களைக் காக்க வேணும்; அதற்காகப் பள்ளியெழுந்தருளவேண்டும்' என்பது கருத்து.

3. கையும் ஆழியுமாக

சுடரொளி பரந்தன சூழ்திசை யெல்லாம்;
துன்னிய தாரகை மின்னொளி சுருங்கி,
படர்ஒளி பசுத்தனன் பனிமதி இவனோ;
பாய்இருள் அகன்றது; பைம்பொழில் கமுகின்
மடலிடைக் கீறிவண் பாளைகள் நாற
வைகறை கூர்ந்தது மாருதம் இதுவோ;
அடல்ஒளி திகழ்தரு திகிரிஅந் தடக்கை
அரங்கத்தம் மா! பள்ளி யெழுந்தரு ளாயே.

(சுடர் ஒளி பரந்தன - சுடர்வீசி ஒளிக்கதிர்கள் பரவிவிட்டன. சூழ்திசையெல்லாம் - சூழ்ந்திருக்கும் திசைகளில் எல்லாம். துன்னிய - நெருங்கிய. தாரகை - நட்சத்திரங்களின். மின்னொளி - மின்னுகிற ஒளி. படர் ஒளி - படர்ந்த ஒளி. பசுத்தனன் - மழுங்கினான். பனிமதி - குளிர்ந்த சந்திரன். பாய்இருள் - பரவி இருந்த இருட்டு. பைம்பொழில் கமுகின் - பசுஞ்சோலைகளிலுள்ள கமுகுகளின். வண்பாளை கள் நாற - அழகிய பாளைகள் தோன்ற. வைகறை மாருதம் - காலைக்காற்று. அடல் - வலிமையுள்ள. ஒளிதிகழ்தரு - ஒளிவிளங்குகிற. திகிரி - திருவாழி என்ற சக்கராயுதத்தை. அம் தடக்கை - அழகிய பெரிய கையிலே உடைய.

குறிப்பு:

கீழ்த்திசையில் வந்தணைந்த கதிரவன் இப்பொழுது நேராக உதித்துத் தனது கிரணங்களை எங்கும் பரப்பிக் கொண்டிருக்கிறான். சந்திரன் பகல் விளக்கு ஆகிவிட்டான். நட்சத்திரங்கள் ஒளிகுன்றி மறைந்துவிட்டன. கமுகஞ்

Koviloor Digital Library

சோலைகளில் மடல் விரிந்த பாளையில் மோதி அந்த மணத்தையும் கொண்டு காலைக் காற்று வீசுகிறதாம். வசீகரமான இயற்கை வருணனை.

4. அயோத்தி அரசே அரங்கன்

மேட்டிள மேதிகள் தளைவிடும் ஆயர்கள்
வேய்ங்குழல் ஓசையும், விடைமணிக் குரலும்
ஈட்டிய இசைதிசை பரந்தன வயலுள்
இரிந்தன சுரும்பினம்; இலங்கையர் குலத்தை
வாட்டிய வரிசிலை வானவர் ஏறே!
மாமுனி வேள்வியைக் காத்(து)அவ பிரதம்
ஆட்டிய அடுதிறல் அயோத்திஎம் அரசே!
அரங்கத்தம் மா! பள்ளி யெழுந்தரு ளாயே.

(மேடுஇள மேதிகள் - ஓங்கி வளர்ந்த இளமையான எருமைகள். தளைவிடும் - கட்டவிழ்த்துவிடுகிற. விடை மணிக்குரலும் - எருதுகளின் கழுத்தில் கட்டியிருக்கும் மணிகளின் ஓசையும். ஈட்டிய இசை - சேர்ந்த இனிமையான ஓசை. இரிந்தன - அங்கும் இங்கும் பறந்தன. சுரும்பு இனம் - வண்டுகளின் கூட்டம். இலங்கையர் குலத்தை - அரக்கர் கூட்டத்தை. வாட்டிய - அழித்த. வரிசிலை - கட்டமைந்த வில்லையுடைய. வானவர் ஏறே - தேவர்கள் சிங்கமே. மாமுனி - விசுவாமித்திர மகரிஷியின். வேள்வியை - யாகத்தை. அவபிரதம் - அவப்ருத ஸ்நானம். வேள்விகளின் முடிவில் செய்யும் ஸ்நானம். ஆட்டிய - ஆடச்செய்த, நீராடச்செய்த. அடுதிறல் - (எதிரிகளை) அழிக்கவல்ல திறமை.)

புல்லாங்குழல் இசையுடன் காளைமாடுகளின் மணியோசையும் இசைந்து ஓர் இனிமையான நாதமாக வருகிறதாம்.

இந்தப் பாட்டிலே, மேய்ச்சலுக்குப் போகும் எருமை மாடுகளைப் பார்க்கிறோம்; கம்பீரமாக மணிகள் கணகண

Koviloor Digital Library

வென்றொலிக்க, நடந்துபோகும் காளைமாடுகளையும் காண்கிறோம்.

சாதுக்களுக்காகப் படாதபாடுபட்ட பெருமான், இன்று எங்களுக்காகவும் சற்றுக் கருணை காட்டவும் என்பது குறிப்பு.

5. இலங்கையர் கோனுக்கும் எம்பெருமான்

புலம்பின புட்களும் பூம்பொழில் களின்வாய்;
போயிற்றுக் கங்குல்; புகுந்தது புலரி;
கலந்து குணதிசைக் கனைகடல் அரவம்;
களிவண்டு மிழற்றிய கலம்பகம் புனைந்த
அலங்கலர் தொடையல்கொண்(டு) அடியிணை பணிவான்
அமரர்கள் புகுந்தனர்; ஆதலில் அம்மா!
இலங்கையர் கோன்வழி பாடுசெய் கோயில்
எம்பெரு மான்! பள்ளி யெழுந்தரு ளாயே.

(புலம்பின - ஆரவாரம் செய்கின்றன. புட்களும் - பறவைகளும். பூம்பொழில்களின் வாய் - பூஞ்சோலைகளில். கங்குல் - இரவு. புலரி - காலைவேளை. கனைகடல் - பெருஞ் சத்தம் செய்கிற கடல். அரவம் - ஓசை. களிவண்டு - தேனைப்பருகிக் களிக்கின்ற வண்டுகள். மிழற்றிய - ரீங்காரம் செய்கிற. கலம்பகம் புனைந்த - பலவிதப் பூக்களால் கதம்பமாகத் தொடுத்த. அலங்கல் அம் தொடையல் - அழகிய பூமாலைகள். அடியிணைபணிவான் - இரண்டு திருவடி களிலும் பணிந்து அம்மாலைகளைச் சாத்தும் பொருட்டு. அமரர்கள் - தேவர்கள். இலங்கையர் கோன் - (இங்கே) விபீஷணன்.)

முந்திய பாட்டில், வயல்களுக்குப் பக்கத்தில் வண்டுகள் எழுந்து ஆரவாரித்தது குறிக்கப்பட்டது. இப்பாட்டில், பொழுது விடிந்ததையும் அறியமுடியாத வாய்ப்பான

Koviloor Digital Library

சோலையில் உறங்கிக்கொண்டிருந்த பறவைகளும் துயிலுணர்ந்து ஒலி செய்வதையும் குறிப்பிடுகிறார்.

வயலுக்கருகே உள்ள வண்டுகள் துயில் உணர்ந்தது பக்தர்களின் உணர்ச்சிக்கு அறிகுறியென்றும், பூம்பொழில்களில் பறவைகள் உணர்ந்தது சம்சாரிகளின் விழிப்பிற்கு அறிகுறி என்றும் கூறுவர் பெரியவாச்சான் பிள்ளை.

6. தேவர்களெல்லாம் ஆடலும் பாடலுமாய்

இரவியர் மணிநெடுந் தேரொடும் இவரோ;
இறையவர் பதினொரு விடையரும் இவரோ;
மருவிய மயிலினன் அறுமுகன் இவனோ;
மருதரும் வசுக்களும் வந்து வந்(து) ஈண்டி,
புரவியோ(டு) ஆடலும் பாடலும் தேரும்
குமரதண் டம்புகுந்(து) ஈண்டிய வெள்ளம்
அருவரை அனையநின் கோயில்முன் இவரோ;
அரங்கத்தம் மா! பள்ளி யெழுந்தரு ளாயே;

(இரவியர் - சூரியர்கள். மணிநெடுந் தேரொடும் - அழகிய பெரிய தேரோடும். இறையவர் - தலைவர்களான. விடையரும் - ருத்திரர்களும். மருவிய - பொருந்திய. மயிலினன் அறுமுகன் - மயில்வாகனனாகிய ஆறுமுகப் பெருமானும். மருதரும் - மருத்துக்களாகிய தேவதைகளும். வசுக்களும் - அஷ்டவசுக்களும். ஈண்டி - நெருங்கி நிற்க. புரவியோடு - குதிரையோடு. குமர தண்டம் புகுந்து - தேவசேனைகளும் தங்கள் ஆயுதங்களுடன் வந்து. அருவரை அனைய - பெரிய மலைபோன்ற.)

'நான்முற்பட நான்முற்பட' என்று திரண்டு வந்து நிற்கிறார்களாம் ஒரே குதூகலமாக. திருப்பள்ளியுணர்ந்து பகவான் அவர்கள் அனைவரையும் கடைக்கணித்து அருளவேண்டும் என்பது ஆழ்வாரின் வேண்டுகோள்.

Koviloor Digital Library

7. விண்ணும் மண்ணும் நெருங்குகின்றன!

அந்தரத்து அமரர்கள் கூட்டங்கள் இவையோ;
அருந்தவ முனிவரும் மருதரு மிவரோ;
இந்திரன் ஆனையும் தானும்வந்(து) இவனோ;
எம்பெரு மான்உன் கோயிலின் வாசல்
சுந்தரர் நெருக்க, விச் சாதரர் நூக்க.
இயக்கரும் மயங்கினர் திருவடி தொழுவான்;
அந்தரம் பார்இடம் இல்லைமற்(று) இதுவோ;
அரங்கத்தம் மா! பள்ளி யெழுந்தரு ளாயே.

(உன் கோயிலின் - உன்னுடைய கோயிலின் வாசலிலே. சுந்தரர் - அழகிய கந்தர்வர்கள். விச்சாதரர் - வித்யாதரர்கள். நூக்க - தள்ள. இயக்கர் - யக்ஷர்கள். தொழுவான் - தொழுவதற்காக. அந்தரம் - ஆகாசம். பார் - பூமி.)

முனிவர்களும் மருதர்களும் யக்ஷர்களும் வந்து புகும்போது, அவர்களுக்கிடையே வேறொரு கூட்டமும் நெருக்கித் தள்ளுகிறதாம். இந்தக் கூட்டத்திலே அழகிய கந்தருவர்களும் வித்தியாதரர்களும் காணப்படுகிறார்கள். கந்தருவர்கள்நெருக்க, வித்யாதரர்கள் இடித்துத் தள்ளிக்கொண்டு வருகிறார்களாம்.

பகவானுடைய தரிசனம் பெறுவதற்காக இவ்வளவு ஆத்திரம். அறிதுயில் அமர்ந்திருப்பவன் கடைக்கணிப்பிலே விண்ணும் மண்ணும் ஒருமித்துப் பேறு பெறுகின்றனவாம்.

8. புறஇருள் நீங்கி அக இருள் நீங்குகிறது

வம்(பு)அவிழ் வானவர் வாயுறை வழங்க,
மாநிதி கபிலைஒண் கண்ணாடி முதலா,
எம்பெரு மான்படி மைக்கலம் காண்டற்(கு)
ஏற்பன ஆயின கொண்டுநல் முனிவர்

Koviloor Digital Library

தும்புரு நாரதர் புகுந்தனர் இவரோ;
தோன்றினை இரவியும் துலங்(கு)ஒளி பரப்பி
அம்பர தலத்தில்நின்(று) அகல்கின்ற(து) இருள்போய்;
அரங்கத்தம் மா!பள்ளி யெழுந்தரு ளாயே.

(வம்பு அவிழ் - வாசனை மிகுந்த. வாயுறை - (இங்கே) அருகம்புல். மாநிதி - சிறந்த நிதிகள். கபிலை - காமதேனு. ஒண்கண்ணாடி - ஒளிபொருந்திய கண்ணாடி. முதலா - முதலாக. படிமைக்கலம் - ஆராதன உபகரணங்கள். காண்டற்கு - காண்பதற்கு. துலங்கு ஒளி - மிக்க ஒளி. அம்பரதலத்தில் நின்று - ஆகாசத்தில் இருந்து.)

வானவர்கள் என்றும் இளமையோடு இருப்பதால் 'வம்பு அவிழ் வானவர்' என்று சொல்லப்படுகிறார்கள். பரிமளம் என்பது இங்கே இளமையைச் சுட்டிக் காட்டுகிறது.

உலகத்தைச் சூழ்ந்திருந்த இருள் சூரியனைக் கண்டு விலகுவது போல், ஞான சூரியனாகிய இறைவனுக்குமுன் அகஇருள் நீங்கிற்று. சூரியன் ஒளி பரப்புவதால் உலக இருள் நீங்க, அகஇருளோ இறைவன் அருளைப் பெறவேண்டும் என்கிற ஆசையினாலேயே போய்விடுகிறதாம்.

9. எல்லாரையும் குளிர நோக்குவது

ஏதம்இல் தண்ணுமை எக்கம் மத்தளி
யாழ்குழல் முழவமோ(டு) இசைதிசை கெழுமிக்
கீதங்கள் பாடினர் கின்னரர் கருடர்கள்
கெந்தரு வரும்இவர், கங்குலும் எல்லாம்,
மாதவர் வானவர் சாரணர் இயக்கர்
சித்தரும் மயங்கினர் திருவடி தொழுவான்;
ஆதலில் அவர்க்குநான் ஓலக்கம் அருள,
அரங்கத்தம் மா! பள்ளியெழுந்தரு ளாயே.

Koviloor Digital Library

(ஏதம் இல் - குற்றமற்ற. தண்ணுமை - சிறு பறை. எக்கம் - தாளம். மத்தளி - மத்தளம். முழவமோடு - முழக்கத்தோடு. கெழுமி - எழும்புமாறு. நாள் - பகல். இங்கே காலைப் பொழுதல். ஓலக்கம் - சிங்காசனத்திலே சிறப்பாகக் கொலு விருந்து எல்லாரையும் குளிரக்காணும் சபை.)

எக்கம் என்பதற்கு ஒற்றைத் தந்தியுள்ள ஒரு வாத்தியம் என்றும் பொருள் கூறுவர். முழவம் என்பதையும் ஒருவகை வாத்தியம் என்பர். இந்த வாத்தியத்திற்குப் பெருவாயன் என்ற பெயரும் உண்டு என்று சொல்கிறார்கள்.

பகவான் துயிலுணர்ந்து எழுந்து வந்து சிங்காசனத்தில் அமர்ந்து சபைகூட்டி எல்லாரையும் குளிர நோக்கி அருள வேண்டும் என்பது ஆழ்வாரின் ஆசை.

10. தமக்காகவும் ஒரு பிரார்த்தனை

கடிமலர்க் கமலங்கள் மலர்ந்தன இவையோ;
கதிரவன் கனைகடல் முளைத்தனன் இவனோ;
துடிஇடை யார்சுரி குழல்பிழிந்(து) உதறித்
துகில்உடுத்(து) ஏறினர்; சூழ்புனல் அரங்கா!
தொடைஒத்த துளவமும் கூடையும் பொலிந்து
தோன்றிய தோள்தொண்டர் அடிப்பொடி என்னும்
அடியனை அளியன் என்(று) அருளி, உன் அடியார்க்(கு)
ஆட்படுத் தாய்; பள்ளி எழுந்தரு ளாயே.

(கடிமலர்க் கமலங்கள் - வாசனையுள்ள கமலங்கள். துடிஇடையார் - உடுக்கை போன்ற இடையை உடைய பெண்கள். சுரி குழல் - சுருண்ட கூந்தல். துகில் - ஆடை. சூழ்புனல் அரங்கா - காவேரி நதியால் சூழப்பட்ட திருவரங்கத்தில் கோயில் கொண்டிருக்கும் பெருமானே. தொடை ஒத்த துளபமும் - ஒழுங்காகத் தொடுக்கப்பெற்ற துளசிமாலையும். பொலிந்து - விளங்கி. அளியன் - கருணை காட்டுவதற்கு உரியவன். ஆட்படுத்தாய் - ஆளாக்க வேணும்.)

Koviloor Digital Library

திருப்பள்ளியெழுச்சியின் இறுதிப்பாட்டாகிய இது, இந்தச் சிறு பிரபந்தத்தின் சிகரமாகவே அமைந்துவிடுகிறது. இங்கே தொண்டர்களுக்குப் பணி செய்யவேண்டும் என்ற பிரார்த்தனை - இவர் பெயருக்கும் ஆசைக்கும் பொருத்தமான வேண்டுகோள் - வெகு விநயமாக உசிதமாக வெளியிடப் பெறுகின்றது.

Koviloor Digital Library

விபரங்களுக்கு

KOVILOOR ANDAVAR
LIBRARY. KOVILOOR
26734